# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 05 கார்த்திகை 15ஆம் நாள் சனிக்கிழமை 01 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## பெற்றோல், டீசல் விலைக் குறைப்பு

கொழும்பு, டிசெ. 1
எரிபொருள் விலை நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. பெற்றோல் >> 25

# தலைமை அமைச்சரை நியமிக்கக் கோரும் தீர்மானத்தை சபையில் நிறைவேற்றுங்கள்

## உரிய நடவடிக்கையை எடுப்பேன் என்று கூட்டமைப்பிடம் மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 1

நாட்டில் தலைமை அமைச்சர், அமைச்சரவை, அரசு இல்லாத நிலமை காணப்படுகின்றது. புதிய தலைமை அமைச்சர் ஒருவரை நியமிக்கக் கோரும் தீர்மானத்தை, நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி நிறைவேற்றுங்கள். அந்தத் தீர்மானம் வெற்றி பெற்றால், அரச தலைவராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்பேன். மகிந்த ராஜபக்சவும் அதற்கு அமைவாகச் செயற்படுவார். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் அரச தலைவர் செயலகத்தில் நேற்று இரவு 7.30 மணியிலிருந்து 8.40 மணி வரை சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நாங்கள் மகிந்த ராஜபக்சவுக்கு >> 25



அரசியல் கைதிகள் விவகாரம்

## திங்களன்று மைத்திரி கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு, டிசெ. 1
தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 25

## ஐ.தே.மு. - மைத்திரி சந்திப்பில் முடிவில்லை

நாளை மீண்டும் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 1
அரச தலைவருக்கும், எங்களுக்கும் இடையிலான சந்திப்பு முன்னேற்றமானதாக இருந்தது. எனினும் >> 24

## நாட்டின் நலன்சார்ந்தே முடிவு; அரசின் பங்காளிகள் அல்லர்

கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1
நாட்டின் நலன் தொடர்பில் எதிர்க்கட்சிக்குள்ள அக்கறையின்படியே ஐக்கிய தேசிய >> 25

## மகிந்த - ரணில் நேற்றுச் சந்திப்பு

நட்புரீதியான கலந்துரையாடலே நடந்ததாக தகவல் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1
தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், நாடாளுமன்ற நூலகத்தில் நேற்று திடீர் சந்திப்பை >> 06

## எங்களின் ஆட்சியை கலைக்கவே முடியாது

மைத்திரி முன்பாக மகிந்த முழக்கம்

கொழும்பு, டிசெ. 1
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்துக்கு ஆதரவாக நானும், இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களும் உள்ளார்கள். உங்களின் தீர்மானத்தை நாங்கள் பாதுகாப்போம். இப்போது நடக்கும் விடயங்களைப் >> 23

## வாள்களுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 1
கோப்பாய், கொக்குவில், சுன்னாகம், வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூன்று பேர் யாழ்ப்பாண மாவட்ட சிறப்புக் குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து சுமார் 3 அடி நீள >> 24

## மட்டக்களப்பில் நேற்று அதிகாலை பொலிஸார் இருவர் சுட்டுக் கொலை

கைகள் கட்டப்பட்டிருந்தது துப்பாக்கிகள் 'அபேஸ்' >> 23

## 8 மாதக் குழந்தை சடலமாக மீட்பு

வவுனியா, டிசெ. 1
வவுனியா வடக்கு எல்லைக் கிராமமான ஊஞ்சல்கட்டிப் பகுதியில் எட்டு மாதக் குழந்தை கிணற்றிலிருந்து >> 24

## மகிந்தவுக்கு எதிரான வழக்கு திங்களன்று

கொழும்பு, டிசெ. 1
அரச தலைவரால் நியமிக்கப்பட்டுள்ள புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சரவைக்குப் பதவியில் இருப்பதற்கு சட்டரீதியாக அனுமதியில்லை என்றும், >> 06

## கிழக்கில் கருணா, வடக்கில் நடிகர் பாணியில் ஒருவர்

வவுணதீவில் பொலிஸார் கொலை தொடர்பில் சபையில் கருத்துக்கள்

கொழும்பு, டிசெ. 1
மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸார் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் கருணா அம்மான் இருக்கின்றார் என்ற சந்தேகம் இருக்கின்றது. >> 06

## வீட்டில் சிசுவைப் புதைத்த குற்றச்சாட்டில் தந்தை கைது

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிசெ. 1
வீட்டில் பிரசவித்த ஆறு மாத சிசுவை மண்ணில் புதைத்த குற்றச்சாட்டில் தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள் >> 24

## மாவீரர் தினம் தொடர்பில் இனவாதிகள் மௌனம்

கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 1
கடந்த காலங்களில் வடக்கில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டால் தங்களைத் தேசப்பற்றாளர்களாகக் காட்டிக் கொள்பவர்கள் கூச்சலிடுவார்கள். ஆனால் இம்முறை மௌனம் >> 06

see more news in newuthayan.com

## ஐ.தே.முக்கு ஆதரவு வழங்கி கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துவிட்டது

மகிந்த அணி நீலிக் கண்ணீர்

கொழும்பு, டிசெ. 1
வடகிழக்கில் எந்த அபிவிருத்தியையும் முன்னெடுக்காத ஐக்கியதேசிய முன்னணிக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராகவும், ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாகவுமே கூட்டமைப்பு செயற்படுகின்றது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற >> 06

## மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்படும் மகிந்த

அமைச்சுகளுக்கு நிதி 'கட்'

கொழும்பு, டிசெ. 1
அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பணியாள் தொகுதியினரின் செலவினங்களை அனுமதிப்பதற்கு அமைச்சுக்களின் செயலர் >> 06

# பதவி விலகும் அவசியமில்லை

## மகிந்த ராஜபக்ச விடாப்பிடி

கொழும்பு, டிசெ.1

தலைமை அமைச்சர் பதவியை விட்டு நான் விலகிவிட்டேனா என்று பலர் கேட்கின்றனர். நான் விலக வேண்டிய அவசியம் கிடையாது. இவ்வாறு மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்றுப் புறக்கணித்தது. நாடாளுமன்ற வளாகத்தில் அந்தக் கட்சியின் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது;

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு வந்த பின்னர் பார்ப்போம். இதே நிலைப்பாட்டில் தான் அரச தலைவர் உள்ளார். நாடாளுமன்றத்தில் நடைபெறும் அநீதிகளை மக்களுக்கு எடுத்துக்காட்ட நாடளாவிய ரீதியில் நாங்கள் மக்கள் சக்தி போராட்டங்களை நடத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்குத் தயாராக வேண்டும் - என்றார். (5)

# அரச ஊழியர் சம்பளத்துக்கு பாதிப்புகள் ஏதும் ஏற்படாது

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் அரச உதவிகள் என்பன துண்டிக்கப்பட மாட்டாது என ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது. அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதித்து நேற்று நாடாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் அரச நிதியை அமைச்சுக்கள் பயன்படுத்துவது நேற்று முதல் தடை செய்யப்படுகின்றது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற)

# தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.முன்னணி தயார்

## மனோ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.1

ஐக்கிய தேசிய முன்னணி எந்த தேர்தலுக்கும் தயாராக இருக்கின்றது. அந்த தேர்தல் ஒக்ரோபர் 26 ஆம் திகதி முன்னர் இருந்த நிலைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

தேர்தல் நடத்தப்படும் போது இடைக்கால அரசை நடத்திச் செல்வது சிரமமானது.

ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னரான நிலமையில், பொதுத் தேர்தலோ, அரச தலைவர் தேர்தலோ அல்லது மாகாண சபைத் தேர்தலோ எதுவாக இருந்தாலும் அதற்கு ஐக்கிய தேசிய முன்னணி தயாராக இருக்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி எந்த தேர்தலையும் ஒத்திவைக்கவில்லை. கூட்டரசில் அங்கம் வகித்த சிறி லங்கா சுதந்திரக் கட்சியே தேர்தல் நடத்துவதைத் தடுத்தது - என்றார். (ற)

# எந்தக் கட்சிகளினதும் கைப்பொம்மை அல்ல

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

எமது கட்சி எந்த ஒரு கட்சியினதும் கைப்பொம்மை அல்ல என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளிக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற கருத்துக்களில் இருந்து யார்? யாருக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் விடுதலை முன்னணியைச் சுற்றியே ஏனைய கட்சிகள் வலம்வருகின்றன.

மற்றுமொரு கட்சியால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதற்கு ஆதரவளிப்பது, ஏனையவர்களுக்கு துணை போவதாக அமைவதாலேயே தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாமே கொண்டு வந்தோம் - என்றார். (ற)

# எந்தத் தீர்ப்பு வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

நீதிமன்றத்தில் எந்த தீர்ப்பு வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

நாடாளுமன்றில் கத்தி கொண்டு வருகிறார்கள். அதைப் பற்றி எவரும் கதைக்கவில்லை. நிலையியல் கட்டளைகளை மீறுகிறார்கள். அதைப்பற்றிக் கதைக்கவில்லை.

இப்போது நாம் நீதிமன்றத் தீர்ப்பைத்தான் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம். நாம் உயர்நீதிமன்றத்தை மதிக்கிறவர்கள். செங்கோலை வைத்துக்கொண்டு இவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் எந்த தீர்ப்பு வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம். 26 ஆம் திகதி நாம் மக்களுக்கான பயணத்தை ஆரம்பித்தோம். மக்கள் எமக்கான ஒத்துழைப்புக்களை தந்து கொண்டிருக்க வேண்டும் - என்றார். (ற)

# சரணாகதி அடையாது சந்தர்ப்பத்தைப் பாவியுங்கள் கூட்டமைப்புக்கு அறிவுரை கூறுகிறார் தவராசா

யாழ்ப்பாணம், டிசெ.1

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ப்பதற்குச் சாதுரியமாகப் பாவித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா. நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

தற்போது இலங்கையின் அரசைத் தீர்மானிக்கின்ற சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது. 14 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பானது சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சாதுரியமாகப் பாவித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவர்களின் தலையாய கடமை ஆகும்.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நிலைப்பாடு இராஜதந்திரமா அல்லது ஓர் சரணாகதி அரசியலா என்ற கேள்வியை எழுப்பி உள்ளது. கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் "இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேரந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கடந்த 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த ஐ.தே.மு தலைமையிலான அரசை மீளமைப்பதற்கு ஆதரவளிப்போம் என்பதோடு ஐ.தே.முன்னணியால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறக் கூடியவர் என நீங்கள் கருதும் நபரைப் பிரதமமந்திரியாக நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அவர்களின் செயற்பாடு இதுதான் முதற் தடவை அல்ல. கடந்த ஏப்ரல் மாதத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதே போல ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்திலும் கூட கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இந்தச் சூழலைப் பாவித்து எமது அடிப்படை அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஓர் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான உறுதிப்பாட்டை ஐ.தே.மு. அல்லது ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஓர் கோரிக்கையாகவே அமையும். அரசமைப்பு மாற்றத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தேவை ஏற்படும் பட்சத்தில் பொதுவாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டியிருக்கும்.

ஆனால், நிர்வாக ரீதியாகவும், நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ விடயங்கள் உள்ளன. தற்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன தமிழர் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்பன 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மீறிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாகாண சபைக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறாக இருப்பது அரசமைப்பின் சரத்துகள் அல்ல, மாறாக மாகாண சபைகள் சட்டம் ஆகும். மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை இல்லை. சாதாரண பெரும்பான்மையுடன் திருத்தி அமைக்கலாம். இவற்றுக்கு மேலாக அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர் தொடர்பான விடயங்கள், படையினர்வசமிருக்கும் அரசகாணிகளை விடுவிப்பது என்பனவும் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டிய அரசியல் வேலைத் திட்டங்கள் ஆகும்.

இவ்வாறாக நடைமுறையில் செயற்படுத்தக் கூடிய விடயங்களிலாவது ஐ.தே.முன்னணியிடமிருந்து உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறையுடனான நிபந்தனையுடன் ஆதரவை வழங்குவது அல்லது இவ்விடயங்களை ஐ.தே.முன்னணிக்கும், மகிந்த தரப்பினருக்கும் பிரஸ்தாபித்து யார் கூடிய விடயங்களைச் செயற்படுத்துவதற்கு உறுதிப்பாட்டைத் தருகின்றார்களோ அவர்களுக்கு ஆதரவு வழங்குவதே தமிழ் மக்களின் நலன் சார்ந்து செயற்படுவதாக அமையும். அவ்விரு தலைவர்களும் எவ்வித உறுதிபாட்டையும் தர மறுக்கின்ற சந்தர்ப்பத்தில் பக்கச்சார்பற்று செயற்படுவதே தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்திச் செயற்படுவதாக அமையும்.

இன்று ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்ற கோசம் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனாலேயே ஐ.தே.முன்னணிக்கு ஆதரவை வழங்கி ஜனநாயகத்தைப் பாதுகாத்தோம் என்று கூட்டமைப்பும் பெருமிதமடைகின்றது. எம் நாட்டில் ஜனநாயகம் என்பது பெரும்பான்மை இனத்தவர்களின் ஜனநாயகமாகவே தற்போதுவரை காணப்படுகின்றது. சகல இனத்தவர்களையும் உள்ளடக்குகின்ற ஜனநாயகம் நாட்டில் இருந்திருக்குமேயானால் இவ்வளவு பிரச்சினைகளையும், அழிவுகளையும் சந்தித்திருக்க வேண்டிய தேவையில்லை. ஆகவே நாம் யாரின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற விடயமும் இன்று கேள்விக் குறியாகவே அமைகின்றது.

பெரும்பான்மை இன மக்களின் ஜனநாயகத்தையும், பெரும்பான்மையின மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி வரையப்பட்டிருக்கும் அரசமைப்பையும், பெரும்பான்மையின மக்களின் நலன்களையும் முன்னிலைப்படுத்திச் செயற்படும் சட்டம் ஒழுங்கு நிர்வாகக் கட்டமைப்பையும் பாதுகாப்பதை முன்னிலைப்படுத்தாது தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டடைப்பு செயற்படுதலே சாலச் சிறந்ததாக அமையும். - என்றுள்ளது. (ற)

# அழிவுகள் அனைத்துக்கும் அரச தலைவரே பொறுப்பு

## முதலில் அரச தலைவர் தேர்தலை நடத்துங்கள் என்கிறார் சம்பிக்க


**கொழும்பு, டிசெ.1**
**சூழ்ச்சியால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து அழிவுகளுக்கும் அரச தலைவரே பொறுப்பு. முதலில் அரச தலைவர் தேர்தலை நடத்தி மக்களின் கருத்தை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நேற்று நாடாளுமன்றில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இரத்துச் செய்யக் கோரும் தீரமானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

அரசமைப்பின்படி சட்டங்களை உருவாக்கும் மற்றும் அதிகாரங்கள் உயரிய சபையான நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே உள்ளது. சட்டவிரோத மகிந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மாணம்நிறைவேற்றப்பட்ட பின்னர் முழு நிதி அதிகாரமும் நாடாளுமன்றத்தின் வசமே உள்ளது.

நிதி அமைச்சராகச் செயற்பட்ட மகிந்த இனிமேல் நிதியைப் பயன்படுத்த முடியாது. பயன்படுத்தினால் அது மக்கள் ஆணைக்கு எதிரானது. சபாநாயகர் கட்சி சார்பாகச் செயற்படுவதாகச் சில குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்படுகின்றன. ஆனால் மகிந்த அரசு சட்டவிரோதமானது என்று நாங்கள் கூறியபோதும் சபாநாயகர் மகிந்த அரசுக்கான சிறப்புரிமைகளைச் சபையில் ஏற்படுத்திக்



கொடுத்தார். ஆனால் மகிந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசும், அமைச்சரவையும் கலைந்து விட்டது.

அரச தலைவரின் தனிப்பட்ட எண்ணித்தில் தலைமை அமைச்சரை நியமிக்க முடியாது. நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் உள்ளவரையே தலைமை அமைச்சராக நியமிக்க முடியும். தலைமை அமைச்சர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசமைப்பில் தெளிவாகக் கூறப்படவில்லை என்றாலும், நீக்குவது தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அமைச்சரவையில் ஒரு சூழ்ச்சி இடம் பெற்ற ஒரு மாதத்தில் எமது 10 ஆண்டுகளுக்கான பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் இந்த அரசியல் சூழ்ச்சியால் ஏற்பட்ட இழப்புக்குப் பயன்படுத்த வேண்டிய நிலமை உருவாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரழிவுகளுக்கு அரச த்லைவரே பொறுப்புக் கூற வேண்டும். முதலில் அரச தலைவருக்கான தேர்தலை நடத்தி மக்களின் நிலைப்பாட்டை அவர் அறிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ற-10)

---

# தலைமை அமைச்சர் வேட்பாளர் விடயத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்

## கூறுகின்றார் ஐ.தே.க எம்.பி. ஹெக்டர் அப்புஹாமி

கொழும்பு, டிச. 1

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமை அமைச்சர் வேட்பாளர் விடயத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார். நாடாளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தலைமை அமைச்சராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களால் பரவலாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் எந்தவித உரிய காரணங்களுமின்றி தற்போது தலைமை அமைச்சர் பதவிலிருந்து ரணில் விக்ரமசிங்க நீக்கப்பட்டுள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவால் அரசமைப்புக்கு முர ணாக பதவி நீக்கப்பட்ட அவரே மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். எதிர்வரும் தேர்தலில் இவற்றில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றார்.

---



மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டன. நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் முதன்முறையாக வான்கதவு மட்டத்தை அடைந்ததை அடுத்து வான்கதவுகள் திறக்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குடும்பத்துடன் சென்று அந்த நிகழ்வுகளைப் பார்வையிட்டார். அந்தப் பகுதியில் ஒளிப்படங்களும் எடுத்துக் கொண்டார். அதேவேளை, நேற்று நாடாளுமன்றில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைத் தடுக்கும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (ற)

---

# மாபிள் கடலில் மூழ்கி சிறுவர்கள் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.1

திருகோணமலை மாபிள்க் கடலில் நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவர்கள் 13 மற்றும் 15 வயதுடையவர்கள் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. உடற்கூற்றுச் சோதனைகளின் பின்னர் அவை உறவினர்களிடம் கையளிக்கப்படும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

---

சம்பளத்தை

# அரச ஊழியர்களுக்கு வழங்குங்கள் அமைச்சர்களுக்கு வழங்கவேண்டாம்

## கூறுகின்றார் மத்தும பண்டார எம்.பி

கொழும்பு, டிச. 1

"பொதுச் சேவையிலுள்ள அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குங்கள். ஆனால் அமைச்சர்களுக்கும் அவர்களது அமைச்சுக்கும் சம்பளம் வழங்க வேண்டாம்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் காலியைச் சேர்ந்த சிங்களவர் மற்றையவர் தமிழர். இந்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் கொலை செய்துவிட்டு அவர்களது துப்பாக்கிகளை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

ஒரு பொலிஸ் அதிகாரியின் கையை வெட்டியுள்ளார்கள். இவ்வாறான அநியாயங்கள் கடந்த காலங்களில் இடம்பெறவில்லை.

அரசியல் செய்யும் தேரர்கள் கூறினார்கள் நாட்டை பாதுகாக்க மகிந்த ராஜபக்சவை அழைக்குமாறு ஆனால் பாதுகாப்புப் படைகளின் பிரதானியை மைத்திரிபால சிறிசேன கைது செய்தது மகிந்தவின் கள்ள அரசிலே.

11 மாணவர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரண்ணகொடவால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முறைப்பாடு பதியப்பட்டது.

அம் முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்தே முப்படைகளின் தளபதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்சவை கொண்டு வருவதற்கு நிறைய பேர் கத்தினார்கள். அவர்கள் மாவீரர் நாளை நினைவு கூற விடப்போவதில்லை எனக் கூறினார்கள்.

ஆனால் இம் முறை 38 இடங்களில் மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. அரசியல் செய்யும் தேரர்களே இவற்றுக்குப் பதில் சொல்லுங்கள்.

அமைச்சுக்களின் நிதியை முகாமை செய்யும் பொறுப்பு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கேயுரியது. அமைச்சர்களுக்கும் அமைச்சு அலுவலகங்களுக்கும் வழங்கும் நிதி தொடர்பான முழுப் பொறுப்பு செயலாளர்களுக்கேயுரியது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமையால் அமைச்சர்களின் வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த் பொறுப்பு அமைச்சுக்களின் செயலாளருக்குரியது. இடை நிறுத்தியுள்ள கம்பெரலிய வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் கேட்டுக்கொள்கிறேன்."என்றார். (ஐ)

---

# லிட்ரோ காஸ் நிதி முறைகேடு; விசாரணை 7க்கு ஒத்திவைப்பு

லிட்ரோ காஸ் நிறுவனத்துக்கு சொந்தமான 500 மில்லியன் ரூபா நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று நிரந்தர நீதிவான் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மனு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் நிதி கட்டுப்பாட்டாளராக கடமையாற்றிய முதித தமானகமவிடம் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் முன்னின்ற அரச தலைவர் சட்டத்தரணி அலி சப்ரி எழுப்பிய குறுக்கு கேள்விக்கு பதிலளித்த சாட்சிக்காரரான முதித தமானகம, கடந்த ஜீலை மாதம் தம்பர அமில தேரருக்கு லிட்ரோ காஸ் நிறுவனம் 95 ஆயிரம் ரூபா பணம் வழங்கியமைக்கான பற்றுச்சீட்டை வெளியிட்டார்.

தொடர்ந்த குறுக்கு விசாரணையின் போது, வழக்கின் முதன்மை பிரதிவாதியான காமினி செனரத் லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட காலத்தில் எந்தவித சம்பளக் கொடுப்பனவுகளையும் பெறவில்லை என்று சாட்சிக்காரரான முதித தமானகம தெரிவித்தார். இதன் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 7ஆம் திக

# தேசிய அரசு முறைகேட்டை உடன் விசாரிப்பது அவசியம்

## வலியுறுத்துகிறார் பந்துல

**கொழும்பு, டிசெ. 1**

**அரசநிதியை முறைகேடாகப் பயன்படுத்தி அதை இரகசியக் கணக்கில் 39 பேருக்கு மாற்றிய முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை இன்றும் கைது செய்யாது இருப்பது ஏன்?. நாட்டுக்காகப் போராடிய அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்னவின் விடயத்தில் சட்டம் எவ்வாறு செயற்பட்டதோ அதைப் போன்று ரவி கருணாநாயக்க விடயத்திலும் செயற்பட வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார். தலைமை அமைச்சர் பணியகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய அரசில் நிதியமைச்சில் இடம்பெற்ற பல மோசடிகள் குறித்து பொதுஜன பெரமுனவினர் பல முறைப்பாடுகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்தோம். இதுவரையில் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இனியாவது விசாரனைகளை விரைவுப்படுத்தி உண்மைகளை வெளிக்கொணர வேண்டும்.

தேசிய அரசில் இடம் பெற்ற நிதி மோசடிகள் அனைத்திலும் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயகவுக்கு ஏதாவது ஒரு வழியில் தொடர்பு உண்டு என்பது இறுதியில் வெளிவரும் உண்மையாகவுள்ளது. மகிந்த ராஜபக்ச அரச நிதிகளை பயன்படுத்த கூடாது என்று அவர் நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவுள்ளது. கடந்த காலத்தில் இடம் பெற்ற விடயங்களை அவருக்கு நினைவுப்படுத்த வேண்டும்.

தேசிய நிதி மோசடி தொடர்பிலான குற்றச்சாட்டு ஒன்று நீதிமன்ற விசாரணையில் உள்ளபோதே ரவி கருணாநாயக்க நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டில் இருந்து அவர் இன்றும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை. பிணைமுறி கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் இடம்பெற்ற மோசடிகளில் ரவிகருணாநாயக்கவுக்குப் பெரும் பங்கு உள்ளது. தற்போதும் ஒரு பெரிய உண்மை வெளிவந்துள்ளது.

லிட்ரோ கேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபா நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தற்போது பல உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அந்த நிறுவனத்தில் கடமையாற்றாத 39 பேரின் வங்கிக் கணக்குகளில் பணம் மாற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ரவி கருணாநாயக்கவின் இரகசிய வங்கிக் கணக்கில் இருந்து பெரும் தொகை நிதி பறிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேசிய அரசில் இடம்பெற்ற அனைத்து ஊழல் மோசடிகளுக்கும் ரவி கருணாநாயக்கவின் பங்கு ஏதாவது ஒரு வழியில் காணப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்கவுக்கு எதிராகப் பொதுஜன பெரமுனவினர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தோம். ஆனால் அந்தத் தீர்மானம் இதுவரை காலமும் விவாதத்துக்குஎடுத்துக்கொள்பப்படவில்லை. மறுபுறம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை தாக்கல் செய்தோம் அதுவும் அவர்களின் அதிகாரப் பலத்தால் பயனற்றுப் போனது.

தேசிய அரசில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்க வேண்டும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இதற்காக ஆணைக்குழு அமைக்க வேண்டிய அவசியம் தேவையில்லை. ரவிகருணாநாயக்கவுக்குஎதிராக கடந்த காலங்களில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்ததையும் விசாரணைக்குஎடுத்துக்கொண்டாலே போதும், அனைத்து உண்மைகளும் வெளிவரும் - என்றார். (ற-31)

---

# நாடாளுமன்றத்தின் மேன்மை நிலைநாட்டப்பட வேண்டும்

## கூறுகின்றார் எரான் விக்ரமரத்ன



கொழும்பு, டிசெ. 1

மக்களின் பிரச்சினைகளை தீர்த்து சுபீட்சமான, சக்திமிக்க நாடொன்றை உருவாக்கவே 2015 ஆம் ஆண்டு சகல மக்களும் ஒன்றிணைந்து கூட்டாச்சி அரசை தோற்றுவித்தனர். இதற்காக ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் நாடாளுமன்றத்தின் மேன்மை நிலைநாட்டப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணம் மற்றும் பதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினரின் கொள்கைகளை குறைத்து மதிப்பிட முடியாது. ஆகவே கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி நாட்டில் காணப்பட்ட அமைதியான ஆட்சியை நிலைநாட்ட அரச தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச தலைவர் ஜனநாயகக் கொள்கைகளுக்கு மதிப்பளிக்காமல் செயற்படுவது அருவருக்கக் கூடியது என்றும் அவர் சுட்டிகாட்டியுள்ளார். (ஐ)

---

# பொழுதைக்கழிக்கும் இடமாக மாறியுள்ளது நாடாளுமன்றம்

## வாசுதேவ கூறுகின்றார்



கொழும்பு, டிசெ. 1

எதிர் தரப்பினர் அரசை முதலில் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றமுடியும். தற்போது நாடாளுமன்றம் எதிர்த் தரப்பினரது பொழுதை கழிக்கும் ஒரு இடமாகவே காணப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயகார தெரிவித்தார்.

அரசிற்கு எதிர்த்தரப்பினரது ஆதரவு ஒருபோதும் தேவையில்லை எங்களுக்கு தேவையான விடயங்களை முறையாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வோம். இடைப்பட்ட காலத்தில் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தில் பெரியளவிலான குறைப்பாடுகள் காணப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியினை இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றவே ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினார். மகிந்த தலைமையிலான இடைப்பட்ட அரசே தொடரும் இதில் எவ்வித மாற்றமும் கிடையாது - என்றார். (ஐ)

---

# ஐ.ம.சு. கூட்டமைப்பால் எதுவும் செய்ய முடியாது

## சாகல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தாலும் அவர்களால் ஏதேனுமொரு தீர்மானத்தை முன்வைத்து அதனை நிறைவேற்றிக்கொள்ளவோ, பிறிதொரு தரப்பினரால் கொண்டு வரப்படும் தீர்மானத்தைத் தோல்வியடையச் செய்யவோ முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகலரத்னாயக்க தெரிவித்தார். நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் தவிர்ந்த 224 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 122 பெரும்பான்மை எம்மிடம் காணப்படுகின்றது. மீதமுள்ள 102 உறுப்பினர்களைக் கொண்டு ஆளுங்கட்சியினரால் அரசைக் கொண்டு செல்ல முடியாது - என்றார். (ஐ)

---

# நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 1

பொய்ப் பிரசாரங்கள் மூலம் நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் ஏற்படுத்த முனையும் விமல் வீரவன்ச, உதய கம்பன்பில உள்ளிட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாரிய இனக்கலவரங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் கூட பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்களால் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவது தண்டிக்க வேண்டிய விடயமாகும். எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டி திகணையில் இடம்பெற்ற கலவரத்தின் போது சாதாரண பொது மக்கள் கூட பொலிஸார் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. பல்வேறு உடைமைகளுக்கு தீவைக்கப்பட்ட போதும் சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் மீது எந்த தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆனால் சட்ட திட்டங்களை நன்கு அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மீறிச் செயற்பட்டுள்ளனர். இவ்வாறு செயற்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டியவர்கள்.

இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் இனவாதத்தையும் மத வாதத்தையும் தூண்டிவிட்டு பிரச்சினைகளை ஏற்படுத்தும் இனவாதிகளான உதய கம்பன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

---

# இந்திய ரோந்து கப்பல்கள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, டிசெ. 1

இந்தியக் கரையோர ரோந்துக் கப்பல்களான சி.ஜி.எஸ். சமர் மற்றும் அரய்மன் ஆகியன இலங்கைக்கு வரவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இரு ரோந்துக் கப்பல்களும் இன்று இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளன. இரு கப்பல்களும் மாலைதீவில் இடம்பெற்ற இந்திய, இலங்கை, மாலைதீவு முத்தரப்பு ரோந்துப் பயிற்சியில் பங்குபற்றின.

இந்தப் பயணத்தின் போது, இந்தியக்கரையோர ரோந்துக்கப்பல்கள் தேடுதல் மற்றும் மீட்டல்; கப்பல் தேடுதல் நடைமுறை மற்றும் ஆவணப்படுத்துல், மாசுக் கட்டுப்பாடு ஆகிய விடயங்களில் பயிற்சிகளை மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ)

---

# நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய செயற்பட்டிருந்தால் எவ்விதப் பிரச்சினைகளும் தோற்றம் பெற்றிருக்கா

கொழும்பு, டிசெ. 1

நாடளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் தற்போது தங்களின் பெரும்பான்மை பலத்தினை வெளிப்படுத்த வேண்டியது அவசியமில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய நாடாளுமன்றத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் எவ்வித பிரச்சினைகளும் தோற்றம் பெற்றிருக்காது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பேச்சாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காகவே நாடாளுமன்றத்தினை கலைத்தார்.

ஆனால் சபாநாயகர் நெருக்கடிகளை தீவிரப்படுத்த நாடாளுமன்றத்தை தொடர்ந்து கூட்டி வருகின்றார் - என்றார். (ஐ)

# சமாதானமா? போராட்டமா? முடிவெடுக்கட்டும் மைத்திரி

## எதற்கும் தயார் என்கிறார் ராஜித

**கொழும்பு, டிசெ. 1**

**அரச தலைவர் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சியைச் சமாதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளத் தயார் என்றால் நாங்களும் அதற்குத் தயாராகவுள்ளோம். இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முன்வர அவரால் முடியாது என்றால், எமது போராட்டத்தை இறுதிவரை கொண்டுசெல்வோம் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது தலைமை அமைச்சர் அலுவலகத்துக்குச் செல்லும் நிதியை இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை ஐ.தே.க. கொண்டுவந்திருந்தது. மேற்படி தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழு உலகமும் ஏற்றுக்கொண்ட தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவரே தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். இதனையே நாட்டு மக்களும், பன்னாட்டுச் சமூகத்தினரும் எதிர் பார்க்கின்றனர்.


கடந்த மாதம் 26ஆம் திகதி அரச தலைவர் செய்த அரசியல் சூழ்ச்சியால் இன்று முழு நாடும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், அரச பொறிமுறை முற்று முழுதாக வீழ்ச்சி கண்டுள்ளது.

நாடாளுமன்றத்தைத்தையும் அதன் நம்பகத்தன்மையைப் பாதுகாக்கவுமே நாங்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எவர் சரி அவர் பிழை என்பது பிரச்சினையில்லை. எது சரியான தீர்மானம் என்பதே தற்போதுள்ள பிரச்சினை.

அரச தலைவர் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சியைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள அவர் தயார் என்றால் நாங்களும் அதற்குத் தயார்.

சமாதானமாக இந்தப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முன்வர அவரால் முடியாது என்றால், போராட்டத்தை இறுதிவரை கொண்டுசெல்வோம். சமாதானமாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளத் தயார் என்றால் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இல்லாவிட்டால் போராட்டத்தில் முன்னாள் நாங்கள்தான் நின்று வழிநடத்துவோம் - என்றார். (ஐ)

# தடுப்பிலுள்ள ரவீந்திரவை நேரில் சந்தித்தார் மகிந்த !



கொழும்பு, டிசெ. 1

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச நேரில் சென்று சந்தித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற மகிந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் உடல்நிலை தொடர்பில் கேட்டறிந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முதன்மைச் சந்தேகநபரான அட்மிரல் ரவீந்திர கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டு, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்றுமுன்தினம் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

# மக்களின் மனமறிந்து தீர்வை முன்வைக்குக

## *அஸ்கிரிய மகாபீடத்தினர் அறிவுரை*

கொழும்பு, டிசெ. 1

தற்போதைய சூழ்நிலையில் மக்களின் எண்ணங்களை உள்வாங்கி அதனடிப்படையில் தீர்வை முன்வைக்க வேண்டியது அவசியமென அஸ்கிரிய மகாநாயக்க பீடத் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மக்களினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் நிலையானதொரு தன்மையைப் பேணாது செயற்படுகின்றார்கள்.

இவர்களின் செயற்பாடுகளினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதுடன் அரசு மீதும் நம்பிக்கையற்றவர்களாகவும் திகழ்கின்றனர்.

ஆகையால் மக்களின் விருப்பங்களுக்கு மரியாதை கொடுத்து அதனடிப்படையில் தீர்வை முன்வைத்து நாட்டின் அரசியலை சுமூகமான நிலமைக்கு கொண்டுவரும் வகையில் அரச தலைவர் செயற்பட வேண்டும்" என்று அஸ்கிரிய மகாநாயக்க தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெரும்பான்மை எமக்குள்ளதால் அதிகாரத்தைக் கையளியுங்கள்

## *சஜித் கோரிக்கை*



கொழும்பு, டிசெ.1

நாடாளுமன்றத்தில் நான்கு முறைகளுக்கு மேலாகப் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டி விட்டோம். இதனால் சட்டவிரோத அரசு, ஆட்சி அதிகாரத்தைத் தங்களிடம் விரைந்து கையளிக்க வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜனநாயக நாட்டில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பைப் புறக்கணிக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உள்ளடங்கிய சட்ட விரோத அரசிடம் 113 பேர் இல்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

மக்கள் ஆணையின் கீழ் ஆட்சிக்கு வருகின்றவர்கள் சட்டவாட்சியைக் காப்பாற்றி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியமாகும். இதனால் கடந்த 30 நாள்களாக ஜனநாயகத்துக்கு முரணாகச் சட்டவிரோத ஆட்சியில் ஈடுபட்டமையை நிறுத்திவிட்டு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்துள்ள தரப்பினருக்கு ஆட்சிப் பொறுப்பை அரச தலைவர் கையளிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" - என்றார். (ஐ)

# பரீட்சை அனுமதி பத்திரம் கிடைக்காதோர் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்

கொழும்பு, டிசெ. 1

ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் பிரத்தியேக விண்ணப்பதாரிகளுடைய பரீட்சை அனுமதிப் பத்திரம் தபால் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதிப் பத்திரம் இதுவரை கிடைக்காத பிரத்தியேக விண்ணப்பதாரிகள் எவரேனும் இருப்பின் அடையாள அட்டை இலக்கத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற உத்தயோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிட்டு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# நாடாளுமன்றம் முன்னர் போல் சுயாதீனமாக இயங்கவேண்டும்

## *கூறுகின்றார் ரிசாத் பதியுதீன்*

கொழும்பு, டிசெ. 1

நாடாளுமன்றம் முன்னர் இயங்கியது போல் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் எவ்வாறு நாடாளுமன்றம் சுயாதீனமாக இயங்கியதோ அவ்வாறு இயங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழிகளை ஏற்படுத்த இடமளிக்க வேண்டும்.

நாட்டில் தற்போது காணப்படும் அசாதாரண அரசியல் சூழ்நிலை காரணமாகப் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக நிர்வாக சேவைகள் மற்றும் சுகாதாரத்துறை என்பன பல்வேறு சிக்கல்களை எதிர்காலத்தில் சந்திக்கப் போகின்றது. நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அரச தலைவர் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்"- என்றார். (ஐ)

# "பி.எம்.பி அரிசி" சந்தைப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ. 1

நெல் சந்தைப்படுத்தல் சபையின் "பி.எம்.பி அரிசி" சந்தைப்படுத்தலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதுடன், அந்தப் பணிகள் நாடளாவிய ரீதியில் 19 மாவட்டங்களிலுள்ள 220 களஞ்சியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லைத் தரமான அரிசியாக மாற்றி அதனை நாடளாவிய ரீதியில் நுகர்வோருக்கு வழங்குவதற்காக அரச தலைவரின் பணிப்புரையின் பேரில் விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர வழிகாட்டலின் கீழ் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் அரிசி சந்தைப்படுத்தப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன், "நூறு வீத தேசிய உற்பத்தி" என்ற தொனிப்பொருளின் கீழ் சந்தைப்படுத்தப்படும் இந்த அரிசி உற்பத்திச் சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவும் அமைகின்றது.

மேலும் இதனூடாக நுகர்வோருக்கு குறைந்த விலையில் சிறந்த அரிசியைப் பெற்றுக்கொள்ளவும் விவசாயிகளுக்குத் தமது நெல்லுக்கான நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் அமைகின்றது.

இந்நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாயத் துறை அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (8)

see more news in NEWUTHAYAN.COM

## மாவீரர் தினம்...

காக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்ததாவது; வடக்கில் ஆவாக் குழு பட்டாசு கொழுத்தினாலும் தெற்கில் தங்களைக் தேசப்பற்றாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் விமல் வீரவன்ச மற்றும் கம்மன்பில போன்றவர்கள் புலிகள் தலை தூக்குவதாகப் பரப்புரை செய்வார்கள்.

சில தினங்களுக்கு முன்னர் வடக்கில் மாவீரர் நாள் பல இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டது. மாவீரர் நாள் இந்தக் காலப் பகுதியில் வந்தமையிட்டு நாங்கள் மகிழ்சியடைகின்றோம். இல்லாவிட்டால் மாவீரர் நாளை வைத்துக் கொண்டு விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் தெற்கில் பெரிய இனவாதப் பரப்புரையை மேற்கொண்டிருப்பார்கள். நாற்கள் இனவாதிகள் அல்ல. இந்த விடயத்தில் எங்கள் உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்பட்டார்கள் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ரஞ்சித் மத்தும பண்டார, எமது ஆட்சியில் 27 இடங்களில் மட்டுமே மாவீரர் தினங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால், கடந்த 27ஆம் திகதி 38 இடங்களில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

எமது ஆட்சியில் வடக்கில் சிறிய சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதனைப் பெரிதுபடுத்திய தேசப்பற்றாளர்கள் தற்போது மௌனம் காக்கின்றனர் என்றார். (5,61)

## மீண்டும்...

களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த தீர்மானம் நாடாளுமன்றில் 122 வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட அவர் தலைமையிலான அமைச்சரவைக்கு ஒதுக்கப்படும் அனைத்து நிதியும் நாடாளுமன்றத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மைத்திரி - மகிந்த அரசுக்கு ஏற்பட்ட ஐந்தாவது தோல்வியாகும்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க, மனோ கணேசன், ஜயம்பதி விக்கிரமரட்ன ஆகியோரினால் கொண்டுவரப்பட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட பணியாள் தொகுதியினருக்கும் எந்தவொரு செலவினத்தையும், அனுமதிப்பதற்கு அமைச்சுக்களின் செயலர்களுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லையென்ற தீர்மானம் கடந்த கட்சித் தலைவர் கூட்டத்தின் போது அறிவிக்கப்பட்டிருந்தது.

2018ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி முதல் அரச நிதியிலிருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட பணியாள் தொகுதியினரின் சம்பளங்களையும், ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கும் பெறப்படும் ஏதேனும் பணக்கொடுப்பனவுகளை அனுமதிப்பதற்கும் எந்தவொரு அமைச்சின் செயலர்களுக்கும் அதிகாரம் இல்லை. மேற்படி அமைச்சர்களின் சார்பாக வெளிநாட்டுப் பிரயாணங்கள், உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தல் உள்ளிட்ட உள்நாட்டு வான் போக்குவரத்துகளுக்குச் செலவுகளை ஈடுசெய்வதிலிருந்தும் தவிர்க்கப்பட்டுள்ளனர் எனவும், இந்தத் தீர்மானம் நிறைவேற்றலை மீறி நடவடிக்கை மேற்கொள்ளும் எந்த ஆளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது என்று சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சபையில் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். தீர்மானத்தை வழிமொழிந்து ரஞ்ஜித் மத்தும பண்டார உரையாற்றியனார். ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளை தொடர்ந்து தீர்மானம் மீது இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் தீர்மானத்துக்கு ஆதரவாக 122 வாக்குகள் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஆகிய கட்சிகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜிவ சேனசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

மேலும் அரச தரப்பில் இருந்து நேற்றும் எவரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. நான்காவது நாளாகவும் அவர்கள் நாடாளுமன்ற அமர்வுகளை புறக்கணித்தனர். (5,61)

## கிழக்கில்...

மகிந்த ராஜபக்சவின் தூண்டுதலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். இந்தச் சம்பவத்தில் கருணா மீது சந்தேகம் இருக்கின்றது. இதுதொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் வலிறுத்தினார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று இடம்பெற்றது.

**ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்ததாவது; 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறானதொரு சம்பவம் தற்போதே இடம்பெற்றுள்ளது.**

# யோகேஸ்வரி - கிருபாகரன் சிறப்பு அமர்வில் சொற்போர்

**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான யோகேஸ்வரிக்கும், சபை உறுப்பினரான கிருபாகரனுக்கும்நேற்றுமுன்தினசபைஅமர்வில்கடும்சொற்போர்இடம்பெற்றது. ஒரு கட்டத்தில் யோகேஸ்வரியைப் பற்றிய தகவல்களை 'ஸ்கெட்ச் போட்டுக் கதைப்பேன்' என்று உறுப்பினர் கிருபாகரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணமாநகரசபையின்நேற்று முன்தின சிறப்பு அமர்வில் பாதீட்டு வரைவு தொடர்பான விவாதங்கள் இடம்பெற்றன. இதன்போதுவரிஅதிகரிப்புதொடர்பில்யோகேஸ்வரிகணக்காளரிடம்வினாக்களைத்தொடுத்தார். வரைவில் விளக்கம் இல்லாது உள்ளது.கடந்தஆட்சியில்இருந்ததைமறந்து விட்டேன் அதனால் கேட்கிறேன் என்றார். 6வீதமாகஇருந்தவரிஇந்தவரவு செலவுத்திட்டத்தில்8வீதமாகஅதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது என்று சபையில் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்த விடயங்களை நிதிக்குழுவில் சமர்ப்பித்துசபைக்குக்கொண்டுவந்திருக்கவேண்டும்என்றுயோகேஸ்வரி தெரிவித்தார். நிதிக்குழுவைப் பார்க்காதுபாதீட்டைப்பாருங்கள்என்றுகிருபாகரன் கூறினார். இப்படி யோகேஸ்வரிக்கும், கிருபாகரனுக்கும் இடையில் சொற்போர்மூண்டது. வரிஅதிகரிக்கப்பட்டுள்ளது என்று யோகேஸ்வரி கூறும் போதுகுறுக்கிட்டகிருபாகரன்"நீங்கள் வரி சுமத்தியதையும் நாங்கள் கேட்கிறோம்"என்றார்.கடந்தஆட்சியில்என்ன செய்தீர்கள்என்பதும்எல்லோருக்கும் தெரியும்.நகரக்குளம்தொடர்பாகசிறப்புக்கூட்டத்தைப்போடுங்கள்தெளிவாகக்கதைப்போம்என்றும்கிருபாகரன் கூறினார்.இதுகடந்தஆட்சியில்இருந்த ஈ.பி.டி.பிகட்சியின் உறுப்பினர்களைக் கடுமையாகத் தாக்கியது போலும். உறுப்பினர் இளங்கோ எழுந்து கடந்த ஆட்சியில் செய்யப்பட்டன என்று சில விடயங்களைக் கூறினார். சபையில் சலசலப்பு ஏற்பட்டது. வெளியில் வாருங்கள்கதைப்போம் என்று யோகேஸ்வரி கிருபாகரனைக் கேட்டார். உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். "ஸ்கெட்ச்' போட்டுக்கதைப்பன்" என்றார்கிருபாகரன். கிருபாகரனைப்பற்றி நீதிமன்றில் இருந்து முழுக்கதை களையும் கதைப்பேன் என்று யோகேஸ்வரி கூறினார். இருவருக்கும் இடையில் கடும் சொற்போர் இடம்பெற்றபோரது. (ம-21)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்த கருணா அம்மான் அவரது கீச்சகத்தில், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் என்னை மிரட்டுகின்றனர். நான் மட்டக்களப்பைச் சேர்ந்த கருணா அம்மான். 2004ஆம் ஆண்டுக்கு முன்னர் கருணா அம்மான் யார் என்பதை மட்டக்களப்பு மக்களிடம் கேளுங்கள் என்று பதிவிட்டிருந்தார்.

கருணா அம்மானின் இந்தக் கீச்சகப் பதிவுத் தகவல் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் அச்சுறுத்தல், மட்டக்களப்பில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலும் சம்மந்தம் இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. நாட்டில் உறுதிப்பாடற்ற நிலையை உருவாக்க, 2004இல் இருந்த கருணா அம்மான் மீண்டும் தலைதூக்குகின்றாரா? ஆயுதம் தூக்க ஆரம்பிக்கின்றாரா? என்ற சந்தேகம் இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து அவர்களின் கையெழுத்துடன் மைத்திரிக்கு கடிதம் கையளித்திருக்கின்றனர். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்ப கருணா அம்மான் போன்றவர்களை பயன்படுத்திக்கொண்டு ராஜபக்ச கும்பல் திட்டமிடுகின்றதா என்ற சந்தேகம் இருக்கின்றது.

மட்டக்களப்பு சம்பவத்துக்கு கருணா அம்மான் தொடர்புபட்டிருக்கின்றாரா என்பது தொடர்பாக தெளிவான அறிப்பொன்று எங்களுக்குத் தேவை. மைத்திரி இந்த விடயத்தில் தலையிட்டு மீண்டும் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனைப் பயன்படுத்திக் கொண்டு நாங்கள் தெற்கில் இனவாத பரப்புரை மேற்கொள்ள மாட்டோம் என்றார்.

**சுமந்திரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நளின் பண்டாரவின் கருத்தை நான் வழிமொழிகின்றேன். பதுங்கியிருந்த கருணா மீண்டும் பேசத் தொடங்கியுள்ள நிலையிலேயே மட்டக்களப்பில் இரு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு ஆழமான சந்தேகங்கள் உண்டு. இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.

அதேவேளை, இன்னொருவர் யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலைத்தூக்கியுள்ளார். இவர் தன்னை ஒரு அமைச்சராக தெரிவித்துக்கொண்டு, நான் மீண்டும் வந்துட்டேனு சொல்லு என்று ஒரு சினிமா நடிகரின் தொனியில் கூறியுள்ளார். இந்த போலி அமைச்சரின் கட்சியினராலேயே அங்கு தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இவை தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார். (5,10,61)

## ஐ.தே.முக்கு...

உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆட்சி மாற்றம் மக்களின் தேவைக்காக மாத்திரமே ஏற்படுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தங்களின் தனிப்பட்ட விசுவாசத்தை ஐக்கிய தேசிய கட்சிக்குச் செலுத்துவதை விடுத்து தம்மைத் தெரிவு செய்த மக்களுக்காக அரசு ஆதரவு வழங்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியால் இனி ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாது. 2015ஆம் ஆண்டு சூழ்ச்சிகளினாலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய அரசு மக்களுக்குத் தேவையான விடயங்களைச் செயற்படுத்தாமல் ஒரு சிலரது தனிப்பட்ட தேவைகளை முன்னிலைப்படுத்தி சென்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகாலமாக, ஐக்கிய தேசிய முன்னணிக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி என்ற போர்வையில் இருந்து கொண்டு ஆதரவு வழங்கியது. இந்த நடவடிக்கைகளால் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு எவ்வித அபிவிருத்திகளும், முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

மகிந்தவின் காலத்தில் வடகிழக்கில் பெரிய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியே கடந்த மூன்று வருடகாலமாக இடம் பெற்றது. அவையும் முழுமை பெறவில்லை என்றார். (5,61)

## மகிந்தவுக்கு...

அவர்களின் நியமனங்களை செல்லுபடியற்றதாக கட்டளை பிறப்பிக்குமாறு கோரித் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை திங்களன்று தொடரவுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் 122 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனு மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், தலைமை அமைச்சர் பதவியில் மகிந்த தொடர்வதாகவும் அது சட்டரீதியற்றது என்று கட்டளை ஆக்கும்படியும் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மேன் முறையீட்டு நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றுள்ளது. வழக்குக்கு ஆதாரமாக பாராளுமன்றப் பதிவேடு (ஹன்சாட்) முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை எதிர்த்தரப்பினர் சவாலுக்கு உட்படுத்தும் வாதங்களை மன்றில் முன்வைத்துள்ளனர். வாதப் பிரதிவாதங்கள் நேற்று மாலை 5 மணி வரையில் தொடர்ந்துள்ளன.

இந்த நிலையில் வழக்கு நாளை மறுதினம் திங்கட் கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (5)

## மகிந்த...

நடத்தினர். இந்தச் சந்திப்பு நட்புரீதியான சந்திப்பு என்று இரு தரப்பு வட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. அமைச்சர்கள், பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அவர்களின் செயலர்கள் நிதி பயன்பாடு மீதான கட்டுப்பாடு விதிக்கும் தீர்மானம் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் சபைக்கு நேற்றைய தினமும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வருகைதரவில்லை.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்ற கட்டித்தொகுதியில் கூடி கலந்துரையாடியிருந்ததுடன் ஊடகவியலாளர் சந்திப்பையும் நடத்தியிருந்தனர். ஆளும் கட்சிக் குழுக் கூட்டம் முடிந்து மகிந்த ராஜபக்ச நாடாளுமன்ற நூலகத்தொகுதிக்கு வருகை தந்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நூலகத்துக்கு வருகை தந்திருந்தார். இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டனர்.

சுமார் 15 நிமிடங்கள் அளவில் கலந்துரையாடியிருந்தனர். மகிந்த ராஜபக்சவுடன் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் மலிக் சமரவிக்ரமவும் இருந்தனர். (5,61)

## தென். கெற்பேலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது

### கொடிகாமம். பொலிஸார் தெரிவிப்பு

**சாவகச்சேரி, டிசெ. 1**
**தென்மராட்சி கிழக்கு கெற்பேலிப் பகுதியில் அண்மைக்காலமாக கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதென கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.**

கெற்பேலிப் பகுதியில் 7 ஆயிரத்து 500 மில்லிலீற்றர். 750 மில்லிலீற்றர், ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவரையும், பற்றை மறைவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறுவனொருவனும் கைது செய்யப்பட்டு கடந்த 28ஆம்திகதி புதன்கிழமைநீதிமன்றில்முற்படுத்தப்பட்டனர். அவர்கள் நால்வரும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கொடிகாமம் பொலிஸார் இவ்வாறு குறிப்பிட்டனர். (ம-9)

## யாழ். தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 1
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் கரிகணன் பதிப்பகமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உபதலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கரிகணன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் தம்பதியர் மங்கலவிளக்கேற்றவுள்ளனர். யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் தமிழ்த்தெய்வ வணக்கப்பாவையும் நாவலர் வழிபாட்டுப் பாக்களையும் இசைக்கவுள்ளனர். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் பா.பாலகணேசன் வரவேற்புரையையும், தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தொடக்கவுரையையும் ஆற்றவுள்ளனர். (ம-11)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.1
கீரிமலை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து தமிழ்மன்றம் சனசமூக நிலையத்தில் நாளை காலை 08.30 மணி முதல் மாலை 4 வரை குருதிக்கொடை முகாமை நடத்தவுள்ளன. (ம-114)

## பரிசளிப்பு விழாக்கள்

**சரசாலை பொது நூலகம்**
சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சரசாலை பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மட்டுவில் கமலாசனி வித்தியாலய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஜீ.விஜயகுமார், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் க.க.ஈஸ்வரன், வித்தியாலய அதிபர் ஐ.தேவராஜன், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச கலாசார அலுவலர் சிவ. முகுந்தன், பிரதேச சன சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**ஆறுமுகநாவலர் குருபூசைதினம்**
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய சைவ வினாடி வினாப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை இடம்பெறவுள்ளது. சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் குறித்த விழாவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் அதிபர் நா.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-159,105)

# ஒளிவிழாக்களும் பரிசளிப்பும்

### நாவற்குழி மகா வித்தி.



நாவற்குழி மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் போதகர் என்.ரி.ஜெயநேசன் அடிகளார் கலந்து கொண்டார்.

### பரமேஸ்வரா வித்தி.



யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான ஒளிவிழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் த.செல்லக்குமார் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. ஒளிவிழா திருப்பலியை கட்டைக்காட்டு பங்குத்தந்தை மைக் றெனால்ட் அடிகளார் நிகழ்த்தினார்.

### திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை காலை 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் மிருசுவில் பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் க.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சாவ. டிறிபேக் கல்லூரி



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது:
கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி ஆலய போதகர் அருட்பணி ஏ.ரி.ஜெயநேசன், சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா அடிகள், தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

### கோப்பாய் ஆசிரிய கலாசாலை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒளிவிழா கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொண்டார்.
கிளெறேசியன் சபை யாழ். முதல்வர் அருட்பணி ஸ்ரிபன் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். கலாசாலை தேவாலய ஆன்மிகக் குருவும் யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குநருமாகிய அருட்பணி பெனற். திருவுளப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்பணி மரியதாஸ் ஆகியோரும் திருப்பலிப் பூசையில் கலந்து கொண்டனர்.




### அல் ஹதீஜா முன்பள்ளி



அல் ஹதீஜா முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.
தலைமையுரையை முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எஸ்.ஏ.சி.முபீன் நிகழ்த்தினார். தொடர்ந்து மாணவர்களின் இசையும் அசையும் நடனங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் நடைபெற்றன.

### மிருசுவில் றோ.க.த.க



மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயப்பங்குத் தந்தை அருட்திரு எக்ஸ்.டபிள்யூ.ஜேம்ஸ், மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் மணியம் களஞ்சிய உரிமையாளர் பொ.பற்குணசீலன் சாவகச்சேரி இந்திரன் நகைக்கடை உரிமையாளர் இ.தெய்வேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் இசைத் துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீரங்கநாதன் தர்ஷனன், தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் மற்றும் அயல் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-159,70,9)

## கற்றல்மேம்பாட்டு நிதி உதவி

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் கனடாக் கிளையினர் கல்லூரியில் கற்றலில் ஆர்வமுள்ள 32 மாணவர்களுக்கானகற்றல்மேம்பாட்டுநிதி உதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றது.
அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் 32 மாணவர்களுக்கும்தலா 2 ஆயிரத்து 350 ரூபா வீதம் கல்வி மேம்பாட்டுநிதி சங்கப்பிரதிநிதியினால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.
நிகழ்வில் 32 மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் லண்டன் கிளையினர் 23 மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி மேம்பாட்டு நிதியாக தலா 2 ஆயிரம் ரூபா வீதம்வழங்கிவருகின்றனர்.
அத்துடன் அவுஸ்திரேலியாக்கிளையினர்2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 25 மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நிதி வழங்கவுள்ளனர் என அதிபர்தெரிவித்தார். (9)

# வவு. பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்கக் கோரிக்கை

**வவுனியா, டிசெ. 1**
**வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்க முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் ஆளுனரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



முன்னாள் முதலமைச்சரும் அப்போதைய போக்குவரத்து அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனின் உத்தரவுக்கு அமைய வவுனியா நகரில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் கடந்த வருடம் மூடப்பட்டது.
இதனால் அங்கு அமைந்துள்ள 137 வியாபார நிலையங்கள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.
இதுதொடர்பில் கடந்த மாதம் 31ஆம்திகதிவடக்கு மாகாண ஆளுனர் ரெஜினோல்ட்குரேயை சந்தித்த வடக்கு மாகாணமுன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர்ப.சத்தியலிங்கம் மீண்டும்பழைய பேருந்து நிலையத்தை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை முன்வைத்திருந்தார்.
இந்த நிலையில் 26 ஆம் திகதி மீண்டும் ஆநரிடம் கோரிக்கைமுன்வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (110)

# வவுனியாவில் ''எழுநீ'' விருது விழா

வவுனியா,டிசெ.1
வவுனியா நகரசபையின் "எழுநீ" பண்பாட்டு முற்றம் நடத்தும் "எழுநீ" 2018 ஆம் ஆண்டுக்கான விருது விழாநிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நகரபிதா இ.கௌதமன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்முதன்மைவிருந்தினராகவடமாகாணசபையின் முன்னாள்முதலமைச்சர்,நீதியரசர்சி.வி.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.
மதிப்புறு விருந்தினர்களாக அமைச்சர்கள்,பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபைஅமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதேசசபைத்தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.விழாவின்முக்கியநிகழ்ச்சியான, பல்துறைசார்ந்த140 சேவையாளர்களுக்கு, எழுநீ விருது வழங்கப்படவுள்ளது. (110)




## பசுமைப் பூங்கா திறப்பு

கிளிநொச்சி,நவ.1
கிளிநொச்சி,டிப்போச்சந்திப்பகுதியில்சுமார்நான்குகோடிரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பசுமைப் பூங்கா புனித நாள்களை் அடையாளப்படுத்தும் வகையில் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி,டிப்போசந்தியில்முன்னர்பாண்டியன்சுவையூற்று காணப்பட்ட நினைவிடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பசுமைப்பூங்காசம்பிரதாயபூர்வமாகமக்களிடம்கையளிக்கும் நிகழ்வுகடந்த 26 ஆம்திகதிநடைபெற்றுள்ளது.
சுமார் நான்கு கோடி ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால்நிர்மாணிக்கப்பட்டு,கரைச்சிபிரதேசசபையிடம் அண்மையில்கையளிக்கப்பட்ட பின்னர்பல்வேறு விதமான விளையாட்டுஉபகரணங்கள்மற்றும்உள்ளக அபிவிருத்தித் திட்டங்கள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராஜா கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள்எனப்பலர்கலந்துகொண்டுள்ளனர். (35)

## சேமமடுக்கிராமம் தொடர்பாக மாவட்ட செயலருடன் சந்திப்பு

வவுனியா,டிச.1
சேமமடுக்கிராமத்தின்உட்கட்டுமான வசதிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்டச்செயலகத்தில் மாவட்டச் செயலர் எம்.கனீபா தலைமையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.



கிராமமக்கள்மற்றும்கிராமத்தின் பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யபட்ட கலந்துரையாடலில், பிரதானமாக சேமமடு கிராமத்தில் காட்டுயானைகளால்மக்களுக்குஏற்படும்ஆபத்துகள் தொடர்பாகவும், விவசாய அழிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
சேமமடுவீதிகள்சீரமைப்பு,குளத்தினை சீரமைத்தல், மக்களுக்கான வீட்டுத்திட்டம், போன்றவிடயங்கள் தொடர்பாகவும் மாவட்ட செயலரிடம் சுட்டிகாட்டபட்டிருந்தது. அதன் அடிப்படையில் காட்டு யானைக்கான மின்சார வேலியினை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக செய்து தருவதாகவும்மற்றும்சீரமைப்புவேலைகளைப் படிப்படியாக செய்து தருவதாகவும் மாவட்ட செயலரால் தெரிவிக்கப்பட்டது.
சேமமடுவில் காட்டு யானைகளின் தொல்லைகள் அடிக்கடி ஏற்பட்டுவருவதுடன், அண்மையில்ஒருவர்யானை தாக்குதலுக்குஇலக்காகி பலியாகி இருந்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தன், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன், மேலதிக மாவட்டச் செயலர் சி.திரேஸ்குமார், பிரதேசசெயலர்கா.உதயராஜா,ஓய்வு பெற்ற கிராம அலுவலர் முத்துராஜா, முன்னாள் பிரதேசசபைத் தலைவர் சிவலிங்கம், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (110)



## ஈருருளி வழங்கல்

வவுனியா,டிச.1
ஜேர்மன் பேர்லினில் உள்ள தமிழ் இளையோர்களின் நிதிப் பங்களிப்புடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கல்வி மேம்பாட்டுப்பிரிவினால் வவுனியா தோணிக்கல்லில்வசிக்கும் ஆறுகுடும்பங்களின் பிள்ளைகளுக்கு கடந்த 26 ஆம் திகதி மாலை ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டன. (110)

## ஒலிபெருக்கிச்சாதனங்கள்வழங்கல்

கொடிகாமம்,டிச.1
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானதர்மலிங்கம்சித்தார்த்தன் ஒலிபெருக்கிசாதனங்களை வழங்கிவைத்துள்ளார்.
நாடாளுமன்றஉறுப்பினர்த.சித்தார்த்தனின்நாடாளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து கடந்த 28 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.
பாடசாலைக்கான ஒலிபெருக்கி சாதனங்களை பாடசாலை சமூகத்திடம்நாடாளுமன்றஉறுப்பினர்கையளித்தார். இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் திருமதி ரஞ்சிதமலர் ரவிச்சந்திரன், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலர் வாணி, ஆசிரியர்கள், ஜனநாயகமக்கள்விடுதலைமுன்னணியின் செயற்குழு உறுப்பினர் வே.சிவபாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (159)



## புயலால் பாதித்த வீடு சீரமைப்பு

முல்லைத்தீவு,டிச.1
முல்லைத்தீவு மாங்குளம் கற்குவாரிப்பகுதியில் காற்றால் கூரைகள் தூக்கி வீசப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பத்தின் வீட்டினை நேரடியாகச் சென்று பார்வையிட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சாந்திசிறிஸ்கந்தராஜா விரைந்து நடவடிக்கைஎடுத்துவீட்டினைச்சீரமைத்துவழங்கியுள்ளார்.
முல்லைத்தீவுஒட்டுசுட்டான்பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட மாங்குளம்கற்குவாரிக்கிராமத்தில்சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் அமைத்துக்கொடுக்கப்பட்ட நிரந்தரவீடு உரியமுறையில்அமைத்துக்கொடுக்கப்படாமல்காணப்பட்டது.
கடந்த மே மாதம் வீசிய காற்றினால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டதையடுத்து, கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு பாதிக்கப்பட்டபெண்தலைமைத்துவக்குடும்பத்தினால் தெரியப்படுத்தப்பட்டது.
கடந்த ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி குறித்த பிரதேசத்திற்குச்சென்ற ஒருவர், அந்த வீட்டின், நிலமை தொடர்பில்நாடாளுமன்றஉறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அன்றைய தினம் மாலை உடனடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி வீட்டினைச்சீரமைத்துவழங்கியுள்ளனர். (222)





## மேலதிக கணித பாட வகுப்பு

வவுனியா,டிச.1

வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக மேலதிககணிதபாடவகுப்புக்கள்இடம்பெறுகிறது. வவுனியா நகர சபையின் தலைவர் இ.கௌதமனின் நிதிப் பங்களிப்புடனும், வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தரம் 11 மாணவர்களுக்கான மேலதிக கணித பாட வகுப்பு இடம்பெற்றுவருகின்றது.இரண்டாவதுமாதகாலப்பகுதிக்கான கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா நிதி கடந்த 29 ஆம் திகதி வெளிச்சசம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரனால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

# மன்னார் தனியார் பேருந்து தரிப்பிடம் இடமாற்றப்பட்டது

## நகர முதல்வர் செபமாலை அன்ரன் டேவிட்சன் தெரிவிப்பு

**மன்னார்,டிசெ.1**

**மன்னார் நகர நுழைவாயில் பகுதியில் தனியார் பேருந்துகள் தரிப்பிடத்துக்காக இடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர முதல்வர் செபமாலை அன்ரனி டேவின்சன் தெரிவித்தார்.**



மன்னார் நகர நுழைவாயில் பெரிய பாலத்தை அண்மித்த பகுதியானது தனியார் பேருந்து தரிப்பிடமாக உபயோகிக்கப்படுகிறது . இது தொடர்பாக நகரசபை தலைவரிடம் கருத்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையமானது. பகுதி பகுதியாக கடைகள் அகற்றப்பட்டு வேலைகள் நடைபெற்று வந்தன.

தற்போது பேருந்து நிலையத்தின் முழுப்பகுதியில் உள்ள கடைகள் அகற்றப்பட்டு வேலைகள் வேகமாக நடைபெற்று வருகிறது.

மக்கள் நடமாடுவதற்கும் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு மக்கள்·இலகுவாக பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. மக்களின் இந்த பயண அசௌகரியங்களை நிவர்த்தி செய்வதற்காக நகர சபையால் பிரதான பேருந்து தரிப்பிடம் வேலை நிறைவு பெறும் வரை தற்காலிகமாகவே இடம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (213)

### எல்லையமைக்க கோரிக்கை

ஒட்டுசுட்டான் கமநல சேவைநிலையத்துக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் நீரேந்து பிரதேசத்திற்கு எல்லைகள் வகுக்கப்படவேண்டும் எனக் கமக்கார அமைப்புக்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

குளங்களின் எல்லைகள் வரையறுக்கப்படாமையினால் அருகே உள்ள காணிக்காரர்கள் குளத்துக்குரிய காணிகளைப் பிடித்து பண்படுத்திவருவதால், குளங்கள் தூரும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் குளத்தின் அணைக்கட்டுடன் வேலி அமைப்பதாலும்பாதிப்பு ஏற்படுகிறது. கமநலச் சேவை உதவி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதும் உடன் குளத்தினை பார்வையிட்டுச்சென்றுள்ளனர். குளங்களுக்கான எல்லைகள் வகுக்கப்படுமிடத்து அலைகரைகளில் கால்நடைகள் மேயவும் ஏதுவாகயிருக்கும். இருபோகங்கள் செய்யக்கூடியகுளமாகவும் சுமார் 200 ஏக்கர் விவசாயம் செய்யககூடியதாக இருந்தும் தற்போது செய்கைபண்ணப்படும் 85ஏக்கருக்கேநீர்போதாத நிலைஏற்படுகிறது.(500)



## ஈருருளிகள் வழங்கல்

வுனியா,டிச.1

இத்தாலி வடமேல் பிராந்திய கலைமாணிப் பட்டதாரிகளின் நிதிப்பங்களிப்புடன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கல்விமேம்பாட்டுப்பிரிவினால் வவுனியா மாவட்டத்தின் குருமன்காடு, நெளுக்குளம், வாரிக்குட்டியூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டது. (222)



## வாகனம் தடம்புரண்டதில் மாடு உயிரிழப்பு

கிளிநொச்சி, டிச.1

கிளிநொச்சி பரந்தன், ஏ -35 வீதியின் கண்டாவளைப் பகுதியில் கப் ரக வாகனம், மாடொன்றுடன் மோதி தடம்புரண்டுள்ளதால் மாடு உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து மரக்கறிகளை ஏற்றிக்கொண்டு பரந்தன் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனமே வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

வாகனத்துடன் மோதிய மாடு உயிரிழந்துள்ள போதும், சாரதி எவ்வித பாதிப்பும் இன்றி உயிர் தப்பியுள்ளார்.

இந்த நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (35)



## புதிய கட்டடம் திறந்துவைப்பு

வவுனியா,டிச.1

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நேற்று பகல் 10 மணிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா தெற்கு தமிழ்ப்பிரதேச சபையின் உறுப்பினர் கோ.அஞ்சலா வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்திருந்தார்.

பாடசாலையின் அதிபர் கே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிரதி அதிபர் கு.சிவமலரும் மதிப்புறு விருந்தினராக ஆசிரியரும், பழைய மாணவனுமான சந்திரமோகன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். கட்டடத்துக்கான இரண்டு இலட்சம் ரூபா நிதி உதவியைப் பிரான்சில் வசிப்பவரும் பாடசாலையின் பழையமாணவனுமான சுப்பிரமணியம் சிவகும்ாரன் வழங்கியிருந்தார். (110)



## சான்றிதழ்வழங்கும்நிகழ்வு

வவுனியா,டிச.1

வவுனியா வேப்பங்குளத்தில் அமைந்துள்ள அன்பகம் சிறுவர் இல்லத்து சிறுமிகள் அமைதிக் கல்வித்திட்டப் பயிற்சிகளை நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். கடந்த 25 ஆம் திகதி இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

கல்வித்திட்டத்தின் ஆசிரியர் திருமதி. யோ.ஜெயந்தி தலைமையில் அன்பகத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிஸ்கந்தராஜா சாந்தி கலந்துகொண்டிருந்தார்.

சமாதானபாராட்டு, உள்வலிமைசுயவிழிப்புணர்வு, தெளிவாகப் புரிந்துகொள்ளல், கண்ணியமான தேர்வு, நம்பிக்கையூட்டும் சடங்குகள் ஆகிய பாடத்திட்டங்களை நிறைவு செய்தமாணவர்களுக்குசான்றிதழ்கள்வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் மாணவிகளால் கல்வித்திடம் தொடர்பாக விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

அகிலஅலங்கைசமாதானநீதவான்செல்விஎஸ். இராஜலட்சுமி, இந்து சிறுவர் இல்லப் பொறுப்பாளர் கு.ஜெயராணி, ஓய்வுநிலை கிராம அலுவலர் திருமதி கு.லிங்கநாதன், அமைதிக்கல்வித்திட்ட இணைப்பாளர் ப.விமலநாதசர்மா, எஸ்.பாலசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (110)

## மாணவர்களுக்கு மதிப்பளிப்பு



முல்லைத்தீவு,டிச.1

முல்லைத்தீவு கள்ளப்பாடு பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது..

முல்லைத்தீவு கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2018 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வானது பாடசாலையின் முதல்வர் ந.கருணாகரனின் தலைமையில், 29 ஆம் திகதி இன்றைய நாள், பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (222)

# அலுவலக கணக்கு அறிக்கைகளில் தவறுகள் நடந்தால் சட்டம் பாயும்

## கணக்காளர் நாயகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.1

அலுவலக கணக்கு அறிக்கைகளில் தவறுகள் நடந்தால் சட்டம் பாயும் என்று கொழும்பு கணக்காய்வாளார் நாயகம் எச்.எம் காமினி விஜய சிங்கே திணைக்கள தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம்,மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண அமைச்சின் செயலர்கள்,திணைக்களத் தலைவர்கள்,பிரதேச செயலர்கள்,கணக்காளர்கள் ஆகியோருக்கும் கணக்காய்வாளார் நாயகதுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பபட்டது.

அலுவலக கணக்கு விவரங்கள் வருட இறுதியில் கணக்காய்வு செய்யப்படும். அதற்கு உரிய அதிகாரிகள் அலுவலர்களுக்கு வருகை தந்து அதனை பார்வையிடும் செயற்பாடு வருடாந்தம் நடைபெற்று வருகிறது. கணக்குகளில் ஏற்படும் தவறுகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படும். கணக்கில் பாரிய தவறு என்றால் விசாரணை நடத்தப்படும் நடைமுறையே இதுவரை காணப்பட்டது. கணக்காய்வு தொடர்பான நடவடிக்கைகள் மோசடி இல்லாமல் நடைபெறுவதற்கு கணக்காய்வு சட்டவரைவு தற்போது ஆக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் கடந்த ஜீலை மாதம் 17 ஆம் திகதி நடைமுறைக்கு வந்துள்ளது.இதில் அதிகாரிகளின் கடமைகள்,நோக்குகள் ,அதிகாரம்,சட்ட நடைமுறை என்பன தெளிவாக உள்ளடக்கப்பட்டு சட்ட வரைவு ஆக்கப்பட்டுள்ளது. ஆகவே கணக்கு அறிக்கைகளில் ஏற்படும் தவறுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் மிகை கட்டணம் செலுத்தும் நிலை மேலும் வேறு சட்ட நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்படுவர். ஆகவே கணக்கு அறிக்கைகள் சரியானதாக அமைய வேண்டும்.அல்லது புதிய சட்ட வரைவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)



## மாணவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.1

சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் முன்பள்ளியில் கல்விகற்று அடுத்த ஆண்டு பாடசாலைகளில் இணையவுள்ள மாணவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

பிரிவுபசார விழாவும் விருதுகள் வழங்கல் நிகழ்வும் நேற்று முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றன.

முன்பள்ளி ஆசிரியை தர்மினி தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் விருந்தினராகக் கலந்து கொண்டு சிறார்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களையும் வழங்கினார். (9)

## கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

கிளிநொச்சி, டிசெ. 1

கிளிநொச்சி நகர் மற்றும் இரணைமடுச் சந்தி உள்ளிட்ட ஏ9 வீதியில் கட்டாக்காலி மாடுகள் வீதியின் நடுவில் நிற்பதால் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட குறித்த பகுதிகளில் இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும், அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதி ஊடாக போக்குவரத்து அதிகளவில் இடம் பெற்று வரும் நிலையில் இவ்வாறு வீதியின் நடுவில் மாடுகள் காணப்படுவதால் பல்வேறு விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் தமது வாகனங்கள் சேதமடைவதோடு, பல மாடுகள் இறந்தும்,காயப்பட்டும் வருவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்டபோது மாடுகள் வீதிகளில் அதிகமாக நடமாடுகன்றன நேற்றைய தினம் சந்தைப்பகுதியில் நின்ற மாடுகள் பிடிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது. தொடர்சியாக மாடுகள் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படும் என தெரிவித்தார். (6)



## கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு வடக்கில் சிறப்பான சட்ட திட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்கு மாகாணத்தில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்பான சட்ட திட்டங்கள் தேவை என்று மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வசாவிளான் வேலுப்பிள்ளை வித்தியா லயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கல்வியை வளர்ச்சியடைய செய்வதற்கு ஏனைய மாகாணங்களுக்கு அப்பாற்பட்ட சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் இது தொடர்பில் நான் சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றேன்.

ஏனைய மாகாணங்களில் உள்ள சட்டம் இங்கே போதாமல் இருக்கிறது. கல்வித்துறையினை ஒழுங்குபடுத்துவதற்கு கடந்த 30 வருட கால போரினால் பாதிக்கப்பட்ட இந்த பகுதிக்கு சிறப்பான சட்ட திட்டங்களை அமுல்செய்ய வேண்டிய தேவை எழுகின்றது. அது தொடர்பில் நாம் அனைவரும் ஒன்றாகப் பேசி முடிவு செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பெருமையை கூறும் கல்வியை முன்னேற்ற ஆசிரியர்கள் சம்பளத்திற்கு மட்டும் வேலை செய்தால் போதாது அவர்கள் அதற்கு மேலாக சேவையாற்ற வேண்டும். ஆசிரியர்கள் கூலிக்காக வேலை செய்ய கூடாது அவர்களுக்கு தூர நோக்கு வேண்டும். மாணவர்கள் மீது அன்பு, கருணை இரக்கம் காட்டுதல் வேண்டும். பாடசாலைக்கு வரும் மாணர்வகளுக்கு தாய் தந்தையராக அவர்கள் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே மாணவர்களை கல்வியில் முன்னேற்ற முடியும். இந்த பாடசாலையை ஆரம்பித்த வேலுப்பிள்ளை ஐயா போன்று பலர் முற்காலத்தில் சமூக அக்கறையுடன் ஆசிரிய சேவையாற்றியுள்ளார்.

இங்கு கல்வியை மேம்படுத்துவதற்காக மாணவர்களின் நன்மை கருதி கடுமையான தீர்மானங்களை அதிகாரிகள் எடுக்க வேண்டும். தவறு செய்தால் முதலில் ஆலோசனை வழங்க வேண்டும் அடுத்து எழுத்து மூல உத்தரவினையும் அதனையும் பொருட்படுத்தாதோருக்கு தண்டனையும் வழங்குவது கட்டாயமானது -என்றார்.

பாடசாலை அதிபர் யூட் மரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் வடக்கு பிரதேசசபைத் தலைவர் எஸ்.சுகிர்தன், கல்வி அமைச்சின் செயலர் பா.சத்தியசீலன், பிரதேச செயலர் சிவசிறி, பிரதி கல்வி பணிப்பாளர் ,மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(7)



## மீனவர்களின் மேம்பாடு கருதி களப்புப் பகுதிகளில் விடப்பட்டன மீன் குஞ்சுகள்

முல்லைத்தீவு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் களப்பு பகுதிகளில் தொழில் புரியும் மீனவர்களின் மேம்பாடு கருதி 10 லட்சம் ரூபா பெறுமதியிலான இறால் மற்றும் மீன் குஞ்சுகள் விடப்பட்டதாக மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம் தெரிவிக்கின்றது.

திணைக்களத்தின் களப்பு அபிவிருத்தி திட்டத்தின் நாயாறு களப்பு பகுதியிலேயே இவ்வாறு 8 லட்சம் இறால் குஞ்சுகள் நேற்றைய தினம் விடப்பட்டுள்ளன. அதேபோன்று களப்பினை அண்டிய பகுதிகளில் 80 ஆயிரம் மீன் குஞ்சுகளும் விடப்பட்டன.

விடப்பட்ட மீன் குஞ்சுகளின் பெறுமதி தலா 2 ரூபா வீதம் ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபாவும், இறால் குஞ்சுகள் ஒரு ரூபா வீதம் 8 லட்ளும் ரூபா பெறுமதியினையுடையவை.

தற்போது களப்பு பகுதியில் விடப்படும் இறால் குஞ்சுகளும் மீன் குஞ்சுகளும் 3 மாத காலத்தில் அதன் வளர்ச்சியை எட்டிவிடும். அப்போது 3 மீன்கள் ஒரு கிலோ எடையை எட்டும். அதன் மூலம் சிறு மீன்பிடியாளர்கள் நன்மை அடைவார்கள்.

இவ்வாறே இறாலும் 3 மாத காலத்தில் வளர்ச்சி அடைந்ததும் அவற்றில் இருந்து சுமார் 15 ஆயிரம் இறால் உற்பத்தியினை எட்ட முடியும் . அவற்றின் மூலம் இறால் பிடிப்பவர்களும் வருமானம் ஈட்டமுடியும். எனத் தெரிவித்தனர். (105)

## பாதீடு தொடர்பான விவரங்கள் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பான விவரங்கள் நேற்று மதியம் முதல் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு எதிர் பார்க்கப்படும் பாதீடு தொடர்பான முதலாவது வாசிப்பு நேற்று சபையில் சமர்பிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பான சிறப்பு அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் அடுத்த ஆண்டுக்கான உத்தேச மதிப்பீடுகள் சுமார் 94 மில்லியன் பெறுமதியான பாதீடு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 20 மில்லியனில் 25 வீதிகள் சீரமைப்பு. 21 லட்சம் செலவில் சுமார் 25 ஆயிரம் ஆதனங்களுக்கான இலக்கமிடல் மற்றும் சுகாதாரம் ,தெரு மின் விளக்கு பொருத்தல்,தளபாட கொள்வனவு ,நூலகங்களுக்கான புத்தக கொள்வனவு,உப அலுவலகங்களின் சீரமைப்பு,தண்ணீர் விநியோகம் போன்றவருக்கும் குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.பாதீடின் முதலாம் வாசிப்பு நேற்று சபையில் நடைபெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து, மக்களின் பார்வைக்காக நேற்று மதியம் முதல் உப அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. 14 நாள்கள் காட்சிப்படுத்தப்பட்டு பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி பாதீடு தொடர்பான இரண்டாம் வாசிப்பு நடைபெற்று ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)



# வெள்ள இடரால் பாதிக்கப்பட்டோருக்கு உணவுப் பொருள்கள்

தென்மராட்சி, டிசெ. 1
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மகிழங்கேணி, உதயசூரியன் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு ஞானம் பவுண்டேஷன் அமைப்பால் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து உலருணவுப் பொதிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் இ. ஆனோல்ட், யாழ் மாவட்ட மூத்த பொலிஸ்மா அதிபர் கணேசநாதன், யாழ்ப்பாண மாவட்ட இடர்முகாமைத்துவ திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரவி, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ம-159)

# 50 வருடங்களுக்கு முன்னர் இறந்தவரின் பெயரில் உறுதி மோசடி

அச்சுவேலி, டிசெ.1
ஐம்பது வருடங்களுக்கு முன்னர் காலமான தமிழ் அரசியல் சமூக சமயப் பிரமுகரின் காணி 2015ஆம் ஆண்டு அவரே கையொப்பமிட்டு விற்பனை செய்தார் என்று மோசடியாகத் தயார் செய்யப்பட்ட உறுதி வலி. கிழக்குப் பிரதேச சபையில் காணி பெயர் மாற்றம் செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
1965ஆம் ஆண்டு காலமான கந்தையா வைத்தியநாதனுக்குச் சொந்தமான இருபாலைப் பகுதியில் உள்ள ஆதனம் 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 03ஆம் திகதி அவரால் உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்று உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனப் பெயர் மாற்றத்துக்கு வலி. கிழக்குப் பிரதேசசபைக்குவிண்ணப்பித்திருப்பது மோசடியான செயற்பாடு என்பதற்கான ஆவணங்கள் என்ற வகையில் கந்தையா வைத்தியநாதனின் அந்தியேட்டி கல்வெட்டு உள்ளடங்கிய ஆவணங்கள் எதிர்தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
1896ஆம் ஆண்டு பிறந்து 1985ஆம் ஆண்டு காலமான கந்தையா வைத்தியநாதன் தமிழ் அரசியல்வாதியாகவும் வீடமைப்பு சமூக சேவைகள் அமைச்சராகவும் வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் கொழும்பு இந்துக் கல்லூரியின் அதிபராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-11)

## யாழ்ப்பாணம் நகரப் பகுதியில்

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்த வர்த்தக நிலையங்கள் அகப்பட்டன

*யாழ்ப்பாணம், டிசெ. 1*
*யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் எடுத்துக் கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கையின் பயனாக ஒரே நாளில், சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் இயங்கி வந்த மூன்று தேநீர்க் கடைகள், நான்கு பழக்கடைகள், வெதுப்பகம், பிரபல்யமான வர்த்தக நிலையம் ஆகியன அகப்பட்டன.*

பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து யாழ்ப்பாணம் மாவட்டப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்ஜீவன் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு அருகாமையிலுள்ள தேநீர்க் கடைகளையும் பழக்கடைகளையும் சோதனைக்கு உட்படுத்தியபோது மூன்று தேநீர்க் கடைகள் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் இயங்கி வந்தமையையும் 4 பழக்கடைகளில் பழுதடைந்த பழங்கள், திகதி காலாவதியான பொருள்கள், சுட்டுத் துண்டில்லாத பொருள்கள் ஆகியன களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.
இதேவேளை, திகதி காலாவதியான ஜோக்கட் வழங்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதாரத் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள பிரபல்யமான வர்த்தக நிலையத்தைச் சோதனைக்குட்படுத்திய சுகாதாரப் பரிசோதகர் திகதி காலாவதியான ஜோக்கட், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் ஆகியன அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
அதேநேரம் கஸ்தூரியார் வீதியிலுள்ள பிரபலமான வெதுப்பகம் ஒன்றைச் சோதனைக்கு உட்படுத்திய பரிசோதகர் திகதி காலாவதியான பாண், சுட்டுத் துண்டில்லாத பணிஸ், கேக் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் திகதி காலாவதியான நிறமூட்டி வகைகள் என்பன இருந்தமையை அவதானித்துள்ளார்.
இதையடுத்து குறித்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை விசாரணைக்கு வந்தன. அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து மூன்று தேநீர்க் கடைகளையும் மூடிச் சீல் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், நான்கு பழக்கடைகளின் உரிமையாளர்களுக்கு 16 ஆயிரம் ரூபாவும், பிரபல வர்த்தக நிலைய முகாமையாளருக்கு 16 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார். தேநீர்க்கடைகள் பற்றி சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின் கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.
வெதுப்பக உரிமையாளர் மன்றுக்குச் சமூகமளிக்காமையால் அவருடைய வழக்கு விசாரணை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இவருக்கு எதிராகச் சுகாதாரச் சீர்கேடு சம்பந்தமாக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் விசாரணைக்காக நிலுவையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# வீதிகளுக்கு மின்விளக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 1
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட முதன்மை வீதிகளுக்கு வலுக் கூடிய மின் விளக்குகளை பொருத்தி வைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, இருபாலை வீதி போன்ற முதன்மை வீதிகளுக்கு இந்த வலுக்கூடிய வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. 150 வீதி விளக்குகள் முதல் கட்டமாக பொருத்தப்படவுள்ளன. (ம-17)

# பருத்தித்துறை பிரதேச சபை வரவு– செலவு பொதுமக்கள் பார்வைக்காக

யாழ்ப்பாணம், டிசெ. 1
பருத்தித்துறைப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.
சபைக்குட்பட்ட புலோலி, குடத்தனை, செம்பியன் பற்று பொதுநூலகங்களிலும், மந்திகையில் உள்ள தலைமை அலுவலகம் ஆகியவற்றிலும் நேற்று முதல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை இந்த வரவு - செலவுத் திட்டத்தை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



*யாழ்ப்பாணம் கட்டுடை மானிப்பாய் இடிகுண்டடி வீதியால் நேற்றுமுன்தினம் காலை பயணித்த வாகனம் பாதையை விட்டு விலகிப் புதையுண்டது. (63)*



*காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட நாவலர் குருபூசை நிகழ்வு காரைநகர் கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (ம-222,250)*

# கோழிக் குஞ்சுகள் மலிவு விலையில்!

அச்சுவேலி, டிசெ. 1
"அச்சுவேலி அரச கோழிப் பண்ணையில் கலப்பினக் கோழிக் குஞ்சுகள் நியாய விலையில் விற்பனைக்கு உள்ளன. பொதுமக்கள் மற்றும் பண்ணையாளர்கள் கொள்வனவு செய்து வளர்க்கலாம்" என்று பண்ணைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்தார்.
விற்பனைக்கு உள்ள கோழிக் குஞ்சுகள் தொடர்பாக அச்சுவேலி அரசகோழிப் பண்ணையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மேலும் தகவல் தெரிவித்ததாவது:
"அச்சுவேலி அரச கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு நோய்த் தடை மருந்துகள் உரிய காலப்பகுதியில் கொடுக்கப்பட்டு ஒரு மாத காலம் மற்றும் கூடிய காலம் வளர்க்கப்பட்ட கலப்பினக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும்" -என்றார். (ம-11)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# நடக்கும் பேச்சுக்கு என்னதான் பொருள்?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு ஆதரவளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. இதற்கான கடிதத்தையும் அது அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளது. இதையடுத்து ஆட்சியமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மைப் பலம் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கடிதம் கொடுக்கப்பட்டதை அடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் பேச்சுநடந்துள்ளது. அதாவது ரணிலின் ஆட்சிக்கு ஆதரவளிப்பதாகக் கூட்டமைப்புத் தெரிவித்த பின்னரே, அதற்குப் பிரதியீடாக அந்த ஆட்சி செய்யப்போகும் விடயங்கள் குறித்த பேச்சுநடத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிபந்தனையற்ற ஆதரவை நீடித்துள்ளது என்பதுதான்.

ஏனெனில், வைகாசி மாதம் 26ஆம் நாள் ஆட்சி மாற்றம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசுக்குத் தமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறது. அதன் பொருள் ஆட்சிக்கவிழ்ப்புக்கு முன்னரான நிலைக்குத் திரும்புவதைக் கட்சி ஆதரிக்கின்றது என்று வெளியே காட்டிக்கொள்வதுதான். இதன் மூலம் வைகாசி 26ஆம் திகதிக்கு முன்னரான அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறியமைக்குத் தாம் பொறுப்பாளிகள் அல்லர் என்று வியாக்கியானம் செய்யும் வாய்ப்பு கூட்டமைப்புக்குக் கிடைக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னிணியின் ஆட்சிக்கு நேரடியாக ஆதரவளித்தால் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும் என்கிற காரணத்தால் கூட்டமைப்பு இத்தகைய ஒருநாசூக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிக்கும். எப்படியிருந்தாலும் வைகாசி 26ஆம் திகதிக்கு முன்பாகவும் நிபந்தனையின்றி ரணிலுக்கு வழங்கிவந்த ஆதரவை நீடிப்பதற்குக் கூட்டமைப்பு முடிவு செய்துவிட்டமை உறுதி.

இதையடுத்து ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களுடன் நடந்த பேச்சுக்களில் புதிய அரசமைப்பு முயற்சிகளைத் தொடர்வது, அரசியல் கைதிகளின் விடுவிப்பு, படையினர் வசம் உள்ள காணிகளை விடுவிப்பது, பொறுப்புக்கூறல் என்பன தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இவை தொடர்பில் கால அட்டவணை ஒன்றை வகுத்து அதற்குள் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஐ.தே.முன்னணித் தரப்பு இணங்கியது. இனப்பிரச்சினை தொடர்பாக 30 வருடங்களாகத் தீர்வு, தீர்வு என்று பேசிக் கொண்டிருப்பது நியாயமானது அல்ல என்று ராஜித சேனாரத்ன போன்ற தலைவர்கள் அக்கறையோடு பேசினார்கள் என்றும் தெரிகிறது.

ஆனால், யதார்த்தம் என்னவென்றால் ரணிலும் ஐ.தே.முன்னணியும் என்னதான் கால அட்டவணை போட்டாலும் அரச தலைவராக மைத்திரி இருக்கும் வரையில் அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, பொறுப்புக்கூறல் என்பவற்றில் தீர்க்கமான முடிவை ரணில் தரப்பால் எடுக்க முடியாது. அமைச்சுக்களைப் பிரித்து, அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் அரச தலைவரிடம்தான் இருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சையும் சட்டம் ஒழுங்கு அமைச்சையும் மைத்திரி தன் வசம் எடுத்துக்கொண்டால், கால அட்டவணை எல்லாம் அர்த்தமற்ற விடயம். அட்டவணையே போட்டாலும் அதனை ரணில் தரப்பால் நடைமுறைப்படுத்த முடியாது. அதுபோன்றே புதிய அரசமைப்பு முயற்சியும். சுதந்திரக் கட்சியின் ஆதரவு இன்றி இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்பட முடியாது.

ஆகமொத்தத்தில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடத்தும் பேச்சுக்கு என்ன பொருள் இருக்கிறது? யாரை ஏமாற்றுவதற்கு இந்தப் பேச்சு?



# இதுவே தொடரும்...?

ஏரம்பு சுப்பையா

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பம் தற்போது ஓரளவுக்குத் தணிந்து செல்வதாகவே கருத முடிகின்றது. ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி மீதமுள்ள காலத்தையும் கடந்து முடிக்கப்போவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மீதமுள்ள அந்தக் காலம் எப்படி நகரப்போகின்றது என்று எவருக்கும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆனால், இந்தக் குழப்பத்திலிருந்தும் அதன் தெளிவிலிருந்தும் பல உண்மைகள் மக்களுக்கு வெளிப்பட்டிருக்கின்றன. முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவுக்கு இருக்கின்ற அரசியல் நுழைவிலுள்ள அவா, ராஜபக்ச குடும்பம் அரசியல் நுழைவுக்காக முன்னெடுத்திருந்த பேரம் பேசல்களும், அவை எழுப்பிய ஜனநாயகம் குறித்த கேள்விகளும், மைத்திரிபால சிறிசேன என்கின்ற நம்பிக்கை நட்சத்திரத்தின் போலித்தனம், மகிந்த - மைத்திரி உறவின் நிலைப்பாடு மற்றும் ரணில் விக்கிரமசிங்க, மகிந்தவுக்குண்டான பன்னாட்டு ஆதரவுத் தளம், அந்த ஆதரவுத் தளம் கொழும்பு அரசியலில் செல்வாக்குத் செலுத்தும் விதமும் சம நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற சிறுபான்மைக் கட்சி பிரதி பலிக்கின்ற மக்கள் மீதான கரிசனையில் பன்னாடுகளின் ஊடாட்டம் எனப் பல விடயங்கள் தெளிவுபட்டிருக்கின்றன.

## மகிந்தவின் ஓயாத முயற்சி

தன்னுடைய இரண்டாவது பதவிக்காலம் முடிவடையாமல் இருக்கும் பட்சத்தில் இலங்கை அரசமைப்பில் இல்லாத, மூன்றாவது தடவையாகவும் அரச தலைவராக ஆகுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, இரண்டாவது பதவிக்காலச் சுகத்தையும் அனுபவிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் தோல்வி கண்டிருந்தவர்தான் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்காத அவர், போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்ற மகுடத்துடன் ஆட்சியில் தொடர்ந்திருந்தாலும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் கூட இனப் பிரச்சினை, சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்குத் தவறியிருந்தார். இதனால் சிறுபான்மையினர் மத்தியில் இரட்டிப்பு வெறுப்புக்கு ஆளாகியிருந்தார். அவருடைய குடும்ப ஆட்சியாலும், அந்த ஆட்சிக்குள் நிகழ்ந்த ஊழல், மோசடிகளாலும் குறிப்பிட்டளவு பெரும்பான்மை மக்கள்கூட அவர் மீதான நம்பிக்கையை இழந்திருந்தனர். இதனால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார் அவர் என்பது வரலாறு. ஆனாலும் இலங்கையின் தலைமை அமைச்சராகவும், அரச தலைவராகவும் இருந்த அவருடைய அரசியல் ஈர்ப்பு இன்னமும் குறைந்திருக்கவில்லை. அரசியல் நுழைவில் அவர் காட்டுகின்ற தீவிரத்தை எடுத்துக்காட்டுவதாகவே அண்மைக்காலச் சம்பவத்திலிருந்து அவர் பற்றிய மதிப்பீடு இருக்கிறது. இதனால் மகிந்த ராஜபக்ச ஓயப்போவதில்லை என்பதை இந்த விடயத்திலிருந்து மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

## மைத்திரிபாலவின் உண்மை முகம்

மகிந்த எதிர்ப்புக் கோசங்களை முன்னிறுத்தித் தேர்தலில் குதித்திருந்த மைத்திரிபால சிறிசேனவிடத்தில் உண்டாகியிருந்த மாற்றத்தையும் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அடுத்த தடவை அரச தலைவர் தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்றும் கூறியிருந்தார் அவர். கூட்டாட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசமைத்த அவர் அவை எல்லாவற்றிலும் இருந்து தவறி நடந்ததையே நடந்து முடிந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன. அத்துடன் கூட்டாட்சிக்குள் இருந்த தன்னுடைய போலி முகத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் மைத்திரிபால சிறிசேன.

கொழும்பு அரசியலில் கடந்த தசாப்தத்தைக் கைப்பற்றியிருந்த மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரம சிங்க ஆகிய சிங்களத் தலைவர்களால் சிறுபான்மையினருக்கான எந்தவொரு தீர்வும் கிடைத்திருக்கவில்லை என்பது வெளிப்படையானது.

## மீதமுள்ள ஆட்சியும் மக்களும்

கொழும்பு அரசியலில் கடந்த தசாப்தத்தைக் கைப்பற்றியிருந்த மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகிய சிங்களத் தலைவர்களால் சிறுபான்மையினருக்கான எந்தவொரு தீர்வும் கிடைத்திருக்கவில்லை என்பது வெளிப்படையானது. மக்கள் தன்னெழுச்சி கொள்ளுமளவுக்கு நிலைமை மாறி வந்துள்ளதே தவிர, அரசுகள் எதையும் தாமாக முன்வந்து மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கவில்லை. அரச தலைவர் மைத்திரிப்பால சிறிசேனவால் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பத்துக்குப் பின்னர் அதே கூட்டரசின் ஆட்சி மீதமுள்ள காலப்பகுதி முழுதும் நீடித்தாலும் அது இந்தப் பிளவு அல்லது குழப்ப நிலையின் பிரதிபலிப்புடனேயே தன்னுடைய காலம் முழுவதையும் கடத்தும் என்று எவ்வித ஐயப்பாடுகளும் இன்றிச் சொல்லிக் கொள்ள முடியும். ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கூட்டமைப்பு வழங்கிய ஆதரவின் பின் சுமூகமாக அரசியல் நிலை அமையுமாயின், இனிக் கூட்டரசுக்குள் முளைக்கின்ற புதிய புதிய இழுபறிகளுடனேயே அது காலத்தைக் கழிக்க முற்படும் என்கின்ற எதிர்பார்ப்புக்களே அதிக அளவில் உள்ளன. அந்த இழுபறிகளுக்கு மத்தியில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த சிறுபான்மைத் தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளும். இப்போது போலவே இனித் தொடரும் காலத்திலும் அவை ஓர் ஓரமாக வைக்கப்படாது என்று நம்பத்தகுந்த அனைத்துச் சாத்தியங்களும் இருக்கவே செய்கின்றன.

ந.லோகதயாளன்

# பட்டறிவுடன் காய் நகர்த்துவது சிறந்தது!

பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதோடு அரசியல் கைதிகள் விவகாரம், காணி விவகாரம், வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் திட்ட முன்மொழி வுகளில் சிறப்புக் கவனம் செலுத்துதல் எனப் பல வாக்குறுதிகளின் அடிப்படையில் ஐ.தே.முன்னணி அரசுக்குத் தமது ஆதரவை வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கு முதலிலும் பல தடவைகள் கூட்டமைப்பின் ஆதரவுக்காக இப்படிப் பல வாக்குறுதிகளும், உறுதி மொழிகளும் வழங்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 26ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் குழப்பத்தை அடுத்து ஓரளவாவது அந்த நிலமை தணிந்துபோவதற்கான சாத்தியங்கள் தற்போது தென்படுவதாகவே கருத முடிகிறது.

### மகிந்த அணியின் வீழ்ச்சி

மகிந்த அணி மிகப் பலம் வாய்ந்தது. முன்னைய அரசாட்சிக்கு உரித்துடையதாகவிருந்தது எனப் பல காரணங்களால். எவ்வாறாயினும் அந்த அணி நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கும் என்றே பலரும் நம்பினர். எதிர்பார்ப்புப் பொய்யாகிப்போன நிலமையில் நாடாளுமன்று குழம்பிப்போய், அடிதடியில் முடிந்தாலும் இந்தப் பிரச்சினை முடிந்த பாடில்லை. பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளாகியது. இதற்காகக் கூட்டமைப்பின் பால் கவனம் திரும்பியது. மகிந்த அணியும், ரணில் அணியும் வலை விரிக்க மகிந்தவுக்காக அரச தலைவரும் ஆளுநர்களும் ஆட்சேர்ப்பு முயற்சியில் ஈடுபட்டனர். இதேநேரம் பன்னாட்டு இராஜதந்திரிகளும் தமது பங்கைச் செலுத்தினர்.

### கூட்டமைப்பின் முடிவு அமையப் பெற்ற விதம்

இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள ஆட்சியாளர்களில் தற்போது ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களில் மகிந்த அணியை என்றுமே தமிழ் மக்கள் மன்னிப்பதற்குத் தயாராக இல்லாத நிலமையே காணப்படுகின்றது. அதேநேரம் ரணிலின் கால இழுத்தடிப்பில் நம்பகத் தன்மை அற்ற நிலையிலேயே மைத்திரியை நம்பியிருந்தனர். ஆனால், இவர்கள் இருவரையும் மிஞ்சிய நிலையில் மைத்திரி இருப்பதால் இனி அவரையும் நம்பும் நிலமையில் தமிழ் மக்கள் இல்லை. இதனால் பன்னாடுகளின் விருப்பத்தைக் கூட்டமைப்பு நாடி பிடித்தது. இதற்காக இலங்கையில் உள்ள பன்னாட்டுப் பிரதிநிதிகள், ஐ.நா அதிகாரிகள் மட்டுமன்றி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டும் குறித்த விடயம் பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் எட்டப்பட்ட தீர்மானத்தின் பால் மேற்கொண்ட முடிவாகவே கூட்டமைப்பின் தற்போதைய முடிவு காணப்படுகின்றது.

### சிறப்புச் சந்திப்பும் தீர்மானமும்

2018.11.29அன்று மாலை 6 மணியளவில் அலரி மாளிகையில் ஐ.தே.முன்னணி உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற சிறப்புச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா , எம்.ஏ.சுமந்திரன் உட்பட 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.முன்னணியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசா, ராஜித சேனாரட்ண, ரிசாத் பதியுதீன், ரவூவ் ஹக்கீம் , மனோ கணேசன் உள்ளிட்ட 10நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது எட்டப்பட்டப் பட்ட முடிவின் பிரகாரம் அரசியல் தீர்வை பெப்ரவரி மாதத்திலும், அரசியல் கைதிகள் விடயம் மார்ச் மாதத்திலும், காணி விடயம் அரச தலைவரின் முடிவின் பிரகாரம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் எடுக்கும் தீர்மானத்தை அடுத்து ஆய்வுக்கு உட்படுத்துவதாகவும், வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியவை அபகரித்து வைத்துள்ள நிலங்களின் அனைத்து விவரங்களும் திரட்டி மீள வர்த்த மணிக்கு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு எட்டப்படும் எனவும் கூறப்பட்டது.



### கைதிகள் விடயத்தில் அறிக்கைகள் வேண்டாம்

இந்தச் சந்திப்பில் அரசியல் கைதிகள் விடுதலைக்கு நாடாளுமன்றில் பிரேரணை சமர்ப்பிக்கும் யோசனை முன்வைக் கப்பட்டபோது அவ்வாறு பிரேரணை சமர்ப்பித்துக் கைதிகளை விடுவிப்பதானால் கால விரயமே அன்றி அது செயல்வடிவம்பெறாது அரசியல் தீர்மானத்தின் பிரகாரம் அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் காணாமல் ஆக்கப்பட்டவர் விடயத்தில் விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் சுமந்திரன் வேண்டுகோள் விடுத்தார். இதேபோன்று முல்லைத்தீவு மாவட்ட மகாவலி 'எல்' வலயம் தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு இவ்வாறு தீர்மானம் எட்டப்பட்டிருக்கிறது.

### இன்றுவரை காற்றில் பறந்து கொண்டிருக்கிற வாக்குறுதிகள்

கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் தலைமை அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போதும் ரணில் அரசால் வழங்கப்பட்ட உறுதிப்பாட்டுக்கு அமைய ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்திருந்தது. அதன்போதும்கூட தமிழ் மக்களின் நீண்ட கால அவலங்களாகவும் உடனடித் தேவைகளாகவும் உள்ள 10 விடயங்களை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் நிறைவேற்றி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதில் கூட்டு அரசுக்காக இணக்கம் தெரிவித்திருந்த அரசமைப்பை எதிர்வரும் மாகாண சபை அறிவிப்பிற்கு முன்னர் நிறைவு செய்து அதை 2இக்கு 3 என்ற பெரும்பான்மையுடன் நிறைவேற்றல். வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் பிரதேசத்தில் படைகள் வசம் தொடர்ந்தும் உள்ள நிலப்பரப்புக்களை விடுவித்தல்.; சிறையில் வாடும் அரசியல் கைதிகள் அனைவரையும் மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தல்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த ஓராண்டாக வீதியில் உள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம் என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த உருப்படியான முன்னேற்றமும் இல்லாதமையினால் அதற்கான பொறுப்புக்கூறலுடன் உரிய தீர்வைக் கூறுதல். வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் தொழில் முயற்சி என்னும் பெயரில் குடியேற்ற முயற்சியோடு அந்தப் பகுதி மக்களின் உரிமை மறுக்கப்படுவது தொடர்பில் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டும் விடயத்துக்கு உரிய தீர்வு வழங்குதல். வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்றியுள்ள நிலையில் விசேடமாக வேலை வாய்ப்பு வழங்கி அதற்கான தீர்வை வழங்குவதோடு தெற்கில் இருந்து வடக்குக் கிழக்குப் பகுதிக்கு நியமனம் வழங்குவதை நிறுத்துதல். வடக்கு கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்களுக்கும் தமிழ் அரச அதிபர்களை நியமிப்பதை உறுதி செய்தல். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டங்கள் அபிவிருத்திகளின்போது மாகாண அரசின் கொள்கைகள் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு திட்டத் தயாரிப்பின்போதே கருத்தைப் பெறுதல் உள்ளிட்ட 10 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் இவற்றில் எவையுமே இன்று வரை முழுமை பெறவில்லை.

இந்த நிலையிலேயே தற்போதைய வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது. இதனால் முன்னைய பட்டறிவின் அடிப்படையில் கூட்டமைப்பு இதற்கான தன்னுடைய நிலைப்பாட்டையும், அடுத்த கட்ட நகர்வையும் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் இதன் மூலம் தொடர்ந்து ஓர் ஆண்டுக்கு நகரப்போகும் ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எட்டுகின்ற முன்னேற்றம் என்ன என்பதன் விளைவே இந்தக் காரியத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும். இதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# மல்லாகம் எரிபொருள் நிரப்பு நிலையச் செயற்பாடு இங்குள்ள 'கூட்டுறவு'க்கு நல்ல எடுத்துக்காட்டு!

வீட்டிலிருந்து உந்துருளியில் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்துக்குச் செல்வதற்காக கே.கே.எஸ் வீதி வழியாகப் பயணித்துக்கொண்டிருந்தபோது. உந்துருளியின் எரிபொருள் தாங்கியில் இருந்த பெற்றோல் முடிந்து அது இயங்க மறுத்தது. உந்துருளியை உருட்டிக்கொண்டு மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அடைந்தேன். அங்கு எரிபொருள் நிரப்பும் இயந்திரத்தில் ஏதோ (பழுது பார்த்தல் வேலை என்று தோன்றவில்லை) வேலைகளை இருவர் செய்து கொண்டிருந்தனர். என்னுடைய உந்துருளிக்கு எரிபொருள் நிரப்புமாறு அங்கு நின்ற பணியாளரைக்கேட்டேன். கடமையில் இருந்த பணியாளர் "பெற்றோல் முடிந்துவிட்டது" என்று பதிலளித்தார்.

உந்துருளிக்கான எரிபொருளை நிரப்ப வேண்டுமாயின் மூன்று கிலோ மீற்றர்கள் பயணித்துச் சுன்னாகம் சென்று எரிபொருளைப் பெற்று வர வேண்டும் என்பதால். அங்கேயே ஓர் ஓரமாக உந்துருளியை நிறுத்தி விட்டுப் பேருந்துக்காக அவ்விடத்திலுள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் காத்திருந்தேன். பத்து நிமிடங்கள் கழிந்தன. பேருந்து வருவதாயில்லை. எரிபொருள் நிரப்பு நிலையத்தை நோக்கி வந்த மகிழுந்து ஒன்றில் இருந்து பொலிஸார் இருவர் இறங்கினர். அவர்கள் தெல்லிப்பழை அல்லது காங்கேசன் துறைப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

எந்தவித தாமதமும் இன்றிச் செயற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்கள் வேண்டிய எரிபொருளை நிரப்பி அவர்களை வழியனுப்பி வைத்தனர். என்னைப் போலவே பொதுமக்கள் பலரும் அவ்விடம் வருகை தந்து எரிபொருள் (பெற்றோல்) இல்லை என்ற பதிலோடு திரும்பிச் சென்று கொண்டிருந்தனர்.

இது குறித்து எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த பணியாளரை அணுகிக்கேட்டேன். மாதந்தோறும் பொலிஸ் திணைக்களத்துக்கெனக் குறித்தளவு ஒதுக்கீடு இருப்பதாகவும், அவர்களை முகம்சுழித்துத் திருப்பி அனுப்ப முடியாது என்றும், அதிக இலாபத்தை அவர்கள் சம்பாதித்துத் தருகிறார்கள் என்றும் அவர் பதிலளித்தார்.

உண்மையிலேயே எரிபொருள் தீர்ந்துவிட்டது என்றால் அதுகுறித்த பொது அறிவித்தலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாகக் காட்சிப்படுத்தியிருக்கலாம். பொதுமகனுக்கு எரிபொருள் தீர்ந்துவிட்டது என்று கூறிச் சேவை நோக்கமற்ற ஒரு முகத்தையும், அதிகாரத் தரப்பினரிடம் விசுவாசமான இன்னொரு முகத்தையும் காட்டுகின்ற அமைப்புகளை 'மக்கள் சேவை' நிலையங்கள் என்ற தராதரத்தில் எப்படி நோக்க முடியும்? பொதுச் சேவையில் அனைவரையும் சமத்துவமாக நடத்த வேண்டும். இவ்வாறு பாராபட்சம் காட்டிச் செயற்படக் கூடாது. அப்படிச் செயற்படுகின்ற இவர்களுக்கு 'கூட்டுறவு' என்ற பெயர் பொருத்தமற்றதாகவேபடுகிறது என்பது பொதுமகனாக என்னுடைய கருத்து.

செ.உமாசுதன்


## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகை யால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப் பாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# டெல்லியில் விவசாயிகள் திரண்டு போராட்டம்

டெல்லி.டிச.1
நியாயமான கொள்முதல் விலை, விவசாயக் கடன் தள்ளுபடி போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள்டெல்லிராம்லீலாமைதனாத்தில்குவிந்துபேராட்டத்தைமுன்னெடுத்துள்ளனர். அகிலஇந்திய கிசான் சங்கர்ஷ் ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பின்



பேரில்விவசாயிகள் இந்தப்போராட்டத்தை முன்னெடுத்து ள்ளனர். போராட்டத்தில்கலந்துகொள்வதற்காகதமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து விவசாயிகள்தங்கள்குடும்பம்மற்றும்குழந்தைகளுடன்நேற்று மாலையில் அவ்விடத்துக்கு வந்திறங்கியுள்ளனர். பின்னர் நாடாளுமன்றத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றார்கள். அதைப் பொலிசார் அனுமதிக்காததால் பதற்றமான சூழல் நிலவியது. அதிகளவானபொலிசார்அவ்விடத்தில்குவிக்கப்பட்டனர். ஆனாலும்பொலிஸ்தடையையும்மீறிப்பேரணிதொடர்ந்தது. இதைவிடவும் பல போராட்டத் திட்டங்களை வகுத்திருப்பதாகக் கூறப்படும் விவசாயிகள் தமது குரலுக்குச் செவி சாய்க்காத பட்சத்தில்போராட்டவடிவங்கள்மாறுபட்டுப்போராட்டம்தொடரும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றதமிழகத்திலிருந்துவந்திருந்தவிவசாயிகள் அனைவரும்தத்தமதுநகைகள், விவசாயநிலங்களைஇழந்தவர்களாகவும், கடன்தொல்லைகளால்பாதிக்கப்பட்டிருப்பவர்களாகவுமே இருக்கிறார்கள் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# ஏமன் போருக்கான அ
# நிறுத்துவதற்கு அமெ


வோஷிங்டன்.டிச.1
சவூதி அரேபியாவின் தலைமையில்ஏமனில்ந
வருகின்றது. அந்த ஆதரவை நிறுத்துவதற்
துள்ளது.



சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கொலை பற்றி ட்ரம்ப் தெரிவித்த கருத்துகளை அமெரிக்க செனட் சபையிலுள்ள பல உறுப்பினர்கள் விரும்பவில்லை. அதனால், அவர்கள் இணைந்துஅமெரிக்கஅதிபர்ட்ரம்புக்குஎதிராக எடுத்த தீர்மானமாகவே இது கருதப்படுகிறது. இந்தத் தீர்மானத்துக்குச் செனற் சபை உறுப்பினர்கள் ஆதரவு அளிக்கக்கூடாது என்று அமெரிக்காவின் அயலுறவுத்துறைஅமைச்சர் மைக் பாம்பியோவும், பாதுகாப்புத்துறைச்செயலாளர் ஜிம் மேத்திஸும் வலியுறுத்தியுள்ளனர். இருப்பினும், இரண்டு கட்சிகள் கொண்டு வரும் முன்மொழிவாகஇதைஎடுத்துச்செல்வதற்குச் செனட்சபைஉறுப்பினர்கள்63பேரில்37பேர்

இதற்குஆதரவா
உரிமை மீறல்க
முடியாத அளவுக்
ழிவு ஆகியவற்
சவூதிக்கு எதிரா
வேண்டிய நேரம
யின் செனட் சபை
டெஸ் இதுபற்றி
சௌதிக்கு அளி
பெறுவதற்கு ஆத
னம் நிறைவே
பிரதிநிதிகள்அவை
கடிக்கப்படலாம்.
திகள் அவையில்

# பேருந்துடன் மோதியது மகிழுந்து 5 பேர் சாவு-32பேர் காயம்



பீஜிங்.டிச.1
ஹொங்கொங்கில் பேருந்துடன் மகிழுந்துஒன்றுமோதிவிபத்துக்குள்ளாகியிருக்கிறது. இந்தவிபத்தில் 5 பேர் சாவடைந்துள்ளனர். 32 பேர் காயமடைந்துள்ளனர். ஹொ ங்கொங் விமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில் பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்துடன் மகிழுந்துஒன்றுமோதிவிபத்துக்கு ள்ளாகியிருக்கிறது. இதில் பேருந்தின் ஜன்னல் ஓரங்களில் இருந்த பயணிகள் வெளியே தூக்கிவீசப்பட்டனர். இந்தவிபத்தில் 5 பேர் சாவடைந்துள்ளனர். 32 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இதனைஹொங்கொங்கில் ஏற்பட்ட பெரும் விபத்தாகக் குறிப்பிட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

சிட்னி.டிச.1
ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு மாநிலமான குயின்ஸ்லாந்தில் கடந்த 24ஆம் திகதி காட்டுத்தீ உருவாகியிருந்தது. அங்கு நிலவி வரும் வறண்ட வானிலை மற்றும் வேகமாக வீசி வரும் காற்றால் அந்தக் காட்டுத்தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது. தொடர்ந்து பரவி வரும் இந்தத் தீயால் 22ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான நிலப்பரப்பு நாசமாகி உள்ளது. அங்கு நிலவி வரும் வறண்ட வானிலை மற்றும் வேகமாக வீசி வரும் காற்றால் இந்தக்காட்டுத்தீகட்டுக்கடங்காமல்பரவி வருகிறது. இதனால் அந்தப் பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் காட்டுத்தீ பரவி வரும் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகுந்த விழிப்பு நிலையில் இருக்குமாறும்கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். காட்டுத்தீயை அணைப்பதில் நூற்றுக்கணக்கான தீயணைப்புப்பணியாளர்கள்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் அங்கு நிலவி வரும் மோசமானவானிலையால், காட்டுத் தீ பரவுகின்ற வேகம் அதிகமாகவும், தீயை அணைப்பதற்கான பணிகள் மிகவும் மந்தமாகவும் நடைபெற்று வருவதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# புடினுடனான சந்



வோஷிங்டன்.டிச.1
உக்ரைன் நாட்டுக் கப்பல்கள் சிறைப்பிடிப்புப் பிரச்
மையப்படுத்தி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உ
திப்பை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இடை
ளார். உக்ரைனின் கிரிமியாப் பகுதியை 2014ஆ
ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து உக்
ரஷ்யாவுக்கும் இடையே பதற்றமான சூழல் நிலவி
அண்மையில் கிரிமியா அருகே உக்ரைன் நாட்
3கடற்படைக்கப்பல்களைரஷ்ய இராணுவம்கை
இருந்து மீண்டும் அங்கு போர்ப் பதற்றம் உருவா
உக்ரைன்விவகாரத்தில்ரஷ்யாவுக்குஅமெரிக்கா
புத்தெரிவித்துவருகிறது. மேலும்உக்ரைன்நாட்டு
அளிக்கும்படிஐரோப்பியநாடுகளைவலியுறுத்தி
இந்தச் சூழ்நிலையில், ஆர்ஜென்ரீனாவில் நடை
2018ஆம் ஆண்டுக்கான ஜி20 மாநாட்டில் ர
புடினை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சந்திப்பது உறுதி

# …ன அமெரிக்காவின் ஆதரவை …மெரிக்கச் 'செனட்' தீர்மானம்

…மனில்நடைபெற்றுவருகின்றபோருக்குஅமெரிக்கா ஆதரவுவழங்கி …துவதற்கான முயற்சி ஒன்றை அமெரிக்க 'செனட்' சபை முன்னெடுத்



…ஆதரவாகவாக்களித்துள்ளனர். மனித …ம மீறல்கள் மற்றும் கற்பனை செய்ய …த அளவுக்கான மனிதாபிமானப் பேர …கியவற்றை ஏமனில் உருவாக்கியுள்ள …க்கு எதிரான சமிக்ஞையை அனுப்ப …டிய நேரமிது என்று ஜனநாயகக் கட்சி …செனட் சபை உறுப்பினர் பாப் மெனெண் …இதுபற்றிக் கூறியுள்ளார். ஏமனில் …க்கு அளிக்கும் ஆதரவைத் திரும்பப் …தற்கு ஆதரவாக செனட் அவை தீர்மா …நிறைவேற்றிவிட்டாலும், மக்கள் …திகள்அவையில்இந்தத்தீர்மானம்தோற் …படலாம். ஆனால், புத்தாண்டில் பிரதிநி …அவையில் ஜனநாயகக் கட்சி பெரும் பான்மை பெறுகிறது என்பதால் அப்போது இது நிறைவேற்ற ப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

ஏமனில் ஏமன் அதிபர் மன்சூர் ஹதியின் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கில் ஹவுத்தி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. ஹவுத்திக்கு ஆதரவாக ஈரான் செயற்பட்டு வருகிறது. ஏமன் அரசுக்கு ஆதரவாக சவூதி தலைமையிலான கூட்டுப் படைகள் போரிட்டு வருகின்றன. அமெரிக்கா சவூதிக் கூட்டுப்படைக்கு ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது.

# …சந்திப்பைத் தவிர்த்தார் ட்ரம்ப்



…ப்புப் பிரச்சினையை …ர் புடின் உடனான சந் …ம்ப் இடைநிறுத்தியுள் …2014ஆம் ஆண்டில் …ந்து உக்ரைனுக்கும் …ழல் நிலவி வருகிறது. …ரன் நாட்டைச் சேர்ந்த …வம் கைப்பற்றியதில் …ம் உருவாகி உள்ளது. …மெரிக்கா கடும் எதிர்ப் …ரன்நாட்டுக்கு ஆதரவு …யுறுத்தியும் உள்ளது. …வில் நடைபெறவுள்ள …ாட்டில் ரஷ்ய அதிபர் …பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று ரஷ்ய அதிபரின் கிரெம்ளின் மாளிகை அறிவித்திருந்தது. ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பைஅமெரிக்கஅதிபர்ட்ரம்ப்தற்போதுஇடைநிறுத்திவிட்டார். "ரஷ்யாவால்சிறைப்பிடிக்கப்பட்டகப்பல்களும், மாலுமிகளும் இன்னும் உக்ரைனுக்குத் திரும்பிவராத நிலையில் புடினுடனானசந்திப்பைநிறுத்துவதற்குத்தீர்மானித்துள்ளேன். இந்தப் பிரச்சினை தீர்ந்த பின்னர் கூடிய விரைவில் அர்த்தமுள்ள ஒருசந்திப்பைநான்எதிர்பார்க்கிறேன்" என்று இதுபற்றி ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

**பின்னணி**

ரஷ்யாவின்பெருநிலப்பரப்பைஒட்டிஇருந்தபலநாடுகள்சோவியத் யூனியன் என்ற பெயரில் ரஷ்யாவுடன் இணைந்த ஒரே நாடாக இருந்தன. பின்னர் அந்த நாடுகள் ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்று விட்டன. அதில், முக்கியமான நாடு உக்ரைன். பிரிந்துசென்றபிறகுஇரண்டுநாடுகளும்பகைநாடுகளாகமாறி விட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைனின் ஒரு பகுதியானகிரிமியாவைரஷ்யாவலுக்கட்டாயமாகக்கைப்பற்றித் தன்னுடன் இணைத்து கொண்டது. அதன் பிறகு இரண்டு நாடுகளுக்கும்இடையேமோதல்போக்குஅதிகரித்தது. இந்த நிலையில் கிரிமியாக் கடல் பகுதியில் சென்ற உக்ரைனின் 3கப்பல்களைரஷ்யாகைப்பற்றியுள்ளது. இதனால்இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் மூழும் என்ற சூழ்நிலை நிலவுகிறது. எனவே, உக்ரைன் அரசு உள்நாட்டில் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. தனது படைகளை எல்லையில் குவித்து வருகிறது. பதிலுக்கு ரஷ்யாவும் எல்லையில்அதிகஆயுதங்களைக்குவித்துவருகிறது. 2014ஆம் ஆண்டிலிருந்து உக்ரைனும் ரஷ்யாவும் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் போரில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போதைய நிலையால், அங்கு சண்டை தீவிரமடையும் ஆபத்து உள்ளது. ரஷ்யவிடம் கனரக ஆயுதங்கள் உள்ளன என்பதும் உக்ரைனுக்கு மேலைநாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜி 20 – 2018 உச்சி மாநாடு

ஆர்ஜென்ரீனா, ஆஸ்திரேலியா, பிறேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மன், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிக்கோ, ரஷ்யா, சவூதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென் கொரியா, துருக்கி, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய '20'களை ஒன்று திரட்டிய அமைப்பே ஜி20. இது 1999ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதில் உலகின் வளர்ச்சியடைந்தநாடுகள் 19உம் ஐரோப்பிய ஒன்றியமும் உறுப்புரிமை பெற்றுள்ளன. பொருளாதார உலக உற்பத்தியில் 85சதவீதமும், உலகவணிகத்தில் 80சதவீதமும், உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும் கொண்டுள்ளது. வருடம் தோறும் நடந்துவருகின்ற ஜி20 உச்சி மாநாட்டில் அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இந்தஉச்சிமநாடு இந்த முறை ஆர்ஜென்ரீனாவில் நடக்கிறது. அதில் பற்கேற்பதற்காக உறுப்பு நாடுகளின் தலைவர்கள் ஆர்ஜென்ரீனாவின் தலைநகர் பெய்னோசில் தரையிறங்கிய வண்ணம் உள்ளனர்.



மாநாட்டுக்கு முன்னதாகவே தனது மனைவியுடன் பெய்னோசிற்கு வந்த பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோங். அந்தநாட்டில் 19761983 காலகட்டத்தில் நடந்த இராணுவ ஆட்சியின்போது கொல்லப்பட்டஃ காணாமல் ஆக்கப்பட்ட 30ஆயிரம் பேரின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள பூங்காவைப் பார்வையிட்டார்.



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகியோர் எயார்போர்ஸ் வன் வானூர்தியில் வந்திறங்கினார்.



சவூதியின்பட்டத்துஇளவரசர் முகமது சல்மான்பெய்னோஸ்வந்தடைந்தார்.



இந்தியத்தலைமை அமைச்சர்நரேந்திரமோடி



ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்குப் புறப்பட்ட ஜேர்மனியின் தலைமை அமைச்சர் சான்சலர் ஏங்கலா மெர்கலின் விமான த்தில் தொழில்நுட்ப பிரச்சனைஇருப்பதுகண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து அவரது பயணம் தாமதமாகி ஆர்ஜென்ரீனா வந்தடைந்தார்.





| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | | 2 | |
| | 3 | 9 | | 7 | | 1 | 8 | |
| | | | 3 | | 6 | | | |
| | 7 | 4 | | 3 | | 5 | 6 | |
| | | | 6 | | 7 | | | |
| | 6 | 2 | | 5 | | 9 | 1 | |
| | | | 2 | | 8 | | | |
| | 2 | 5 | | 6 | | 3 | 4 | |
| | 8 | | | | | | 7 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 9 | 6 | 4 | 2 | 8 | 5 | 3 |
| 2 | 8 | 6 | 3 | 1 | 5 | 7 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 8 | 7 | 9 | 6 | 1 | 2 |
| 4 | 5 | 7 | 2 | 3 | 8 | 1 | 6 | 9 |
| 1 | 6 | 2 | 5 | 9 | 7 | 3 | 4 | 8 |
| 3 | 9 | 8 | 4 | 6 | 1 | 5 | 2 | 7 |
| 6 | 2 | 4 | 1 | 8 | 3 | 9 | 7 | 5 |
| 9 | 3 | 5 | 7 | 2 | 6 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 9 | 5 | 4 | 2 | 3 | 6 |

## சுடோக்கு
எண் விளையாட்டு

## கட்டளைகள்

- ★ அழகிய கனவு ஒன்று வேண்டும்.
- ★ அதை அடைவதற்கு முயற்சி வேண்டும்
- ★ அவமானம் பார்க்காத குணம் வேண்டும்.
- ★ வாய்ப்புக்களை நிராகரிக்காமலிருக்க வேண்டும்.
- ★ ஏமாற்றங்களை விழுங்க வேண்டும்.
- ★ உள்ளத்தில் உத்வேகம் ஓயாது புயலாக வீச வேண்டும்
- ★ உழைப்பில் உண்மை வேண்டும்.
- ★ அனைத்துக்கும் மேலாக பொறுமை வேண்டும்.



# மணிரத்னம் இயக்கத்தில் விஜய், விக்ரம், சிம்பு

செக்கச் சிவந்த வானம் படத்தை தொடர்ந்து மணிரத்னம் அடுத்ததாக இயக்கவிருக்கும் புதியபடத்தில்விஜய், விக்ரம், சிம்புஇணைந்த நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.
மணிரத்னம் இயக்கத்தில் செக்கச் சிவந்த வானம் அண்மையில் வெளியானது. இந்தப் படத்தை அனைத்து இரசிகர்களும் ஏற்றுக்கொண்டனர். படத்தின் திரைக்கதையும் நன்றாக இருந்ததால் ஓரளவு வெற்றியும் பெற்றது.
இந்த நிலையில் விஜய், விக்ரம், சிம்பு கூட்டணியில் மணிரத்னம் புதிய படத்தை இயக்க உள்ளதாக ஒரு பேச்சு திரையுலகில் உலவுகிறது. இந்தப்படமும்தாதாக்கள்பற்றியகதையாக தளபதி பாணியில் இருக்கும் என்கிறார்கள். இவர்களில் விக்ரமும், சிம்புவும் ஏற்கனவே மணிரத்னம் படங்களில் நடித்துவிட்டார்கள்.
இதுதவிர மணிரத்னம் தனது கனவுப் படமான பொன்னியின் செல்வன் வரலாற்று கதையை படமாக்க இருப்பதாகவும், அதற்கான பணிகளில் இறங்கியிருப்பதாகவும், அதில் தான் இவர்கள் மூன்று பேரும் நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.




**மேடம்:** நியாயமாகப் பேசினாலும் சிலர் பிரச்சினை செய்வர். தொழில் வியாபாரம் அதிக உழைப்பால் வளர்ச்சி பெறும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**இடபம்:** செயலில் புதிய திருப்பம் எதிர்கொள்வீர்கள். உண்மை நிலவரம் உணர்ந்து பணிபுரிய வேண்டும். தொழில், வியாபார நடைமுறை ஓரளவுக்கு வெற்றி தரும்.

**மிதுனம்:** மனதில் ஞானம் நிறைந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். பெறுகின்ற அனுபவம் புதுவிதமாக இருக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியமாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை ஓரளவுக்கு இருக்கும். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்றவும்.

**சிங்கம்:** செயல்களில் நியாயம் தர்மம் நிறைந்திருக்கும். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நின்று உதவும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பரிமாணம் ஏற்படும்.

**கன்னி:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். குடும்ப உறுப்பினர் வீட்டு பொறுப்பை உணர்த்துவர். தொழிலில் உற்பத்தி விற்பனை வளர்ச்சி பெறும்.

**துலாம்:** சுயநலம் கருதாமல் செயல்படுவீர்கள். அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும். பணியாளர்கள் பாராட்டு பெறுவர்.

**விருச்சிகம்:** செயலில் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். எதிரி இடம் மாறிச் செல்கின்ற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள்.


**தனுசு:** மாறுபட்ட நிகழ்வு குறித்து அதிருப்தி ஏற்படலாம். பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது.

**மகரம்:** மனதில் இனம் புரியாத வருத்தம் வரலாம். நண்பரின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில் அக்கறையுடன் பணிபுரிவீர்கள்.

**கும்பம்:** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**மீனம்:** வாழ்வில் வளம் பெற புதிய சூழல் உருவாகும். ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணசேமிப்பு அதிகரிக்கும்.






அவசியமில்லாப் பேச்சு
ஆபத்தைத் தேடித் தந்து விடும்....
அளவான பேச்சு மதிப்பான
நிகழ்வுகளைத் தேடித் தரும்....

## சிந்திக்க....

நாம்*எதை* ஆதாரமாகவைத்து ஆணவப் படுகிறோம்

**நமது பதவியா? நாம் சேர்த்த சொத்து சுகங்களா?**
**நமது படிப்பா? நமது *வீடா?***
**நம் முன்னோர்களின் ஆஸ்தியா? நமது அறிவா?**
**நமது பிள்ளைகளா? எது நம்மைக் காப்பாற்றப் போகிறது?**

உடல் சுருங்கி, நமது சுற்றமெல்லாம் ஒதுங்கிய பின் எதுவுமே நம்மை காப்பாற்றப் போவதில்லை பசித்தவனுக்கு உணவு கொடுத்து, உடைஇல்லாதவனுக்குஉடைகொடுத்து, எல்லோரையும்நேசித்து, மனத்தூய்மையானவாழ்க்கையைவாழுபவர்கள் மட்டுமே என்றென்றும் வாழ்பவர்கள்.

## மயக்கமா கலக்கமா

பாய்வோமா இல்லை
இங்கேயே இருப்போமா
பதவியை எடுப்போமா
பாய்ந்த பின் தோற்கும்
நிலை வருமா?


கோர்ட்டும் சூட்டும்
கோட்டையில் இருக்க
மீசைக் காரர்
ஆசை காட்ட
ஆட்சி பலத்தை
அறிகின்ற வரைக்கும்
காட்சி பார்த்து
கவனமாய் இருப்பார்!
காட்சி பார்த்து
கவனமாய் இருப்பார்!

தனக்கும் உள்ளால்
தருவார் கோடி
நினைத்துப் பார்த்து
நெஞ்சில் வாடி

பணத்தை 'வீசி'
பதவியைக் காட்ட
அனைத்தும் இழந்து
ஆடிப் பறப்பார்.
அரசனை நம்பி
புருஷனை விட்டு
பொதுசனம் முன்னே
பொத்தென்று விழுவார்!


'ராணா' ஆண்டும்
'ராவன்னா' ஆண்டும்
நானாமார்க்கு
நடப்பது ஒன்றே

## சூரியகாந்தி



- சிறுவர்கள் விரும்பி வரையக்கூடிய பூக்களில் ஒன்று. 'வின்சென்ட் வான் காவி' இன் ஓவியம் உலகப் புகழ்பெற்றது.
- சூரியகாந்தியின் தாயகம் வட அமெரிக்கா. 60 வகையான பூக்கள் அங்கே இருந்தன. கி.மு.2,600 களில் மெக்சிகோவில் முதன்முதலாக பயிரிடப்பட்டது. இன்று உலகம் முழுவதும் பரவிவிட்டது.
- வேகமாக வளரக்கூடிய தாவரங்களில் ஒன்று. 3 முதல் 18 அடி உயரம் வரை வளரக்கூடியவை. 6 மாதங்களில் 12 அடி உயரத்தை எட்டிவிடுகின்றன.
- நாம் இங்கு பூ என்று அழைப்பது ஒற்றைப் பூ அல்ல. அதனுள் 2 ஆயிரம் சிறு பூக்கள் சேர்ந்து ஒரே பூவாகக் காட்சியளிக்கிறது!
- முழுவதும் இதழ் விரியாத மொட்டுகளே சூரியனை நோக்கித் திரும்பியிருக்கும். கிழக்கில் ஆரம்பித்து மேற்கில் மறையும்வரை மொட்டுகளும் திரும்புகின்றன. இரவில் மீண்டும் கிழக்குப் பக்கம் தலை சாய்த்து நின்றுவிடுகின்றன. இதற்குக் காரணம் கதிரொளி தொடரியல்பு (Heliotropism) என்கிறார்கள். நன்றாக மலர்ந்த பின்னர் சூரியனை நோக்குவதில்லை. காட்டு பூக்கள் சூரியனை நோக்கித் திரும்புவதில்லை.
- மஞ்சள், சிவப்பு, அரக்கு நிறங்களில் பூக்கள் காணப்படுகின்றன. விதைகள் சுவையானவை, ஆரோக்கியமானவை, சத்து நிறைந்தவை. விற்றமின்கள் பி, இ, செலினியம், மக்னீசியம், பொஸ்பரஸ், கனிமங்கள் இதில் இருக்கின்றன.
- அமெரிக்கப் பழங்குடி மக்கள் பூக்களில் இருந்து நிறத்தை எடுத்தார்கள். விதைகளை உணவாகவும் மருத்தாகவும் பயன்படுத்தினார்கள். பறவைகளுக்கும், கொறி விலங்குகளுக்கும் பூச்சிகளுக்கும் இவை உணவாகின்றன.
- இன்று எண்ணெய் சமையலில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது. விதைகள் சூழல் மாசைக் குறைக்கும் பயோடீசலின் உற்பத்தியில் பங்கு வகுக்கின்றன.
- பெரும்பாலும் தாவரங்கள் ஓராண்டு வாழக் கூடியவை. சில வகைகள் இரண்டு ஆண்டுகள் வாழ்கின்றன.
- உக்ரைன் நாட்டின் தேசிய மலராக விளங்குகின்றது.

## வர்ணம் தீட்டுவோம்



## நன்றி மறவாமை



அன்று வியாழக்கிழமை. காலை எட்டுமணியிருக்கும். சேகர் வீதி ஓரமாக நடந்து பாடசாலை சென்று கொண்டிருந்தான். புத்தகப்பை அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்தது. அப்போது வீதியின் எதிர்ப்பக்கத்தில் புதிதாகத் திறக்கப்பட்டிருந்த ஒரு புத்தகசாலை கண்ணில் பட்டது. சிறிது நேரம் நின்று அக்கடையை நோட்டம் விட்டவன் இப்போதுதான் செல்ல வேண்டிய வீதிப்பக்கம் பார்வையைச்செலுத்தினான். வீதியின் இருபக்கமும் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன.

அதுபிரதானவீதி. அங்கேகண்ணுக்கெட்டியதூரம்வரைவீதியைக் கடக்கும் மஞ்சள் கோட்டுப் பகுதி காணப்படவில்லை. ஆனால் திடீரென ஒரு 16 வயது மதிக்கத்தக்க இளைஞன் வீதியில் இறங்கி மறுபக்கம் வர முயன்றார். மறுபக்கம் இருந்து ஒரு பேருந்து வேகமாகவந்துகொண்டிருந்தது. ஒருசெக்கன்தாமதித்திருந்தாலும் அவரது உயிருக்கு பேராபத்து நிகழ்ந்திருக்கும். சேகர் இதை உணர்ந்துவீதிப்பக்கம்பாய்ந்து அந்த இளைஞரை வீதியோரமாக இழுத்து வந்தான். வேகமாக வந்த பேருந்து அவர்களை மருவியதாகப் புயல் வேகத்தில் அவர்களைத் தாண்டிச் சென்றது.

இளைஞன் அதிர்ச்சியால்வாயடைத்துநின்றான். "என்னவேலை செய்தீர் வீதியைக் கடக்கு முன் இருபக்கமும் பார்த்தல்லவா கடக்க வேண்டும். நான் உம்மை இழுத்திராவிட்டால் பேருந்து உம்மை மோதிவிட்டுச் சென்றிருக்கும்." என்றான் சேகர். இளைஞன் சற்று பதற்றம் தணிந்து "இல்லை மஞ்சள் கோட்டைக் காணவில்லை. அதுதான்...." என்று இழுத்தான். "தெருவின் சில முக்கியமான இடங்களில் மட்டும் மஞ்சள் கோடு இருக்கும் இடையில் நாங்கள் வீதி மறுபக்கம் மாற வேண்டியிருந்தால் வீதியில் இருபக்கமும் பார்த்து வாகனம் எதுவும் வராவிட்டால் மட்டுமே வீதியைக் கடக்க வேண்டும்" என்றான் சேகர். அந்த இளைஞன் "என்னுயிரைக் காப்பாற்றி விட்டாய் தம்பி உன்னை நான் என்றுமே மறக்க மாட்டேன். நன்றி தம்பி" என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

சில மாதங்கள் கடந்தன. ஒருநாள் சேகர் வீட்டு முற்றத்தில் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென கை கால் சோர்வடைய மயக்கமடைந்து விழுந்தான். அவன் நிலை கண்டு பதறிய பெற்றோர் மருத்துவமனைக்கு அவனை எடுத்துச் சென்றனர்.

சேகரைப் பரிசோதித்த மருத்துவர் அவன் சிறு வயது முதலே சிறுநீரகநோயால்பாதிக்கப்பட்டிருந்ததாகவும், இதனால்அவனது இரு சிறுநீரகங்களில் ஒன்று செயலிழந்துவிட்டதாகவும் மற்றைய சிறுநீரகமும் காலம் செல்லச் செல்ல செயலிழந்து விடும் என்றும் கூறினார். இதனைக் கேட்டு செயலிழந்து புலம்பி அழுத பெற்றோருக்கு "உங்கள் மகனது சிறுநீரகத்துடன் பொருந்தக் கூடிய இன்னொருவரது சிறுநீரகம் கிடைத்தால் அதை அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தி அவரைக் குணப்படுத்தலாம்" என்றார். சேகரின் பெற்றோர் சிறுநீரக உதவிகோரி வாரப்பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்தனர். விளம்பரம் சேகரின் படத்துடன் பிரசுரமாகி இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை . கண்ணன் வாரப் பத்திரிகையின் விளம்பரப் பக்கத்தில் சேகரின் நிழற்படத்துடன் கூடிய சிறுநீரகம் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்தான். அந்த சேகர் அன்றொருநாள் அவனை வீதி விபத்தில் இருந்து காப்பாற்றிய பையன் என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே குறிப்பிட்ட மருத்துவமனைக்குச் சென்று வைத்தியரிடம் சேகருக்கு தான் சிறுநீரகம் அளிக்க விரும்புவதை கூறினான்.

வைத்தியர் கண்ணனைப் பரிசோதித்து அவனின் சிறுநீரகம் சேகருக்குசரியாகப்பொருந்திருப்பதைமகிழ்ச்சியுடன்தெரிவித்தார். சேகரின் பெற்றோர் இதையறிந்து கண்ணனை கையெடுத்துக் கும்பிட்டனர். அறுவைச் சிகிச்சை முடிந்து சேகர் கண்விழித்தான். சேகரின் பெற்றோர் கண்ணனை சேகருக்கு அறிமுகம் செய்து வைத்தனர். சேகருக்கு முதலில் கண்ணனை நினைவுக்கு கொண்டுவர முடியவில்லை.

பின்னர் மயக்கம் நன்றாகத் தெளிந்ததும் அவனை இனம் கண்டு கொண்டு கண்ணனின் கைகளைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவன் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. "அன்று வீதியில் என் உயிரைக் காப்பாற்றினாய். இன்று நான் உன் உயிரைக் காப்பாற்றினேன்.


"நன்றிமறக்கக்கூடாதல்லவா?" எனக்கூறிச்சிரித்தான்கண்ணன். சேகரும் நன்றி கூறும் வகையில் சிரித்தான்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லதை**
**அன்றே மறப்பது நன்று!**

## உலக நாடுகளின் பொன்மொழிகள்

- இன்பமும் துன்பமும் கடிகாரத்தின் பெரிய முள் சிறிய முள் போன்றது
- துணிச்சலான ஆரம்பமே வெற்றிக்கான வழி
- நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்குச் சமன்
- கடவுள் அடிக்கடி நம் வீட்டுக்கு வருகிறார். நாம்தான் அப்போது வீட்டில் இருப்பதில்லை.
- இன்றைய வேலையை நாளைக்கெனத் தள்ளிப் போடாதே!
- தோற்றதும் துவண்டு விடாதே. வெற்றி பெற்றதும் வீராப்படையாதே!
- படுக்கப் போக முன்னர் கவலைகளை காலணியோடு கழற்றி வைக்கவும்.
- இதயத்தைச் சுத்தப்படுத்திவிட்டு இறைவனை வணங்கு
- அதிக ஓய்வு அதிக வேதனை தரும்
- நாம் பிறருக்குத் தீமை செய்தால் அது நமக்கே திரும்பும் நாள் வெகுதூரமில்லை.
- கடனோடு காலையில் எழுவதைவிட பட்டியாக இர வில் படுப்பதே மேலான காரியம்

## நேரு மொழிகள்



- அழகும் சாகசமும் நிறைந்த அற்புதமான உலகில் வாழ்கிறோம். நாம் கண்களைத் திறந்திருந்தால் மட்டுமே இவற்றைப் பார்க்க முடியும்!
- அறியாமையே எப்போதும் மாற்றத்தைக் கண்டு அஞ்சுகிறது.
- ஆண்டுகளை வைத்து காலத்தைக் கணக்கிட முடியாது. நாம் என்ன செய்திருக்கிறோம், எதைச் சாதித்து இருக்கிறோம் என்பதை வைத்தே காலத்தை அளவிட முடியும்.
- அச்சம் போன்று மிக மோசமான ஆபத்து ஒன்றும் இல்லை.
- முயற்சிகள் செய்துகொண்டிருப்பவர்களைத்தான் வெற்றி தேடிவரும்.
- பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கையில் சுவாரசியம் இருக்காது.

## பயங்கர ஆட்கொல்லி நோய்

# 'எயிட்ஸ்'

## அதிலிருந்து அனைவரையும் பாதுகாப்போம்




கந்தையா கனகசபை

எம்மை நேசிப்பவர்களுக்கு என்றும் விசுவாசமாக இருப்போம். எம்மை மட்டுமன்றி எம் அன்புக்குரியவர்களையும் எயிட்ஸ் நோயிலிருந்து பாதுகாப்பது எமது தலையாய பொறுப்பும் கடமையுமாகும். அந்த வகையில் இன்று டிசெம்பர் முதலாம் திகதி பன்னாட்டு எயிட்ஸ் ஒழிப்புத் தினமாகும். இன்று நாடெங்கிலும் எயிட்ஸ் நோயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவது சம்பந்தமாகக் கருத்தரங்குகள், விழிப்புணர்வு, வீதி நாடகங்கள், அறிவுறுத்தல் கூட்டங்கள் எனப் பலவும் பொது அமைப்புகளாலும் சுகாதாரப் பகுதியினராலும் கூட்டாக முன்னெடுக்கப்படு கின்றன. விரும்பியோ, விரும்பாமலோ பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புக்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு இருந்தால், ஒவ்வொருவரும் உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமாகும். அத்தோடு அது தவிர்ந்த வழிகளில் 'எச்.ஐ.வி.' தொற்றுக்கு ஆளாகியிருந்தாலும் அதற்குரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்.

**கலாசாரச் சீரழிவால் நோய்த்தொற்று அதிகரிக்கலாம்!**

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களின் விளைவு, எமக்குள் திறந்த பாலியல் கலாசாரத்தை திணித்துவிட்டதென்றால் தவறில்லை. முன்பு இறுக்கமான கலாசாரக் கட்டமைப்புக் காணப்பட்டது. இதனால் விழிப்புணர்வு பற்றி அதிகம் யோசிக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. இப்போது உள்ள சூழ்நிலை வேறு. எமது கலாசாரக் கட்டமைப்பு தகர்ந்துள்ளது. மேலைத்தேயக் கலாசாரமானது ஆடை தொடக்கம் நடை வரையாக எமது மக்களை ஆக்கிரமித்துவிட்டது. மேலைத்தேயக் கலாசரத்திலிருக்கின்ற நல்ல விடயங்களைத் தவிர்த்து அதிலுள்ள தீமை பயக்கும் விடயங்களை அதிகளவில் உள்ளீர்க்கின்றனர் மக்கள். ஆகவே மக்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டிய காலத்தின் தேவை இன்றைய தினத்தில் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும் . இத்தகைய காலச்சூழலில் ஒருத்தனுக்கு ஒருத்தி என்றிருந்த எமது கலாசாரக் கட்டமைப்பில் தளர்வுகள் ஏற்படுவது மலினப்பட்டு விட்டது. இத்தகைய கலாசாரச் சீரழிவால், பாலியல் நோய்கள் உருவெடுப்பதற்கும், வெகுவாகப் பரவிவிடுவதற்குமான சாதகத் தன்மைகள் அதிகமாகவே இருக்கின்றன.



**எயிட்ஸ் என்கிற உயிர்க்கொல்லி**

உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் பயங்கர ஆட்கொல்லி நோயாக இப்போதுவரை இருப்பது எயிட்ஸ் மாத்திரமே. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகின் பயங்கர ஆட்கொல்லி நோயாக இனம் காணப்பட்டுள்ளது. இந்தக் கொடிய நோயால் உயிரிழப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இன்றுவரை எயிஸ்ட் நோய் உலகளாவிய ரீதியில் இரண்டரைக் கோடி மக்களுக்கும் கூடுதலான தொகையைக் காவுகொண்டுள்ளது எனலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் எயிட்ஸ் நோயால் ஏற்படும் இறப்புக்கள் வருடம்தோறும் அதிகரித்துச் செல்வதாகவே புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வடமாகாணத்தில் 1987ஆம் ஆண்டில் இருந்து அண்ணளவாக 80பேருக்கு எயிட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அதில் சுமார் 45 பேர் இறந்துள்ளனர். 81 சிறுவர்கள் உட்பட 2ஆயிரத்து 688 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் எயிட்ஸ் நோய் வெகுவாகக் குறைந்திருந்தபோதிலும் இப்போது அது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. மேல் மாகாணத்திலேயே அதிகமானோர் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

**பாதுகாப்பற்ற உடலுறவே முதன்மைக் காரணி!**

பாதுகாப்பற்ற உடலுறவே எய்ட்ஸ் நோயின் தோற்றுவாயாக அமைகின்றது. ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவை வைத்துக் கொள்வதே இந்த நோய் பரவுவதற்கான முதன்மைக் காரணமாகும். இலங்கையில் இவ்வகைப் பாலியல் தொடர்புகள் மூலமாகவே எய்ட்ஸ் தொற்று ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதில் ஆண், பெண் பாலியல் தொடர்பாலேயே பெரும்பான்மையினர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். தொற்றுக்கு உள்ளான ஒருவருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்பு கொள்ளுதல், போதைப் பாவனையானவர்கள் ஊசியைப் பகிர்ந்து பயன்படுத்துதல், தொற்றுக்குள்ளான தாயிலிருந்து வயிற்றிலிருக்கும் சிசுவுக்குப் பரவுதல், பின்னர் தாய்ப்பால் மூலமாகவும் இந்த நோய் பரவுகின்றது. 'எச்.ஐ.வி.' பற்றிய சரியான அறிவைப் பெற்று இந்தத் தொற்றைத் தவிர்ப்பதற்குப் பல வழிகள் உள்ளன.

**தவிர்ப்பதற்குரிய வழி வகைகள்**

குருதிப் பரிசோதனையைச் சகல மாவட்டங்களிலும் உள்ள அரச பாலியல் தொற்றுக்கான சிகிச்சை நிலையங்களில் இலவசமாகவும், இரகசியமாகவும் செய்து கொள்ள முடியும். இதற்கெனச் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவ நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர்.

எவராயினும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்தத் தடுப்புப் பிரிவில் காலை 8மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை இந்தப் பரிசோதனையை இலவசமாக மேற்கொள்ள் முடியும். அவ்வாறு பரிசோதனை செய்பவர்களின் தகவல்களில் வெறும் இலக்கங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதால் இவர்களின் விவரங்கள் வெளிச்செல்லாது.

எனவே எயிட்ஸ் அல்லது 'எச்.ஐ.வி.' தொற்றுதலைத் தடுப்பதற்கு எமது கலாசாரத்தின் படி ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பைப் பேணி நடத்தல் மற்றும் ஆணுறை பாவித்தல், குருதி மாற்றீட்டின்போது மாற்றப்படும் குருதி 'எச்.ஐ.வி.'தொற்றாத குருதிதான் என்பதை உறுதி செய்தல் என்பனபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நோயை முழுமையாகக் குணப்படுத்துவதற்கான மருந்து இற்றைவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நோயிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு இன்றே குருதிப் பரிசோதனை செய்து, சிந்தித்து செயலாற்றிப் பொறுப்புடன் செயற்பட்டு எமது எதிர்காலச் சந்ததியினரைப் பாதுகாக்க வேண்டும்.

எம்மிலிருந்து மற்றவர்களுக்கு, அடுத்து வரும் சந்ததியினருக்குத் தெரிந்தோ தெரியாமலோ எயிட்ஸ் என்கிற உயிர்க்கொல்லி நோய் பரவவிடாமல் தடுப்பதற்கு நாம் அனைவரும் இந்த நாளில் திடசங்கற்பம்



*எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒருவரின் உடல் திரவங்களோடு இன்னொருவரின் ஆசனவாய், பிறப்புறுப்பு அல்லது வாயின் உட்பகுதியில் உள்ள படர் சவ்வு படலம் தொடர்பு கொள்ளும் பொழுது எய்ட்ஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது. பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுபவர்களுக்கும், பாதுகாப்பற்ற ஆசனவாய் வழி உடலுறவு மேற்கொள்பவர்களுக்கு, பிறப்புறுப்பு வழி மற்றும் வாய் வழியேயான உடலுறுவு மேற்கொள்பவர்களை விட நோய்த் தொற்றும் ஆபத்து அதிகமாக காணப்படுகிறது.*

*ஏனைய பாலியல் நோய்த்தொற்றுக்கள் பிறப்புறுப்புகளில் நுண்ணிய அரிமான புண்களை ஏற்படுத்தி தோல் மேலணியைச் சேதப்படுத்துவதன் மூலமும், விந்து மற்றும் யோனி மடக் கசிவுகளில் சிறுகச் சிறுக சேர்ந்துகொண்டிருக்கும் எச்.ஐ.வி தொற்றிய அல்லது தொற்றுக்குள்ளாகும் நிணத்திசுக்கள் மற்றும் பெருவிழுங்கிகளின் மூலமும்எச்ஐவியின்கடத்துதலையும்நோய்த்தொற்றுதலையும்அதிகரிக்கச்செய்கிறது. பாலியல் நோய்களான 'சிபிலிஸ்', 'கேன்க்ராய்ட்' முதலியவைகளால் உருவாக்கப்படும் பிறப்புறுப்பு அரிமானப் புண்கள், எச்.ஐ.வி நோய்த்தொற்றை அதிகரிக்கச் செய்கின்றன.*

***பிறப்புச் சார்ந்து நோய் பரவுதல்***

*தாயிடமிருந்து குழந்தைக்கு, குழந்தை கருப்பையில் இருக்கும்போதே கர்ப்பகாலத்தின் கடைசி வாரங்களிலும், பிரசவத்தின் போதும் நோய்த் தொற்றல் நடக்கிறது. சிகிச்சை அளிக்காத பொழுது கர்ப்பகாலத்தின் போதோ, பிரசவ வலியின் போதோ அல்லது பிரசவத்தின் போதோ தாயிடமிருந்து குழந்தைக்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புண்டு.*

*ஆனால், 'தாய் ரெட்ரோ வைரல்', எதிர் மருந்துச் சிகிச்சைக்கு உட்பட்டு மகப்பேறு அறுவைசிகிச்சையின் மூலம் குழந்தைபெற்றுக்கொள்ளும்பொழுது நோய்பரவுதல் அரிது. தாய்ப்பாலூட்டுதலும் நோய்ப் பரவலுக்கு வித்திடும்.*

***தவறான நம்பிக்கைகள்***

*எயிட்ஸ் என்கிற உயிர்கொல்லி நோய் தொடர்பில் பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள் சாதாரண தொடுதலின் மூலம் எயிட்ஸ் பரவும், எச் ஐ வி ஓரினச் சேர்க்கையாளர்களையும்போதைப்பொருள்பயன்படுத்துபவர்களையுமேதாக்கும் என்பவை முக்கியமானவை. இவை தவறான எண்ணங்களாகும்*

## English Literature

மீண்டும்

**K.Subramaniam Sir** இன்

**Gr.10 & Gr.11 Literature Classes**

ஆரம்பம் :- 05.12.2018 4.30 pm

பதிவுகள் :- 04.12.2018 9.00 am (CS/21429)(11,17)

**IPS** பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலைக்கு அருகில்)
Mobile No:- 077 351 8308,077 602 1794

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ/து)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

### பதவிவெற்றிடம்

### கிளை முகாமையாளர் - 208/15

சம்பள அளவுத்திட்டம் - (4/2018) 15545 - 18245 / 130x 10 - 140 x 10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமை :-**

அ) கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17 வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 15.12.2018**

வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (IN/8553)(11,17)

**அனுப்ப வேண்டிய முகவரி**
**தலைவர், நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**
**தொலைபேசி இல. 021 222 2143**

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள்

### அமரர் வஸ்தியாம்பிள்ளை யேசுதாசன்



"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோ. 11:25)

நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள மதிய போசனத்தில் கலந்து கொண்டு எமது அனுதாபத்திலும் பங்குபற்ற தங்களை அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**
**இத்தாவில், பளை.**
**077 539 7514, 077 655 5492**

அன்னை மடியில் 29.05.1942 — ஆண்டவன் அடியில் 02.11.2018

## குருத்துவ வெள்ளிவிழா அழைப்பு



மீசாலை, இலந்தைக்குடல்
வீரகத்திப் பிள்ளையார்
திருக்கோயில்
பிரதமகுரு பாரத்வாஜ
கோத்ரம் கிரியாவித்தகர்,
வேத சிவாகம வித்வஜோதி,
வேத வித்யாபூஷணம்,
சிவாகம ஞான திவாகரன்

### பிரம்மஸ்ரீ பா.முரளீதரக் குருக்கள்

**(சுந்தரராஜ கோபால சர்மா)**

**ஸ்ரீமதி நாகபூஷணி தம்பதிகள்**

**விழாவின் சிறப்பு நிகழ்வாக :**
ஸ்ரீ விக்னேஸ்வர நவாக்னி ப்ரயோகம்
என்னும் சமஸ்கிருத நூலும் விழாநாயகரின் சிறப்புக்களை
விதந்துரைக்கும் **வெள்ளிவிழா மலரும்**
**வெளியிட்டு வைக்கப்படும்**
**விளம்பி வருஷம் கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி**
**01.12.2018 சனிக்கிழமை பி.ப. 3.00 மணி**
இடம்: மீசாலை இலந்தைக்குடல்,
வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயில்.

## கணிதம், வரலாறு

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தரம் 06 -11 வரை வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். (கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.
**077 968 2097**

## விற்பனைக்கு

நாட்டுப் பெரிய இன பசுக்கள் வளர்ப்புக்காக விற்பனைக்குண்டு.
**076 528 3752** (CS21512)(11,17)

## பிரத்தியேக வகுப்புக்கள்

வரலாறு (தரம் 6 - 11), வணிகமும் கணக்கீடும் (10-11), கணக்கீடு (12-13)
**077 832 1677**

## மாடிக் கடைகள் வாடகைக்கு

இலுப்பையடிச்சந்தியில் 3500 X 2 சதுர அடி கொண்ட கடைத் தொகுதிகள்.
**021 222 0045 / 077 711 1147**
**077 889 4200 / 076 007 6555**

## Science Class (Personal or Group)

விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரினால் **தமிழ்** மற்றும் **ஆங்கில** மொழிமூலத்தில் தனி அல்லது குழு வகுப்புகளாகக் கற்பிக்கப்படும்.
**தொடர்பு - 076 869 1176**

## உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை

- றொட்டி வேலை
- பார்சல்பொதிசெய்பவர்

**தொடர்பு - 077 465 2860**

## பெயர்மாற்றம்

உசன், மிருசுவிலைச் சேர்ந்த **முருகேசு** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **சிவராசா** எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் இவ்வாறே சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
**- சிவராசா -**

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீவிக்னேஸ்வரன் சிவனேஸ்வரி (பெரியபேபி)

*(ஆனைக்கோட்டை)*



நீர்கொழும்பை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீவிக்கேஸ்வரன் சிவனேஸ்வரி (பெரியபேபி) 30.11.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீவிக்னேஸ்வரனின் (ஓய்வுபெற்ற உப அதிபர், யாழ். தொழில்நுட்பக்கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் Dr.நகுலேஸ்வரன் (மனோதத்துவ நிபுணர் UK), Dr.கேதீஸ்வரன் (பொது வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும் பிறிந்தா(UK), பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிஷேக், அப்சரா, வைஷ்ணவி, சர்வேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Dr.சிவராஜா(முன்னாள் தலைவர் சமுதாய மருத்துவத்துறை, யாழ். மருத்துவபீடம்), மகேஸ்வரி, விக்னராஜா (UK), ஸ்ரீஸ்கந்தராஜா (Norway), செல்வராஜா(UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, புவனேஸ்வரி காலஞ்சென்ற மங்களேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரி காலஞ்சென்ற முத்தீஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, பரமேஸ்வரன், விமலேஸ்வரி, தியாகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும் ராஜராஜேஸ்வரன் - ஜெகதீஸ்வரி காலஞ்சென்ற Dr.சிவசுப்பிரமணியம்(காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்) மற்றும் ஜெகசோதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இளையமகனின் இல்லத்தில் (96, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.30 மணியளவில் ஆனைக்கோட்டை காக்கைதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**96, முதலாம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.** (CS 21513) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**076 985 3108**

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 10 . 1959



இறப்பு 29 . 11 . 2018

### திருமதி விக்னேஸ்வரி (விக்கி) பாலசுப்பிரமணியம்

*(ஓய்வு பெற்ற வைத்தியசாலை பெண் பரிசாரகர்)*

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி (விக்கி) பாலசுப்பிரமணியம் கடந்த (29.11.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும் சின்னக்குட்டி ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஆண் பரிசாரகர்) பாசமிகு துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சு.விநாயகமூர்த்தி, சு.திருநாவுக்கரசு, மற்றும் வே. புவனேஸ்வரி, சு.திலகவதியார், காலஞ்சென்ற ம.சர்வேஸ்வரி மற்றும் ம.யோகேஸ்வரி, சி.வரதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகா (ஆஸ்திரேலியா), சோபிகா(ஜேர்மனி), ஜசிதரன், தனுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரதீப்(ஆஸ்திரேலியா), செந்தூரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் தீபிகா(ஜேர்மனி), அக்ஷயாஅபி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று விளாவெளி இந்துமயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21460) (14,17)

**077 243 4043/021 300 7931**




## மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 04 . 1960

இறப்பு 29 . 11 . 2018

## வேலுப்பிள்ளை மனோகரராசன்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மனோகரராசன் 29.11.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், பொன்னுச்சாமி - செல்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், நாக நந்தினியின் அன்புக் கணவரும், நிஜகரன் (ஆசிரியர் - மன்/இலுப்பைக்கடவை T.M.V), தேவகி (பிரான்ஸ்), வினோகரன் (அபுதாவி), தேவகரன் (யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பத்துறை 2 ஆம் வருட மாணவன்), மிதிலா (மாணவி - வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீஸ்வரி, கமலராணி, ராஜேஸ்வரி, மோகனதாஸ், விமலராணி, ரஞ்சிதராணி, ஸ்ரீபாலசந்திரகுமார், காலஞ்சென்ற தேவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மங்களேஸ்வரி, நாகரஜனி, நாகசிவபாலன், ஞானபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுஷா, சந்திரகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டு கிழக்கு,**
**சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 225 1069, 077 254 1093, 076 869 0803**

## வலி. கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து)

## பதவி வெற்றிடம் (வெளிவாரியானது)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகட்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்படிவங்களை சங்கவேலை நாள்களில் தலைமைக் காரியத்தில் ரூபா 10 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர் வலிகிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி என்ற முகவரிக்கு 31.12.2018 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

**1. பதவிப் பெயர் :- செயலாளர்**

சம்பளக் குறியீட்டு இல-114/10 (கூ.வே.ஆணைக்குழு சு.நி இ 04/2018 இன் படி)
சம்பள அளவுத் திட்டம் :-17605-----21785 (சுற்றுநிருப இல 04/2018 இன் படி)
198x10- 220x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவுச் சங்கஊழியர் 11ஆம் சம்பளத் திட்டத்தில் காரியாலய உதவியாளர் / அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர் பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாதஅனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் காரியாலய உதவியாளர் / அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர் பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமைகள் அல்லது

(இ) பட்டயம் பெற்றசெயலாளர் நிருவாகஸ்தர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் செயலாளர் அலுவல்களில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

(ஈ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர் தரம்) சான்றிதழ் /க.பொ.த (உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் செயலாளர் அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**2. பதவிப் பெயர் :- கிராமிய வங்கி முகாமையாளர்**

சம்பளகுறியீட்டு இலக்கம் :-205/13(கூ.வே.ஆணைக்குழு சு.நி இ 04/2018 இன்படி)
சம்பளஅளவுத்திட்டம் :- 16365-19265 (சுற்றுநிருப இல 04/2018 இன்படி)
140x10- 150x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 வது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கிப் பகுதியில் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்கஊழியர் 15வது சம்பளத் திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுச்சங்கஊழியர் (உயர்தரம்) சான்றிதழுடன் கிராமியவங்கிப்பகுதியில் எழுதுவினையர் பதவியொன்றில் 02 வருடங்களுக்குகுறையாதஅனுபவம்.

**3. பதவிப் பெயர் :- வெளிக்கள உத்தியோகத்தர் (கிராமிய வங்கி)**

சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 210/13 (கூ.வே.ஆணைக்குழு சு.நி இ 04/2018 இன்படி
சம்பளஅளவுத்திட்டம் :- 16365-19265 (சுற்றுநிருப இல 04/2018- இன்படி)
140x10- 150x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

அ). கூட்டுறவு ஊழியர் 14 வதுசம்பளத் திட்டத்தில் அல்லது 15வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான ஒரு பதவியில் அல்லது எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரன தரப் பத்திரம் / க.பொ.த. சாதாரண தரம் / தே.க.பொ.த. பரீட்சையில் / இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் /தூய எண்கணிதம் /கணிதம் உடன் சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடான சித்தி

**4. பதவிப் பெயர் :- பம்பர் (எரிபொருள் நிரப்புநர்)**

சம்பளக் குறியீட்டு இலக்கம்:-313/16 (கூ.வே.ஆணைக்குழு சு.நி இ 04/2018 இன்படி
சம்பளஅளவுத்திட்டம் :- 15135-17685 (சுற்று நிருப இல 04/2018 இன்படி)
120x10- 135x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது. 01 ஆண்டுகால அனுபவம் அல்லது

(ஆ) 08 ஆம் தரகல்விச் சான்றிதழ்

**5. பதவிப் பெயர் :- காவலாளி**

சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 315/17 (கூ.வே.ஆணைக்குழு சு.நிஇ04/2018இன்படி
சம்பளஅளவுத்திட்டம் :- 14725-17175 (சுற்று நிருப இல 04/2018 இன்படி)
115x10- 135x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

05ம் வகுப்பு கல்விச் சான்றிதழ் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**6. பதவிப் பெயர் :- களஞ்சிய கூலியாளர் (தொழிலாளி)**

சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 318/17 (கூ.வே.ஆணைக்குழு சு.நி.இ 04/2018 இன்படி
சம்பள அளவுத்திட்டம் :- 14725-17175 (சுற்று நிருப இல 04/2018 இன்படி)
115x10- 130x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவுஊழியர் 17 வது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம் அல்லது

(ஆ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கிமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. பதவிப் பெயர் :- விற்பனை உதவியாளர்**

சம்பளக் குறியீட்டு இலக்கம் :-308/17 (கூ.வே.ஆணைக்குழு சு.நிஇ 04/2018 இன்படி
சம்பளஅளவுத்திட்டம் :- 14725-17175 (சுற்று நிருப இல 04/2018 இன்படி)
115x10- 130x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் சாதரணதரம் சான்றிதழ் அல்லது

(ஆ) 08 ஆம் வகுப்பிலான சித்தியும் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

பொதுவானது

1. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச் சங்கத்தினுடாக அனுப்புதல் வேண்டும்.
2. வயதெல்லை – 18 வயதிற்கும் 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். கூட்டுறவு சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
3. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டிய பிரதிகள்
   1. கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
   2. வதிவிட உறுதிச் சான்றிதழ்
   3. தேசிய அடையாள அட்டை பிரதி
   4. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
   5. நற்சான்றிதழ்
   6. ஏனைய தகைமைப் பிரதிகள்

தலைவர்
வலி கிழக்கு வடபகுதி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி

01.12.2018

(IN/8556)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி சங்கநிதி தபானந்தம்



தோற்றம் 09.07.1935 மறைவு 28.11.2018

மண்டைதீவைப் பிறப்பிட மாகவும், பொற்பதி வீதி கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சங்கநிதி தபானந்தம் கடந்த (28.11.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தபானந்தம் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் செல்லத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பதுமநிதி மற்றும் தவநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருணாச்சலம் (தமிழன் பாசறை குளப்பிட்டி கொக்குவில்), பழனிவேற் பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) காலஞ்சென்ற வர்களான பவளம்மா, வியாழம்மா, பரமானந்தம், அருளானந்தம் ஆகியோரின் அன்புமைத்துனியும் கிருபவாணி (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர், யாழ். கல்வி வலயம்), ஒளிவண்ணன் (கோட்ட கல்வி அலுவலகம், வேலணை), சோமமாலினி (கனடா), கோகுல வண்ணன், விஜயபாமன் (பிரான்ஸ்முன்னாள் உத்தியோகஸ்தர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற சரவணபவன் (ராசா) மற்றும் வசந்தமாலினி (ஆசிரியை, யா /கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), நந்தகுமார் (கனடா), வசந்தறோகினி (தாதிய உத்தியோகஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலை), சுசிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் கிருபவன் (பிரான்ஸ்), சாம்பவன் . பிரணவன், சாயுக்ஸன், கேதாரணி (முகாமைத்துவ உதவியாளர் வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்), தவகேதன், பிரியங்கன் (கனடா), லதுசன் (கனடா), கோபிராம், கிருஸ்ணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 59, பொற்பதி வீதி, கொக்குவில்**
**021 222 0063**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### அருட்தந்தை கில்லேறியன் வேதநாயகம் அமதி அடிகளார்
*(வேதா)*

யாழ். மாகாண அமலமரித்தியாகிகளின் மூத்த குருவும் முன்னாள் மாகாண முதல்வரும் இலங்கை மற்றும் தென் இந்தியாவில் நன்கு அறியப்பட்ட கட்டடக் கலைஞருமாகிய "வேதா" என்று அன்பாக அழைக்கப்படும் அருட்தந்தை கில்லேறியன் வேதநாயகம் அமதி அடிகளார் கடந்த (29.11.2018) வியாழக்கிழமை இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் காலமாகிவிட்டார்.

யாழ்ப்பாணம் குருநகர் புதுமைமாதா ஆலயத்தைச் சேர்ந்த அருட்தந்தை அவர்கள் 1957ஆம் ஆண்டிலே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கடந்த 61 ஆண்டுகளாக இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளில் இறைபணியாற்றினார். சிறந்த கட்டட கலைஞரான அருட்தந்தை கீழைத்தேச பாரம்பரிய கட்டட கலையினூடாக மறைத்தூது பணியாற்றினார்.

அருட்தந்தையின் பூதவுடல் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் உள்ள புனித டிமசெனட் ஆலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இரங்கல் திருப்பலியானது எதிர்வரும் (03.12.2018) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : அருட்தந்தை, எட்வின் வசந்தராஜா,**
**மாகாண முதல்வர்,**
**யாழ். அமலமரித் தியாகிகள்**

**076 532 3643**

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி திருச்செல்வம்



வேலணை மேற்கைப் பிறப்பிட மாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி திருச்செல்வம் நேற்று (30.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலணை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் நாரந்தனையைச் சேர்ந்த கந்தையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மரு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 21, ஓட்டுமடம் வீதி,**
**வண்ணார்பண்ணை**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**076 555 1903,**
**021 222 1561**

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி நமசிவாயம்

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நமசிவாயம் கடந்த (29.11.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் (எழுதுவினைஞர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லதம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகளும் சிவகுமார், சிவகலா, சிவகௌரி, சிவமணி, சிவராணி, சிவயோகம், சிவராசன் ஆகியோரின் அன்புத்தாயும் V.கந்தையா, (வேம்படி மில் KR), பொன்னம்பலம், சிவசண்முக ராஜா (மங்கை சில்க்ஸ், சுன்னாகம்), நேசன், கதிர்காமநாதன், நாகேஸ்வரி, பிரசாந்தி ஆகியோரின் அன்புமாமியும் சிவரஞ்சினி - சுந்தரசிவம், விக்கினேஸ்வரன் -நிரஞ்சனரூபி, திவாகரன் - மஞ்சுளா, சசிகரன் - தனரஞ்சினி, நீபனா - அனோஜன், சுரேஸ், சுரேகா - கணேஷ்வரன், சிவவதனா- மதிசுதன், சிவமனோகர், சிவநீபன், அனஜ, கௌசி, அனோஜன், விஜிதன், சுஜிதன், ஆருஷா, அபினா ஆகியோரின் அன்புபேர்த்தியும் கஜிபன், திபிஷா, கவின், இஷான், சாதனா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018)ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் G.P.S வீதி கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G.P.S வீதி, கல்வியங்காடு.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 8480 612, 077 632 6456**

## மரண அறிவித்தல்



### காங்கேசு சிவராசா

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் , பூந்தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு சிவராசா கடந்த (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான முத்துவேலு பூமணி தம்பதியரின் அன்புமருமகனும் அருட்செல்வியின் அன்புக்கணவரும் . காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி (சுவிஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), மகாலட்சுமி, தங்கலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் மணிதீபன் (லண்டன்), துவாரகி (பிரான்ஸ்), சுதன், கௌசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜீவிதா (லண்டன்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கெவின், கோபிதாஸ், கேதானுசன், தன்சிகா, கியூனிகா ஆகியோரின் அன்புப்பேரனும் றமணசோதி காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, தர்மபாலன், கோபாலபிள்ளை மற்றும் இராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2018)ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் 2 ஆம் வட்டாரம் அம்மன் கோயிலடி கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம், அம்மன் கோயிலடி,
வேலணை கிழக்கு, வேலணை

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 8524 364**

## மரண அறிவித்தல்



### கலாபூஷணம் தில்லையம்பலம் தவராசா

(தில்லை சிவலிங்கம்)

**மண் மகிழ**
**07.03.1950**

**கண்நெகிழ**
**29.11.2018**

ஆலடி பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தில்லையம்பலம் தவராசா நேற்று முன்தினம் (29.11.2018) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும் சந்திராதேவியின் பாசமிகு கணவரும் இன்பரூபன், சிலம்பரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனேசனின் அன்புச்சகோதரனும் ஆவார்.

பாரம்பரிய கலைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டி பல சாதனைகள் புரிந்து ஆயிரக்கணக்கானமாணவர்களைஉருவாக்கியதோடுகலாபூஷணம், கலைப்பரிதி, கலைச்சுடர், முதலமைச்சர் விருது, சிலம்புச் செல்வன், தேசத்தின்மகுடம் உள்ளிட்டபல விருதுகளைப் பெற்ற இவர் இறுதிவரை தனது கலைப்பணியை ஆற்றி வந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.12.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து அஞ்சலி கூட்டம் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை. 076 4891494

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## எங்களின்...

பார்த்து மைத்திரிபால அஞ்ச வேண்டிய தில்லை. எங்களின் கூட்டை யாராலும் பிரிக்க முடியாது. இவ்வாறு தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

7 ஆயிரம் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு சுகதாச உள்ளக அரங்கில் வைத்து நேற்று நிய மனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மகிந்த ராஜ பக்ச,

எங்களுக்கு இடையில் சிண்டுமுடிய சிலர் முனைகின்றார்கள். அரசமைப்பின் பிரகாரம் அரச தலைவருக்குக் காணப்படுகின்ற நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் 26ஆம் திகதிக்கு பின்னரான அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

நிறைவேற்று அதிகாரத்தை மக்களின் தீர்மானம் இல்லாமல் மாற்றியமைக்க முடியாது. மக்களுக்கான அதிகாரத்தை தமது கையில் எடுத்து மாற்றியமைக்க சிலர் முயற்சிக்கின்றார்கள். அரச தலைவர் இந்த விடயங்களைப் பார்த்து அஞ்ச வேண்டியதில்லை. அரச தலைவர் எடுத்த தீர்மானத்துக்கு ஆதரவாக நானும், இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களும் உள்ளார்கள். உங்கள் தீர்மானத்தை நாம் பாதுகாப்போம். அதனை மறக்க வேண்டாம்.

இன்று பெற்றோல் விலை குறைத்துள்ளோம். மக்களுக்கு சலுகைகள் வழங்குவது பற்றி ஆராய்கின்றோம். நாங்கள் அரசைக் கையிலெடுத்தது இதற்காகத்தான். நாங்கள் கூட்டிணைந்தது இதற்காகத்தான். இந்த இலக்கை வென்றெடுப்பதற்குதான் இந்தக் கூட்டு. அந்தக் கூட்டை யாராலும் பிரிக்க முடியாது - என்றார். (5,61)

## மட்டக்களப்பில்...

மட்டக்களப்பு, டிசெ. 1

மட்டக்களப்பு, வவுணதீவில் கடமை யில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வலையிறவுப் பாலத்துக்கு அருகே உள்ள சோதனைச் சாவடியில் கடமையில் இருந்தபோதே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் கைத்துப்பாக்கிகள் காணாமல் போயுள்ளன.

வவுணதீவு, பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அம்பாறை, பெரியநீலாவணையைச் சேர்ந்த கணேஸ் டினேஸ் (வயது-28), காலி, உடுகமவைச் சேர்ந்த நிரோசன் இந்திக பிரசன்ன (வயது-35) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சோதனைச் சாவடி வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. உயிரிழந்த இருவரும் புதிதாகப் பொலிஸ் சேவையில் இணைந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. அவர்களது கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் உள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி றிஸ்வி சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிழக்குப் பிராந்தியப் பொலிஸ் மா அதிபர் கபில ஜயசேகர தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடயவியல் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர், புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூற்றுச் சோதனைக்காக மட்டக்களப்புப் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

### சிறப்புக் குழு

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழு ஒன்று மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையிலான குழு ஒன்றே மட்டக்களப்புக்கு அனுப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸ்மா அதிபர் சம்பவ இடத்துக்கு நேற்று மாலை நேரில் சென்று ஆராய்ந்துள்ளார். (ந-26,46)

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 888

சீட்டிழுப்பு திகதி 2018.11.29 வியாழக்கிழமை

D 22 30 52 73

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 40,000,000/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

## வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் 2019

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான எமது சபையின் வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் 30.11.2018 இலிருந்து 13.12.2018 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், 30.11.2018**

**தர்மலிங்கம் நடனேந்திரன்**
**தவிசாளர்**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 11/26, மூளாய் வீதி, 2ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 04 மூளாய் வீதி. 2ஆம் ஒழுங்கை வீதியிலுள்ள இல: 11/26 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **நாகர் விஸ்வநாதன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை **செல்லையா ஆனந்த கிருஷ்ணகுமார்** ஆகியவர் **முத்துக்குமாரு இராமலிங்கம்** ஆகியவரிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2378/21.10.1979 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆதனம் ஆரம்பத்தில் குறித்த முத்துக்குமாரு இராமலிங்கத்தின் பேரனார் காலஞ்சென்ற இராமலிங்கத்திற்கு சொந்தமாகவிருந்து பின்னர் அவரது தகப்பனாரிற்கு முதுசமாக வந்தடைந்தது பின்னர் அவருக்கு வாய்ச்சொல் நன்கொடையாக வழங்கப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டு அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.


குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை **சின்னத்தம்பி திரவியமும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு யோ. சத்திய நாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1440/03.04.2006 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லையா ஆனந்த கிருஷ்ணகுமார்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடைய வரானார்கள்.

**சின்னத்தம்பி திரவியமும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சின்னத்தம்பி திரவியமும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்களிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

## மரண அறிவித்தல்



**பிறப்பு 03.11.1945** **இறப்பு 30.11.2018**

## சின்னப்பு ஜோசப் செல்வநாயகம்

(உரிமையாளர், ஆசீர்வாதம் புத்தகசாலை, ஆசீர்வணிக நிலையம்)

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஜோசப் செல்வநாயகம் நேற்று(30.11.2018)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4454**

**தகவல் : குடும்பத்தினர்.**

ராசி அதிர்ஷ்டம்

திகதி 30.11.2018 | வெற்றி வாரம் 2409 | வர்ணம் சிவப்பு

விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள் 13 55 56 60

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,782,312

2018.12.02ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

Web: www.dlb.lk

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 374

வர்ணம் : செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.11.30

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 104,251,558/-

X 02 25 26 72

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 450

வர்ணம் : செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.11.30

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,721,345/-

வெற்றி இலக்கங்கள் 01 11 36 42 W

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
# பதவி வெற்றிடம்

## சாரதி - 312/13

**சம்பள அளவுத்திட்டம்**

(4/2018) 16365 - 19265 / 140 x10 - 150 x10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமை:**

அ) 5 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவுதிகதி - 15.12.2018**

வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தலைவர்,**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,**
**தொ.பே:. 021 222 2143**

(m.8552)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 11/25, மூளாய் வீதி, 2 ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 4 மூளாய் வீதி. 2 ஆம் ஒழுங்கை வீதியிலுள்ள இல 11/25 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **நாகர் விஸ்வநாதன்** என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை **செல்லையா ஆனந்த கிருஷ்ணகுமார்** ஆகியவர் **முத்துக்குமாரு இராமலிங்கம்** ஆகியவரிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2378/ 21.10.1979 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆதனம் ஆரம்பத்தில் குறித்த முத்துக்குமாரு இராமலிங்கத்தின் பேரனார் காலஞ் சென்ற இராமலிங்கத்துக்கு சொந்தமாகவிருந்து பின்னர் அவரது தகப்பனாருக்கு முதுசமாக வந்தடைந்தது. பின்னர் அவருக்கு வாய்ச்சொல் நன்கொடையாக வழங்கப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டு அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை திரவியம் சுதாகரும் பெண் யோகரஜனியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்திய நாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1439/ 03.04.2006 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லையா ஆனந்தகிருஷ்ண குமார் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

திரவியம் சுதாகரும் பெண் யோகரஜனியும் ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திரவியம் சுதாகரும் பெண் யோகரஜனியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

## காங்கேசன்துறை இறங்கண்யவளை சிவகுருநாதசுவாமி ஆலயம் பொதுக்கூட்ட அறிவித்தல்

இக்கோயில் கடந்த யுத்தம் காரணமாக முற்றாக அழிவடைந்-துள்ளது. இந் நிலையில் மேற்படி கோயில் அமைந்துள்ள பிரதேசம் 30 வருடங்களுக்கு பின்னர் இராணுவத்தால் விடுவிக்கப் பட்டுள்ளது. எனவே இக்கோயிலை மீண்டும் கட்டி எழுப்புவதற்காக பரிபாலன சபை ஒன்றினை ஏற்படுத்துவதற்கான பொதுக்கூட்டம் வருகின்ற 16.12.2018 மதியம் 2.00 மணியளவில் J/235 கிராமசேவகர் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக் குமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**சூ.பொ.கோகுலசங்கர்.**
**077 375 2273**

(CS 21489)(14.17)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 18.03.1980 — இறப்பு 29.11.2018

### திருப்பதி சசிகுமார்

**கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையின் ஆரம்பக்-கல்வி ஆசிரிய மாணவி திருமதி கலைவாணி சசிகுமார்** அவர்களின் அன்புக் கணவர் **திருப்பதி சசிகுமார்** அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத் துடன் நாமும் இணைவதுடன் அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திகின்றோம்.

**துயருடன்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகம்.**

(CS/21509)(11.17)

## நினைவழியா ஆண்டுகள் இருபத்தைந்து நிறைவில்

அமரர் திருமதி
### மல்லிகாதேவி சிவகுமாரன்
(குப்பிளான் தெற்கு, ஏழாலை)



தோற்றம் 26.07.1948

மறைவு 01.12.1993


உருவம் தான் இல்லை அம்மா!
உயிரினை கடந்ததோர் உணர்வாய்
உடன் இருக்கிறீர்கள் அம்மா!

வேம்பன் வீதி,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவில்
கணவர், மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உடன் பிறப்புக்கள்.

(cc/21452) (13.17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 09 . 1963

மறைவு 21 . 11 . 2016

### அமரர் இராசரத்தினம் ரவிச்சந்திரன்

புன்னகை பூத்த முழுமதியின் தன்னொளியாம் –
அவனியிலே
பக்குவமாய் அரவணைத்து பாசத்துடன் எமைக்காத்து
எமை நல்வழிப்படுத்திய எங்கள் தெய்வமே – அப்பா
கண்ணில் ஓரம் கண்ணீர் – துளியாய் கசிய
இன்றென நினைத்திடும் வேளையில்
ஈராண்டுகள் கடந்ததுவாம் யாமறியோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**மனைவி சாந்தி மற்றும்**
**பிள்ளைகள் - கீர்த்தன், தூரிகா (ஜேர்மனி)**

(CS/21433)(11,17)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
### 11/27, மூளாய் வீதி, 2 ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 4 மூளாய் வீதி. 2 ஆம் ஒழுங்கை வீதியிலுள்ள இல 11/26 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **நாகர் விஸ்வநாதன்** என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை **செல்லையா ஆனந்த கிருஷ்ணகுமார்** ஆகியவர் **முத்துக்குமாரு இராமலிங்கம்** ஆகியவரிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2378/ 21.10.1979 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆதனம் ஆரம்பத்தில் குறித்த முத்துக்குமாரு இராமலிங்கத்தின் பேரனார் காலஞ் சென்ற இராமலிங்கத்துக்கு சொந்தமாகவிருந்து பின்னர் அவரது தகப்பனாருக்கு முதுசமாக வந்தடைந்தது. பின்னர் அவருக்கு வாய்ச்சொல் நன்கொடையாக வழங்கப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டு அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை பொன்னுச்சாமி புஸ்பராசாவும் பெண் நிர்மலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத் தாரிசு யோ.சத்திய நாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1436/ 03.04.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லையா ஆனந்தகிருஷ்ணகுமார் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

பொன்னுச்சாமி புஸ்பராசாவும் பெண் நிர்மலாவும் ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்ப வர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள் களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பொன்னுச்சாமி புஸ்பராசாவும் பெண் நிர்மலாவும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### வாடகைக்கு வீடுகள் / கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள்/ கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/ கட்டடத்தை வாடகைக்கு தரவிரும்புவோர் கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 14.12.2018 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர் / பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடதுமேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு /கட்டடம்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

- தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்.

..............................

..............................

..............................

..............................

பிரதிப் பதிவாளர்/ பொதுநிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உபயோகத்திற்கான வீடு / கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ......... ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/ கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்குத்தர விரும்புகின்றேன்.

### வீடு/ கட்டடம் பற்றிய விபரங்கள்

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
..............................
..............................

2) வீட்டு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..............................
..............................

3) தொடர்பு கொள்ளவேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்:..............................
முகவரி: ..............................
தொலைபேசி இல:..............................

4) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு (சதுரஅடி):..............................

5) காணியின் பரப்பளவு: ..............................

6) அறைகளின் எண்ணிக்கை : ..............................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ..............................
மலசலகூடங்களின் எண்ணிக்கை..............................

7) மின்சாரவசதி உண்டு / இல்லை..............................
விபரம்
..............................

8) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர் விபரம்
..............................
..............................

9) எதிர்பார்க்கும் குத்தகை /மாதாந்த வாடகை..............................

10)குத்தகைக்குதரக் கூடியகால அளவு..............................

11) வேறுயாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) ..............................
..............................

.................. திகதி — .................................. விண்ணப்பதாரரின் கையொப்பம்

## வாள்களுடன்...

முள்ள 7 வாள்களும் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் கடந்த சில தினங்களால் 20இற்கும் மேற்பட்டோர் விசார ணைக்கு உள்படுத்தப்பட்டனர். அவர்களிடம் கிடைத்த தகவலின் அடிப்படையில் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 24 வயதுக்குட்பட்டவர் கள். அவர்கள் மூவரும் கொக்குவிலைச் சேர்ந்த வர். சந்தேகநபர்களிடம் 7 வாள்க்ள் மீட்கப்பட் டன. அவை ஒவ்வொன்றும் 3அடி நீளம் கொண்ட **மிகவும் கூரிய வாள்கள்.** விசாரணைகளில் பின் னர் சந்தேகநபர்கள் மூவரும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர், என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஆவா குழுவின் தலைவர் என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்படும் மோகன் அசோக் கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (5,26,106)

## வீட்டில்...

ளார். தாய் தற்போது வவுனியா மருத்துவனை யில் சிகிச்சை பெறுகின்றார். இந்தச் சம்பவம் ஓமந்தை, விளாத்திக்குளத்தில் நேற்று அதி காலை நடந்துள்ளது.

வீட்டில் பிரசவிக்கப்பட்ட சிசு ஒன்று புதைக்கப்பட் டுள்ளது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தக வலை அடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

தாய் குழந்தையை வீட்டில் பிரசவித்துள்ளார் என்று தெரியவருகின்றது. உயிரிழந்த நிலையில் சிசு பிறந்ததால் அதைப் புதைத்திருக்கலாம் என்று விசாரணைகளில் தெரியவருகின்றது. விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-110)

## 8 மாதக்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளது. எட்டு மாதக் குழந் தையை தந்தை வழி உறவான வயதான பெண் மணியிடம் ஒப்படைத்துவிட்டு குழந்தையின் தாய் ஆடு மேய்க்கச் சென்றுள்ளார். தந்தை தொழி லுக்குச் சென்றுள்ளார். வெளியில் சென்ற தாய் மீண்டும் வந்துபார்த்தபோது வயதான பெண் மணி தனிமையில் இருந்துள்ளார். அவரிடம் குழந்தை எங்கு என்று கேட்டபோது சரியான பதிலை வழங்கவில்லை.

குழந்தையை தாய் பல இடங்களில் தேடியுள்ளார். குழந்தை கிடைக்கவில்லை. அயலவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அனைவரும் குழந் தையை தேடியநிலையில் குழந்தை அருகில் உள்ள கிணற்றினுள் விழுந்திருக்கலாம் என்று சந்தேகம் கொண்டனர்.

கிணற்றில் நீரை இறைத்தபோது குழந்தையின் உடல் அதில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. தகவல் புளியங்குளம் பொலிசாருக்கு தெரிவிக் கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் வயதான பெண்மணியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (5.110)

## ஐ.தே.மு...

முடிவுகள் எடுக்கப்படவில்லை. இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமை அரச தலைவர் மைத்திரியை மீளவும் சந்திப்போம். இவ் வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக் கும் இடையே நேற்று இரவு 9 மணி முதல் சந்திப்பு இடம்பெற்றது. அரச தலைவர் செயலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது. சந்திப்பின் முடிவில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அகில விராஜ் மேற்கண்டவாறு கூறினார். இந்தச் சந்திப்பின் போது, நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர் மானம் மீதான வாக்கெடுப்புத் தொடர்பிலும், ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்றால், தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங் கவை பிரேரிப்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. (5)

பிலியந்தலையில் இயங்கும் தொழிற் சாலைக்கு **Multy Duty Cleark, Account cleark** 60 வயதுக்குட்பட்ட அனுபவமுள்ள ஆள்கள் தேவை. **- 071 773 3377**

கொழும்பு சுற்றுவட்டாரத்தில் இயங்கும் தொழிற் சாலைக்கு தொழிலாளர்கள் (Labours) தேவை. சம்பளம் 60, 000/= உணவு, தங்குமிட வசதி உண்டு. கிராம சேவகர் சான்றிதழுடன் தொடர்பு கொள்ளவும். **- 071 348 9086, 071348 9079, 071 494 8309**

## தலைமை...

எதிராக இங்கு வரவில்லை. மகிந்தவை நாங்கள் ஒருபோதும் ஆதரிக்க முடியாது. அவரை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவரது கடந்த காலச் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் அவர் மீது அதிருப்தியில் இருக்கின்றார்கள். அவரது கடந்த காலச் செயற்பாடுகளை நாங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் திருந்தி வந்தால் அவருடன் இணைந்து வேலை செய்வதற்குத் தயாராக உள்ளோம். ஆனால் அவரை நாங்களாக மீண்டும் கொண்டுவரத் தயாரில்லை. தமிழ் மக்கள் அதனை எதிர்ப்பார்கள். நாடு தற்போது மிக மோசமான நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் உங்களை நம்பி வாக்களித்தார்கள். அவர்கள் தங்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என்று நம்பியே உங்களுக்கு வாக்களித்தார்கள். கடந்த 26ஆம் திகதி மகிந்தவை தலைமை அமைச்சராக நியமிக்க முன்னர் எங்களுடன் கலந்துரையாடியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது பெரும் தவறு, என்று கூறியுள்ளார். அத்துடன் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மைத்திரி, நாட்டின் தற்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரும்புகின்றேன். அரச தலைவராக நான் தெரிவு செய்யப்படுவதற்கு தமிழ் மக்களின் வாக்குகள் காரணமாக இருந்தன. அதனை நான் மறக்கவில்லை. அந்த மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் நான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். அரசியல் தீர்வு விவகாரத்தை கடந்த மூன்றரை ஆண்டுகளும் மற்றொருவர் கையில் கொடுத்திருந்தேன். இனி அதனை எனது கையில் எடுத்து நான் செயற்படுத்துவேன். கடந்த 26ஆம் திகதி மாற்றம் ஒன்றைச் செய்வதற்க முன்னர் உங்களுடன் கலந்துரையாடாமல் விட்டது தவறுதான், என்று கூறியுள்ளார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், இப்போதும் நாங்கள் உங்களை நம்புகின்றோம். உங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எந்தவொரு தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் அதனை நாங்கள் ஆதரிக்க மாட்டோம். ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியினரும் அரச தலைவர் தேர்தலில் உங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள். அவர்களின் பெருவாரியான வாக்குகளும் உங்களுக்குக் கிடைத்தன. அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுத் தேர்தலில் 106 ஆசனங்கள் கிடைத்தன. அது, உங்கள் ஆட்சியில் அவர் தலைமை அமைச்சராகத் தொடர்வதற்கே கிடைத்த வாக்குகள். நீங்கள் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க மாட்டேன் என்று கூற முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அரச தலைவர் மைத்திரிபால, கடந்த மூன்றரை ஆண்டுகளாக ரணிலுடன் பணியாற்றியுள்ளேன். அவருடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவது கடினம் என்று தெரிவித்துள்ளார்.

ஜேர்மன், பிரிட்டன், ஆஸ்திரேலியாவில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் ஆட்சி நடக்கின்றது என்று அரச தலைவர் குறிப்பிட, அந்த நாடுகளில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மாணம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் இங்கு இரண்டு தடவைகள் நம்பிக்கையில்லாத் தீர்மான்ம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சம்பந்தன் காட்டமாக பதிலளித்துள்ளார்.

இதன்போது அரச தலைவர், நம்பிக்கையில்லாத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட முடியாது. அது ஆட்சி மாற்றத்துடன் தொடர்புடைய முக்கியமான விடயம். நாடாளுமன்றத்தில் மகிந்த தரப்புக்கு பெரும்பான்மை இல்லை என்பது தொடர்ச்சியாக நடக்கின்ற விடயங்கள் ஊடாகத் தெளிவாகின்றது. நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுங்கள். புதிய தலைமை அமைச்சரை நியமிக்குமாறு கோரி நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள். அதன் பின்னர், அரச தலைவராக நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதனைச் செய்கின்றேன். மகிந்தவும் அதற்கு அமைவாகச் செயற்படுவார் என்று மைத்திரி கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானத்தை நிறைவேற்றி வெற்றி பெற்றால், அவர்கள் பிரேரிப்பவரை தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு அரச தலைவரிடம் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளது.

இதன்போது, நீதிமன்றத்தில் அரசமைப்பு மீறல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாகவும் அரச தலைவர் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அந்த வழக்குகள் மீளப் பெற வேண்டும் என்று சாரப்பட கருத்துக் கூறியுள்ளார். இதன்போது கூட்டமைப்பினர், தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைச் சீர் செய்தால் அந்த வழக்குகள் மீளப் பெறப்படும் என்று கூறியுள்ளனர்.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோர் பங்கேற்கவில்லை. (5,31,105)

## நாட்டின்...

முன்னணி அரசு தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளது. இந்த ஆதரவால் கூட்டமைப்பு அரசின் பங்காளியாகவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இல்லாமல் செய்யக் கோரும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்றக் குழு கூடி அறிக்கை வெளியிட்டிருந்தோம். அதில் தெளிவாக அரச தலைவரின் இந்த நடவடிக்கைகள் அரசமைப்புக்கு முரணானது என்றும் சட்டவிரோதமானது என்றும் கூறியிருந்தோம். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவில்லை.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளைத் தடுத்து அரச தலைவர் நடவடிக்கை எடுத்திருந்திருந்தார். அதைத் தொடர்ந்து நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று அறிவித்திருந்தோம். ஆனால் நவம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான உத்தரவை அரச தலைவர் பிறப்பித்திருந்தார். அதற்கு எதிராக நாங்கள் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தோம்.

அரசமைப்பில் இல்லாத ஒரு அதிகாரத்தை அவர் உபயோகிக்கின்றார் என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் அரச தலைவரின் கட்டளையை இடைநிறுத்தியுள்ளது. நாங்கள் எடுத்த நடவடிக்கையால்தான் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடக் கூடியதாக இருந்தது. இன்று நாடாளுமன்றம் இயங்குகின்றது என்றால் உயர்நீதிமன்றில் மனுக்களைச் சமர்ப்பித்து அது தொடர்பாக வாதாடி இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றமையே காரணம். அரசமைப்பு மீறப்படுகின்றது என்பது மிகப் பாரதூரமான விடயம். அது தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செய்யும் சில நபர்கள் தவறான கருத்துக்களைப் பரப்புகின்றனர். அதனால் இந்த விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் நீண்டகாலத் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக நோக்குவது ஒரு புதிய அரசமைப்பையே ஆகும்.

அரசமைப்பில் செய்யப்படுகின்ற இணக்கப்பாடுகளின் மூலமாகத்தான் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்பட முடியும் என்று நாம் பணியாற்றுகின்றோம். அரசமைப்பின் ஊடாக ஒரு தீர்வு ஏற்படுமாக இருந்தால் அந்த அரசமைப்பில் கூறப்படுபவை கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவை மீறப்படக் கூடாது. ஒரு நாட்டின் அரசமைப்பை எவர் விரும்பியவாறும் மீறிச் செல்லலாம் என்றால் நாங்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வில் எந்த அர்த்தமும் இல்லாது போய்விடும். இது முழுநாட்டுக்கும் பொருந்துவதாக இருந்தாலும் முழு நாட்டுக்கும் நன்மையானதை நாம் செய்து கொண்டிருந்தாலும், சிறப்பாக தமிழ் மக்கள் அவதானிக்க வேண்டியதொரு பகுதிநிலை இருக்கின்றது.

அரசமைப்பு மீறப்படுவதை நாங்கள் அனுமதியளித்துக் கொண்டிருந்தால் எங்கள் நீண்டகால அரசியல் தீர்வுக்கும் அது பங்கம் விளைவிக்கும். இது எமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அரசமைப்பு மீறப்படக் கூடாது என்பதற்கான ஏனைய கட்சிகளுடன் இணைந்து நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாங்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) அரச தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னதான நிலைக்கு ஆட்சிக்கு மாற்றப்பட வேண்டும். இது 26ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றவுடன் எடுத்த தீர்மானமாகும். நாடாளுமன்றத்தில் இரண்டு தடவைகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையால் தலைமை அமைச்சரும் இல்லை, அமைச்சர்களும் இல்லை, அரசும் நாட்டில் இல்லை. ஒரு மாத காலமாக அரச தலைவரால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவர் இந்தச் சபைக்கு வந்து பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலைமையில் உள்ளார். அதனால் இங்கு வராமல் இருக்கின்றார்.

இந்த நிலைமையில் நாட்டின் நன்மை கருதி இனியும் நாங்கள் பேசாமல் இருக்க முடியாது என்று நாங்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம். 26ஆம் திகதிக்கு முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு இருந்தது. அந்த நிலைக்கு மாற்றப்பட வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி தலைமை அமைச்சர் ஒருவரை முன்மொழிந்தால் அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறக் கூடியவர் என்ற நம்பிக்கை கொண்டிருந்தால் அவருக்கு ஆதரவை வழங்குவோம் என்று கூறியுள்ளோம். இந்தச் செய்கைகளுக்கு எங்கள் ஆதரவைக் கொடுப்போம் என்று கூறியது ஐக்கிய தேசிய முன்னணியில் நாம் சேருகின்றோம் என்று அர்த்தமில்லை. சில இடங்களில் தவறான பரப்புரை செய்யப்படுகின்றது.

நாட்டின் நன்மை கருதி தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவர் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் இரு தடவைகள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்னதான ஐக்கிய தேசிய முன்னணியின் அரசை அமையுங்கள். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டுள்ளவரைத் தலைமை அமைச்சராக நியமியுங்கள் அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம் என்று கூறியுள்ளோம்.

நாட்டில் நிலையானதன்மையை ஏற்படுத்தவும் நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையைத் தீர்க்கவும் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கையே இது. அதை எந்த வகையில் விமர்சித்தாலும் இதுவே எமது நிலைப்பார்டு - என்றார். (ற-10)

## திங்களன்று...

வுக்கும் இடையில் மீண்டும் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அரச தலைவர் செயலகத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட் கிழமை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர், பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. அன்றைய கூட்டத்தில், கூட்டமைப்பினரும் பங்கேற்று தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று அரச தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில், கூட்டமைப்புக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கடந்த ஒக்ரோபர் மாதம் மூன்றாம் வாரம் அளவில் சந்திப்பு நடைபெற்றிருந்தது. தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும், உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் என்று அந்தச் சந்திப்பில் அரச தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## பெற்றோல்...

மற்றும் டீசல் ஆகியவற்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மகிந்தவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,


கடந்த மாதம் எரிபொருள்களின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டது. தற்போதும் குறைக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் 135 ரூபாவாகவும், 95 ரக ஒக்டைன் பெற்றோல் 162 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். ஓட்டோ டீசல் 106 ரூபாவாகவும், சுப்பர் டீசல் 131 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் - என்றார். (5,61)

## மரண அறிவித்தல்

# முத்தையா சோமசுந்தரம்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - கட்டடத் திணைக்களம்)**



கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா, ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சோமசுந்தரம் நேற்று (30.11.2018) வெள்ளிக் கிழமை காலமானரார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரம்பன் மேற்கைச் சேர்ந்த முத்தையா - நாகமுத்து தம்பதிகளின் ஏக புத்திரனும் காரைநகர், இலகடியைச் சேர்ந்த றாமபிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலாம்பிகைஅம்மாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி பாக்கியலஷ்மி செல்வரட்ணத்தின் அன்புச் சகோதரனும் பாலமோகன் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), ஜெயந்தினி (ஜேர்மனி), சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபராணி, பாலகிருஷ்ணன், சிவனேசன், ஜெயலஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிசாந்தன், பிரியங்கா, சரவணன், சுமந்திரன், கபிலன், காயத்திரி, கோகுலன், சரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு;
**சோ. சுரேந்திரன் (மகன்)**
**+1(416) 985 1647**

**தகவல்: றா.அமிர்தலிங்கம்**
**(மைத்துனர்)**
**716, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 1
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான ஏ பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் கால்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், டிசெ. 1
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 20 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.
றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தியது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி. றேஞ்சர்ஸைக் கட்டுப்படுத்த விண்மீன் அணி பெரும் சிரமப்பட்டது. முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றேஞ்சர்ஸ். றேஞ்சர்ஸ் அணியின் சார்பில் வர்மன் 2, ஆர்த்திகன், கீர்த்திகன், ஆர்நியன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்தனர்.
ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த கீர்த்திகன், தொடராட்ட நாயகனாக விண்மீன் அணியைப் பிரதி நிதித்துவம் செய்த ரதன், சிறந்த கோல் காப்பாளராவும் நியூட்டன் அணியைப் பிரதிநிதித்து வம் செய்த அனுசாந், இந்தத் தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராக இமையாணன் மத்திய அணியைப் பிரதிநிதித்துவம் செய்த அலெக்சன்ஆகியோர்தெரிவுசெய்யப்பட்டனர்.(ம-422,23,108)

# கார்ல்சன் சம்பியன்

உலக சதுரங்கத் தொடரில் அமெரிக்க வீரரைத் தோற்கடித்து கிண்ணம் வென்றார் நோர்வே வீரர் கார்ல்சன்.
இந்த வருட உலக சம்பியன்ஷிப் தொடரில் கார்ல்சனை எதிர்த்து அமெரிக்க வீரர் பபியர்னோ மோதினார். 12 சுற்றுக்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 12 சுற்றுக்களும் சமநிலையில் முடிந்ததை அடுத்து கடந்த வருடம் கிண்ணம் வென்றதன் அடிப்படையில் கார்ல்சன் சம்பியன் என்று அறிவிக்கப்பட்டது. (ம)



# பயிற்சிமுகாம்


யாழ்ப்பாணம், டிசெ. 1
இலங்கை கால்பந்தாட்டச் சமேளனத்தின் 23 வயதுப் பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சிமுகாம் எதிர்வரும்; 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பக்கீர் அலி இந்தப் பயிற்சிமுகாமைமுன்னெடுக்கவுள்ளார். மேற்படி பயிற்சி முகாமில் பங்கெடுக்கவுள்ள வீரர்களின் விவரங்களை லீக் செயலாளரிடம் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னார் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# கலந்துரையாடல்


யாழ்ப்பாணம், டிசெ. 1
சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கானை பிரதேச செயலளர் திருமதி பிறேமினி தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள விளையாட்டு போட்டிகள் தொடர்பிலும், விளையாட்டுக் கழகங்களை மீள்பதிவு செய்வது தொடர்பாகவும் கலந்துரையடவுள்ளதால் விளையாட்டுக் கழகத்தின் தலைவர், செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் ராம்மியராகுலன் கேட்டுக்கொண்டார். (ம-23)

# வெளிநாட்டில் பிறந்தவர்களுக்கான பிடியைக் குறைத்தது இங்கிலாந்து


வெளிநாட்டில் பிறந்தவர்களுக்கான தகுதி அளவுகோலைக் குறைத்தது இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.
இங்கிலாந்தில் வசித்து வருபவர் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் ஜாப்ரா ஆர்செர். பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் அசத்திவரும் ஆர்செரை ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் அணி 8 லட்சம் பவுண்டுகளுக்கு வாங்கியது. இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணியிலும் அவரை இடம்பெற வைக்க நிர்வாகம் விரும்பியது. ஆனால் 23 வயதாகும் ஆர்செர் மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள பார்படோஸில் பிறந்து வளர்ந்தவர். 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மேற்கிந்தியத் தீவுகள் தேசிய அணிக்காக விளையாடினார். 2015ஆம் ஆண்டு சசெக்ஸ் அணி அவரை ஒப்பந்தம் செய்தது. இதனால் ஆர்செர் இங்கிலாந்துக்குச் சென்றார். தற்போது இங்கிலாந்தில் வசித்து வருகிறார். இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் விதிமுறைப்படி வெளிநாட்டில் பிறந்த ஒருவர் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க வேண்டுமென்றால் இங்கிலாந்து அல்லது வேல்ஸில் 7 வருடங்கள் வ்சிக்க வேண்டும். தற்போது இந்த விதியில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் மாற்றம் கொண்டுவந்துள்ளது. 7 வருடத்தை நான்கு வருடமாக மாற்றியுள்ளது. இந்த விதி அடுத்த ஆண்டும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது. இதனால் ஆர்செர் இங்கிலாந்துக்காக விளையாடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)



பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது நியூசிலாந்து அணி. (ம)



# காயமடைந்தார் இந்திய இளம் வீரர் ஷா மூன்றாம் திகதி வரைக்கும் முழு ஓய்வு!





இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் பிருத்வி ஷா காயமடைந்தார். எதிர்வரும் மூன்றாம் திகதி வரைக்கும் அவர் முழுமையான ஓய்வில் இருப்பார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

இந்திய அணிக்கும் ஆஸ்திரேலியப் பதினொருவர் அணிக்கும் இடையிலான பயிற்சி ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. ஆட்டத்தின் நேற்றைய நாளில் பிருத்வி ஷா பிடியெடுப்பை மேற்கொள்ள முயற்சித்த போது அவரின் கணுக்கால் மடங்கியது. இதையடுத்து அவர் வலியால் துடிதுடித்து விழுந்தார். தொடர்ந்து நடக்க இயலாத நிலையில் அணியின் மருத்துவர்கள் அவரை தூக்கிச் சென்றனர். இதையடுத்தே நாளைமறு தினம் வரைக்கும் அவருக்கு முழுமையாக ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியத் தொடரில் பிருத்வி ஷா விலகுவதற்கான வாய்ப்புக் குறைவு. சில நேரங்களில் முதலாவது ஆட்டத்தை மட்டும் தவறவிட வேண்டிவரலாம். அவ்வாறு சில ஆட்டங்களைத் தவறவிடும் பட்சத்தில் அல்லது தொடரில் இருந்து விலகும் பட்சத்தில் பிருத்விக்குப் பதிலாக தவான் அல்லது அகர்வால் அணிக்குள் அழைக்கப்படுவார்கள் என்று கருதப்படுகிறது.

பிருத்வியின் காயம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நாளை (இன்று) மருத்துவ அறிக்கை வெளியிடப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. (ம)



# கோக்லிக்கு எதிர்ப்பலை

ஆஸ்திரேலியப் பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தை கோக்லி துச்சமாகக் கருதி விட்டார். ஆஸ்திரேலியப் பதினொருவர் அணியை அவமதித்து விட்டார் என்று கோக்லிக்கு எதிராக சமூக வலைத்தள வாசிகள் கடும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

ஆஸ்திரேலியப் பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் நாணயச் சுழற்சியின் போது காற்சட்டை அணிந்து வந்ததை அடுத்தே கோக்லிக்கு எதிராக இவ்வாறான கருத்துக்கள் கொட்டப்பட்டுள்ளன. (ம)

# ஆஸிக்கு எதிரான டெஸ்டில் இந்தியா கிண்ணம் வெல்லும்


## தவான் நம்பிக்கை

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான்.

கிரிக்கெட் இணையத் தளமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் தவான். அவர் மேலும் தெரிவித்ததாவது


ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான அணியில் நான் தேர்வு செய்யப்படவில்லை. இது எனக்கு சிறிது வருத்தத்தை அளித்தது. இருந்தும் நான் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து சென்றுவிட்டேன். நேர்மறையான விடயங்களை ஏற்றுக்கொண்டு நடப்பவன் நான்.

டெஸ்ட் தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடும். இந்த முறை இந்திய அணிக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறேன். அனைத்துத் துறைகளிலும் இந்திய அணி அபாரமாகச் செயல்பட்டு வருகிறது - என்றார். (ம)




### இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்

# ஆஸ்திரேலிய அணியை தெரிவுசெய்த பொண்டிங்




இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியில் விளையாட வேண்டிய பதினொருவர் குறித்த தனது விருப்பத்தை வெளியிட்டார் பொண்டிங். ஆரோன் பின்ஞ், மார்கஸ் ஹரிஸ், உஸ்மன் கவாஜா, ஷோன் மார்ஷ், டிராவிஸ் ஹெட், டிம் பெய்ன், மிச்செல் ஸ்ராக், கம்மின்ஸ், நாதன் லையன், ஹசில்வுட், பீட்டர் சிடில் ஆகிய வீரர்களையே பொண்டிங் தெரிவு செய்துள்ளார். பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் ஆகியோர் தடை பெற்றுள்ள நிலையில் அவர்கள் இல்லாத ஆஸ்திரேலியாவை இந்திய அணி வீழ்த்தும் என்கிற கருத்துக் கணிப்புக்களேபொதுவாக உள்ளன. ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஜாம்பவான்களான ஹடிச், வோர்ண், சைமன்ஸ், கிளார்க் ஆகியோர் கூட வெறும் கருத்துக் கணிப்புக்களுடன் நின்றுவிட்ட நிலையில் பொண்டிங் ஒருவரே ஆஸ்திரேலிய அணியைப் பலப்படுத்த என்னவெல்லாம் செய்ய வேண்டும்என்ற ஆலோசனையை அந்த அணிக்கு வழங்கி வருகிறார். இதன்படி, ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியில் மக்ஸ்வெலுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் முன்னதாக வலியுறுத்தியிருந்தார்.

ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் அல்லது துடுப்பாட்டப் பயிற்சியாளர் பொறுப்புக்கு பொண்டிங்கின் பெயர் அண்மைக்காலமாக அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆஸியே தொடரை கைப்பற்றும்; பொண்டிங்கின் நம்பிக்கை இது!

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணியே கைப்பற்றும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.


ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

கோக்லி நன்றாக விளையாடக்கூடியவர் என்பதை மறுப்பதில்லை. ஆனால், கவாஜா ஆஸ்திரேலியாவில் சிறப்பாக விளையாடிப் பல சாதனைகளைச் செய்துள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று நினைக்கவில்லை. எப்படி இருந்தாலும், ஆஸ்திரேலியாவில் உள்ள சூழலுக்கு ஏற்றால்போல் நன்றாக விளையாடக்கூடியவர் கவாஜா.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதிகமான ஓட்டங்களைக் குவித்து, தொடர்நாயகன் விருதைக் கைப்பற்றும் வீரராக கவாஜா இருப்பார். கவாயா அளவுக்குக் கோக்லி அதிகமான ஓட்டங்களைக் குவிப்பார் என்று நினைக்கவில்லை. கவாஜாவின் மீது நம்பிக்கை வைத்துத்தான் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான சுற்றுப் பயணத்துக்குத் தேர்வாளர்கள் அவரைத் தேர்வு செய்தனர்.

அங்கு கவாஜா சிறப்பாகச் செயல்பட்டார். அதே நம்பிக்கை இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் கவாஜா மீது வைத்துள்ளார்கள், அவர் சிறப்பாகச் செயல்படுவார். நிச்சயம் டெஸ்ட் தொடரில் விராட் கோக்லியை கவாயா தோற்கடிப்பார் என்று பொண்டிங் மேலும் தெரிவித்தார். (ம)



நாளை
அகரம் கல்வி நிலையம்
(காங்கேசன் துறைச் சாலை)
மல்லாகம் கொக்குவில்

புதிய கல்வியாண்டு - 2019

தமிழ், ஆங்கில மொழி மூலமான
தரம் 6 தொடக்கம் 11 வரையான
அனைத்து வகுப்புக்களும் ஆரம்பம்.

02-12-2018 ஞாயிற்றுக்கிழமை

★ தரம் 9,10,11 ⟷ காலை 6.20 மணிக்கும்
★ தரம் 8 ⟷ பி.ப 1.00 மணிக்கும்
★ தரம் 6,7 ⟷ பி.ப 1.50 மணிக்கும்
ஆரம்பமாகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# பங்களாதேஷ் அணி நிதானமான ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி 5 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷிக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றேயாகவேண்டும் என்ற நெருக்கடி உள்ள நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக இஸ்லாம் மற்றும் சர்கா். 19 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் சர்கர். இஸ்லாம் ஹக்கியூ இணைந்து தொடர்ந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 29 ஓட்டங்களுடன் ஹக்கியூ ஆட்டமிழக்க மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் இஸ்லாம். 29 ஓட்டங்களுடன் மிதுனை போல்ட் முறையில் வீழ்த்தினார் பிஸ்கூ. 76 ஓட்டங்களுடன் இஸ்லாமின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. மத்திய வரிசையில் சகிப் அல் ஹசன் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கினார் மகமதுல்லா. இருவரும் தொடர்ந்து நீண்டு நிலைத்தனர். நாள் முடிவில் பங்களாதேஷ் அணி 5 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சகிப் அல் ஹசன் 55 ஓட்டங்களுடனும், மகமதுல்லா 31 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

நியத ஜய
நியதத ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம்: 724 வர்ணம்: நீலம்
திகதி: 2018.11.30
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
07 20 29 51 I
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 18,679,164/-
தொலைபேசி: 0112 333 546 - 47 web: www.dlb.lk

அருள் மற்ஸ் அக்கடமி
ARUL MATHS Academy
இல.41, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்
A.M.A
புதிய கல்வியாண்டு 2019
(தரம் 06 முதல் O/L வரை)
புதிய அனுமதிகள் இன்று (01.12.2018)
சனிக்கிழமை தொடக்கம் காலை 9.00
மணியிலிருந்து வழங்கப்படும்.
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் -
03.12.2018 திங்கள் மாலை 3.00 மணி
077 038 1304
(CS/21511)(11,17)

றோயல் அக்கடமி
நாவலர் வீதி, நல்லூர். (இரு இடங்களிலும்) அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 06
தமிழ் மொழி மூலம்
English Medium
ஆரம்பம்
05.12.2018 புதன்கிழமை
யாழ் றோயல் - காலை 6.30 மணி
நல்லூர் றோயல் - காலை 7.30 மணி
குறிப்பு:
- விசேடமாக நடைமுறைப்படுத்தப்படும் புலமைப்பரிசில் சலுகைகள் வழங்கப்படும்.
- சிங்கள, கணினி வகுப்புக்கள்.
- பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று, தொடர்ந்து வகுப்புக்கள் ஆரம்பமாகும்.
- அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம்
நமக்கென உளதைப் பிறர்க்கும் கொடுப்போம்...

உடன் விநியோகம்
அழைத்தவுடன் உங்கள் வீட்டுக்கு
சமையல் எரிவாயு கொண்டு வந்து
தரப்படும்.
(CS 21450)(04.17)
ஒரு Miss Call - 072 950 0062

31 ஆவது வருட கல்விச் சேவையில்
யாழ். நகரின் No. 1 கல்வி நிறுவனம்
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
தரம் 1 முதல் O/L வரை
புதிய கல்வியாண்டு - 2019
தமிழ், ஆங்கில மொழிமூல
வகுப்புகள் ஆரம்பம்
02.12.2018 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு 077 459 8440

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
22 . 03 . 1926



இறைவன் அடியில்
01 . 11 . 2018

## அமரர் தம்பிஐயா இரட்ணசபாபதி

**(சின்னத்தம்பி)**

கடந்த 01.11.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.12.2018) சனிக்கிழமையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (02.12.2018) ஞாயிற்றுக்கிழமையும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், மலர் வளையம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசியூடாகவும், மின்னஞ்சல் ஊடாகவும் வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.93, பலாலி வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மலிவு விற்பனை




இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911 / 076 821 9418 / 077 358 3879

## இலங்கையின் 9 மாவட்டங்களுக்கு ரூ.40 மில்லியன் பெறுமதி வாய்ந்த வெள்ள நிவாரண உதவிகளை வழங்கியுள்ள லைக்காவின் ஞானம் அறக்கட்டளை



லைக்காவின் ஞானம் அறக்கட்டளை (Lyca's Gnanam Foundation) மூலம் இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ரூ.40 மில்லியன் பெறுமதி வாய்ந்த வெள்ள நிவாரண உதவிகள் இன்று (நவம்பர் 28) விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளை மூலமாக அனுராதபுரம், புத்தளம், மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக இலங்கையின் 9 பிரதேசங்களுக்கு 16 லொறிகளில் உலர் உணவுகள், தண்ணீர், தகரத்தாள்கள், சிறுவர்களுக்கான சீருடைகள் மற்றும் புத்தகங்கள் அடங்கிய வெள்ள நிவாரண உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஞானம் அறக்கட்டளை என்பது 2010 ஆம் ஆண்டில் அதன் ஸ்தாபகர்களான திரு. சுபாஸ்கரன் அல்லிராஜா மற்றும் திருமதி.பிரேமா சுபாஸ்கரன் ஆகியோரினால் தமது தாயாரான ஞானாம்பிகை அல்லிராஜா அவர்களின் பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட தர்மஸ்தாபனமாக திகழ்கிறது.

இந்த அறக்கட்டளை மூலம் காலநிலை மாற்றம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இடம்பெயர்ந்த சமூகங்களுக்கு சுகாதார பராமரிப்பு, கல்வி, பயிற்சி மற்றும் வீடமைப்பு போன்றவற்றை வழங்குவதனூடாக தன்னிறைவு மற்றும் நிலைபேறான வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இலங்கை, இந்தியா, சூடான், டன்சானியா, ரோமானியா, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இந்த அறக்கட்டளையின் உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பணிகள், நிலை பேறான மற்றும் தன்னிறைவுள்ள சமூகங்களை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்துகிறது. இந்த அறக்கட்டளையானது, வவுனி யாவில் அகதி முகாம்களில் பல வருடங்கள் வாழ்ந்தவர்களுக்கு அண்மையில 150 வீடுகளை நிர்மாணித்திருந்ததுடன், வட மாகாணத்திலுள்ள சிறுவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி கல்விசார்ந்த உதவிகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(C/32179)(10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.